2. வீரப்ப ஐயாவின் சைவத் தொண்டின் ஒரு பகுதியாக திருவண்ணாமலையில் மூலவர் உண்ணாமலை அம்மனுக்கு ஒற்றைக்கல் பெரிய வைர மூக்குத்தி அணிவித்து மகிழ்ந்திருக்கிறார்கள். 2019-20 செட்டிநாடு மாத இதழில் திருவண்ணாமலையில் நகரத்தார் வைரத்திரு ஆபரணத் திருப்பணி பற்றிய கட்டுரையில் இது குறிப்பிடப் பட்டுள்ளது.

3. நற்சாந்துபட்டியின் ஆதிமூர்த்தி தற்போதுள்ள சின்ன ஊரணிப்பிள்ளையார். 1880 காலக் கட்டங்களில் கல்கத்தாவில் வியாபாரம் செய்துவந்த வங்காளம் காடப்ப செட்டியார் போன்ற நமது ஊர் நகரத்தார் குடும்பங்களின் முயற்சியால் கங்கைக்கரையில் கிடைக்கும் ஆதிலிங்கம் கொண்டு வரப்பட்டு அதை இங்கு ஆவுடையாரில் சேர்த்து அம்பாள் கணபதி சிலைகளுடன் சிவன்கோவில் உருவாக்குவதில் வீரப்ப ஐயாவின் முயற்சியும் உண்டு. நற்சாந்துபட்டியில் நகரத்தார் புள்ளிகள் பெருக ஆரம்பித்தபின் சிவபெருமானுக்கு ஒரு பெரிய கற்கோவில் எழுப்ப வேண்டும் என்ற எண்ணம் எழுந்தபோது, மேற்படி மூர்த்தங்கள் சிறியவையாக இருந்ததால் அவை தற்போதைய நகர சிவன் கோவிலில் காசிவிஸ்வனாதராகவும், விசாலாட்சி அம்பாளாகவும் உள்பிரகாரத்தில் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

4. புதிய சிவன் கோவில் கட்ட நிலம் தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு, நமது நகரத்தார் பிரதிநிதியாக வீரப்ப ஐயா அவர்கள் புதுக்கோட்டை மன்னரிடம் பேசி நற்சாந்துபட்டியின் ஈசான மூலையில் 17.02.1903 அரசாணை மூலம் கோவில் தர்மத்திற்கான நிலத்தை கவுல் மூலம் பெற்றுத் தந்திருக்கிறார்கள்.

5. மேற்கொண்டு, கோவில் பணிகள் தொய்வின்றி நடக்க, நமது ஊர் மற்ற நகரத்தார்களுடன் இணைந்து 02.04.1903 பத்திரத்தின் மூலம் சித்திரவயல் கிராமத்தை வாங்கியதில் வீரப்ப ஐயா முக்கியப் பங்கு வகித்திருக்கிறார்.

6. இறுதியாக, நற்சாந்துபட்டியைச் சுற்றியுள்ள நகரத்தார் பகுதிகளில் விஷ்ணு ஆலயம் இல்லாத குறையைப் போக்க, நமது ஊரில் திருமாலுக்கு என்று தனி ஆலயம் அமைக்க எண்ணினார். அதற்காக சமஸ்தானத்தில் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி அவர் நில ஒதுக்கீடு கேட்கவில்லை. மாறாக நற்சாந்துபட்டியின் குபேர மூலையில் தன் சொந்த செலவில் 01.09.1900, 07.08.1906 மற்றும் 15.09.1906 தேதியிட்ட பத்திரங்கள் மூலம் சுமார் 7.6 ஏக்கர் புஞ்சை நிலங்களை விலைக்கு வாங்கி பள்ளமான மேற்படி நிலத்தைச் சுற்றி செம்பாரங்கல் கட்டுக் கட்டி, அதன் மேல் விஷ்ணுவுக்கு ஸ்ரீவீரராகவப் பெருமாள் என்ற திருநாமத்துடன் ஸ்ரீ தேவி பூதேவி சமேதராகவும், ஸ்ரீ ராம பக்த ஆஞ்சநேயருக்கென்று தனி சன்னதியும்,

With Best Compliments From





SRI MURUGAN MEDICAL AGENCIES

No. 420, Brough Road,

Opp. Kalaimagal Kalvi Nilayam

ERODE - 638 001.

www.npnagarathar.com

மேற்படி பெருமாள் கோயிலுக்கென்று ஒரு திருக்குளம், நந்தவனம் அமைத்து, 1906ல் பக்தர்கள் வழிபாட்டுக்குத் திறந்து வைத்தார்கள்.

7. மேற்படி ஆலயத்தில், நவராத்திரி உற்சவ முடிவில் ஸ்ரீ வீரராகவப் பெருமாள், நகர சிவன் கோவில் சிவகாமி அம்பாளுடன் இணைந்து அம்புபோட்டு, விஜயதசமியை நிறைவு செய்ய, நற்சாந்துபட்டி கிழக்கே சுமார் 2.25 ஏக்கர் நிலப்பரப்பை வாங்கியதற்கான பட்டாவும் இவர்கள் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

8. மேற்படி கோயில் வளாகத்தில் நகரத்தார் ஆண் பெண் கல்விக்காக, ஒரு பள்ளியும் 1900 – 1945 காலகட்டம் வரை செயல்பட்டு வந்தது. அந்த செய்தியை உறுதிப்படுத்தும் நிழற்படம் நமது ஊர் ந.மெ.அவர்கள் வீட்டில் உள்ளது.

ஒரு நடுத்தர குடும்பத்தில் பிறந்து, தன் கடின உழைப்பால் முன்னேறிய எங்கள் வீரப்ப ஐயா ஆனந்த வருடம் மார்கழி மாதம் 28ம் தேதி (12.01.1915) அன்று சிவபதவி அடைந்தார்கள். அந்நிலையில் அவர்தம் வாரிசுகளுக்காக புதுக்கோட்டை, கல்கத்தா, பினாங்கு, பேறா, கிட்டா மற்றும் மைடானிலும் உள்ள தாவர சங்கம சொத்துக்களையும், மதராஸ், மதுரை, நாகப்பட்டினம், பினாங்கு மற்றும் மைடானிலும் பணப்பரிவர்த்தனை மற்றும் கொடுக்கல் வாங்கல் கடைகளையும் விட்டுச் சென்றார்கள். அவை காலப்போக்கில் எங்களை விட்டு அகன்றன. 02.01.1915 தனது உயிலின் மூலம் அவர்கள் இட்ட கட்டளை வாசகம் " நான் விட்டுச் சென்ற மேற்படி தர்மங்களை மேல்கண்ட என் பௌத்திரர்கள் அபிவிருத்தி செய்யலாமே தவிர எக்காரணத்தைக் கொண்டும் குறைக்கக் கூடாது" என்பதுதான். நிலையான சொத்துக்களாக வீரப்ப ஐயா எங்களுக்கு விட்டுச் சென்றது மலையக்கோவில் தர்மமும் மற்றும் ஸ்ரீ வீரராகவப் பெருமாள் ஆலய நிர்வாக தர்மமும் ஆகும். அவரது கருணையால் 5வது தலைமுறையில் வந்த நாங்கள் மேற்படி தர்மங்களைத் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

1928ல் நமது ஊர் நகரத்தார்களின் தீவிர முயற்சியினால் நமது ஊர்ச் சிவன் கோவில் நிர்மாணிக்கப்பட்டது. நான்கு தலைமுறைகளுக்குப் பிறகு, இன்றைய நகரத்தார்களின் கூட்டு முயற்சியினால் மேற்படி கோவிலில் கம்பீரமாக ராஜகோபுரம் கட்டி முடிக்கப்பட்டு குடமுழுக்கு விழா 24.02.2021 அன்று சிறப்புடன் நடந்தேறியது. இந்த நல்ல நாளில் சிவத் தொண்டில் ஈடுபட்டு வரும் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எல்லாநலமும் வளமும் கிடைக்க எங்கள் வீரப்ப ஐயாவின் திருவடி பணிந்து வணங்குகிறோம்.

" ஊரோரம் முருகனுக்கு உயர்ந்ததொரு மலைக் கோயில்
வீரராகவர்க்கோ விளங்கு புகழ்த் தரைக்கோயில்
வீரப்பர் வாரிசுகள் விளக்கும் வகைக்கட்டி வைத்தார்
சீராரும் அவர் திருவடியைத் தெண்டனிட்டு போற்றுவமே !!!"

தொகுப்பு =: வீ.அ.மு.அ.முத்துராமன் செட்டியார் அவர்கள் மற்றும்
வீ.மு.வீரராகவன் அவர்கள்.

With Best Compliments From

RTN. V.S. PALANIVEL

Mob.: 99944 75557 0424 - 2256772 / 2267776



Sri Meenatchi Medical Agencies

S.P. Pharma

Meenatchi Complex 39, 39/1, Periyanna Street, ERODE 638 001.
meenatchimed@gmail.com Web: www.srimeenatchi.com

வாழும் வழிகள் பதினாறு

முனைவர் மா. மாதரி,
நற்சாந்துபட்டி

அபிராமப் பட்டர்.

எல்லோரும் நலம் வாழ ஆசைப்பட்டார் என்பதே அவரின் சிறப்பு. தெள்ளத் தெளிவாகத் தம் உள்ளக்கிடக்கைகளை இறைஞ்சுதல் முறையாலே இறைவியின் முன் வைத்தார். கலகம் ஏதும் இல்லாமல் அமைதி வழியில் இந்த உலகம் உய்வதற்கான வழியினைக் காட்டச் சொல்லி பட்டரவர் அபிராமியிடம் வைத்திட்ட கோரிக்கைகள் பதினாறு. சொந்த நலன் வேண்டி நேரடியாய் யாரும், எந்த மனுவும் இறைவியிடம் வைத்தால் அது சுயநலம். ஆனால் இங்கே பட்டர் வைத்திட்ட வேண்டுதல் பதினாறும் தானுயர வேண்டும் என்பதற்காக எழுந்தவை அல்ல. மானுடம் பொய்த்துப் போகாமல் இருப்பதற்காக, மனிதம் மரித்துப் போகாமல் இருப்பதற்காக, கருணையின் வடிவாம் அபிராமி அன்னையவள் தருவாள் என்றெண்ணியவர் நமக்காய்க் கேட்ட வரங்கள்தான் இந்தப் பதினாறு. பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்திடுக என்று பெரியோர் வாழ்த்துகிறார்களே அதுவும் இதுதான்.

கலையாத கல்வி
குறையாத வயது
கபடு வாராத நட்பு
கன்றாத வளமை
குன்றாத இளமை
கழுபிணி இலாத உடல்
சலியாத மனம்
அன்பு அகலாத மனைவி
தவறாத சந்தானம்
தாழாத கீர்த்தி
மாறாத வார்த்தை
தடைகள் வாராத கொடை
தொலையாத நிதியம்
கோணாத கோல்
துன்பம் இலாத வாழ்வு
துய்ய நின் பாதத்தில் அன்பு.

இன்றைய காலச் சூழலில், இத்தனை வளங்களும், மொத்தமாய் யாரிடமாவது இருக்கிறதா என்று ஆராய்ந்தால் நிச்சயமாய் இல்லையென்பதுதான் பதிலாய் வரும். ஏன் இல்லாமற் போனது என்பதற்கான முழுமுதற்காரணம் அன்பின் ஆளுமை இல்லாமற்போனதுதான். அறம் வளர்த்த நாடு நம்நாடு, கல்வித் திறம் செறிந்த நாடு நம்நாடு என்றெல்லாம் பழம் பெருமை பேசுதல் பயன் தராது. படிப்பதற்கு அறிவு கட்டாயம் என்பது பழைய வழக்கு. படிப்பதற்குப் பணம் கட்டாயம் என்பது புதிய வழக்கு. இன்றைக்குக் காசிருந்தால்தான் தரமான கல்வியே சாத்தியம். இந்த நிலையில் கலையாத கல்வி பெறும் நிலையை எந்த வழியில் யாரும் தர முடியாது என்கிற போது வேண்டிய வரம் தரும் அன்னை அபிராமி யாவர்க்குமதை ஈண்டிங்கே தரவேண்டும் என்பதுதான் முதல் கோரிக்கை.

குறையாத வயது வேண்டுமென்றால் மனத்தளவில் நிறைவாய் இருக்கப் பழகுதல் ஒன்றே வழி. கபடு வாராத நட்பின் அருமை என்னவென யாருக்கும் தெரியாது. காரணம் காணுமிடமெல்லாம் விரவிக் கிடப்பது விலக்கி ஒதுக்கித் தள்ளப்பட வேண்டிய வேண்டாத நட்பு. கன்றாத வளமை நிலை குன்றாமல் வரவேண்டுமானால் அன்றாடம் சந்திக்கும் வறுமை நிலை போகவேண்டும்.

பிஞ்சிலே வெம்பிக் கீழே விழுகின்ற மாதிரி இருபதிலே அறுபதாய்த் தோன்றும் முதுமைத் தோற்றம். இதுதான் இன்றைய இளைஞர்களின் புறத்தோற்றம். இளமை இன்றைக்கு எங்கும் ஊஞ்சலில் ஆடவில்லை. மாறாக சஞ்சலத்தில் மாட்டிக்கொண்டு தவிக்கிறது. இளமையே தற்காலம் ஏமாற்றத்தில் உறைந்து கிடக்க, குன்றாத இளமை என்கின்ற மாற்றம் அன்னையவள் மட்டும்தான் தரமுடியும்.

உணவே மருந்து என்ற பழைய சொல்லாக்கம் மருவிப்போய், பிணியே உடம்பு என்றாகிப்போன இந்தக் காலகட்டத்தில் கழுபிணி இலாத உடல் கிடைத்துவிட்டால் உண்மையில் அதுதான் பெரும்பேறு.

சலித்துச் சலித்துச் சல்லடையாகிப் போன வாழ்க்கை. வெறுத்து வெறுத்து வீணாய்ப் போன வாழ்வின் நாட்கள். இருந்தாலும் வாழ்க்கைச் சக்கரம் சுற்றத்தான் செய்கிறது. காரணம் சலியாத மனம்.

இல்லவள் அன்பு அகலா மனைவியாய் இருந்துவிட்டால் அந்த இல்வாழ்வில் இல்லாதது என்று சொல்ல ஒன்றுமே இருக்காது. அதேசமயம், இல்லவள் மாட்சிமை அற்றுப் போனால் இல்வாழ்வின் இனிமையே இற்றுப்போகும்.

பெற்றெடுத்த பிள்ளைகள் பெற்றோரை உற்றோராய்ப் பார்க்காமல் மற்றோராய்ப் பார்க்கும் காலமிது. வரம் வேண்டிப் பிள்ளைகளைப் பெற்றது அந்தக்காலம். பெற்றோரே வேண்டாமெனப் பிள்ளைகள் கல்லாய்ப் போனது இந்தக்காலம். இந்தச் சூழலில் தாய்தந்தையரைத் தாங்கிப் பிடிக்கிற தவறாத சந்தானம் கிடைத்தால் அதுதான் மறுமலர்ச்சிக்கான ஆரம்பம்.

மாறாத வார்த்தை. அன்றைக்குச் சத்தியமாய் எங்கும் நிறைந்திருந்த வார்த்தையிது. இன்றைக்கு அது மறைந்து போய்க் கிடப்பதுதான் சாபக்கேடு.

தடைகள் வாராத கொடை. கொடை செய்ய நினைக்கும் மனதுக்காரனிடம் தங்குதடையின்றிப் பணம் இல்லாதது தடை. முடையின்றிப் பணத்தைக் கொண்டிருக்கும் பணக்காரனுக்கு கொடை செய்யும் மனமில்லாமல் போனது தடை. இந்த இரண்டு தடைகளும் மாறிப்போனால் தடைகள் வாராத கொடைகள் தாராளமாய் நடக்கும்.

மன்னர்கால ஆட்சியின் மாட்சியை அன்றைக்கு அளந்தது அவர்களின் வளையாத செங்கோல். இன்றைய ஆட்சியாளர்களுக்கு நேர்மைதான் வளையாத கோல். அதுதான் இன்றைக்கு வேண்டிய நிகழ்காலச் செங்கோல். என்ன இடர் வந்தாலும் மக்களைக் காக்கும் கோணாத கோல்.

இன்பம் இல்லாத வாழ்வு எப்படியிருக்கும் எனத் தெரியாத நிலையும், துன்பமில்லா வாழ்வின் மகத்துவம் புரியாத நிலையும், இரண்டுமே சொல்லவரும் கருத்து ஒன்றுதான். துன்பமிலா வாழ்வு கிடைத்தால் வாழ்வின் வளத்துக்கது நன்றுதான்.

இறுதியாக அபிராமப்பட்டர் அன்னையவளிடம் உறுதியாகக் கேட்பது ஒன்றே ஒன்றுதான். அதுதான் “துய்ய நின் பாதத்தில் அன்பு”.


காரணம் அவளது அன்பு மட்டும் ஒருசேரக் கிடைத்திட்டால்,
மற்ற எல்லாமே அதற்குள் அடக்கம் என்பதனால்.
கடைக்கண் பார்வையதை அன்னையவள் தந்துவிட்டால்
தடைகளாய் வந்து நிற்கும் முள்வேலிகள் தகர்ந்து போகும்.
மானுடம் தழைக்குமம்மா என்ற கனவும் நனவாகும்.



குடமுழுக்கு விழா ஆனந்தமாக
நடைபெற நல் வாழ்த்துக்கள்

PLM. MUTHIAH CHETTIAR BANK

New No. 10, Sannathi Street,
Papanaa m - 614 205, Thanjau r (Dt.)



அன்பிற்குமுண்டோ அடைக்கும் தாழ்

வெ.வ. வெள்ளையப்பன்,
நற்சாந்துபட்டி

அன்புதனைப் பற்றி,
அன்பின் ஆளுமைதனைப் பற்றி,
அன்புடைச் செயல்கள்
என்புதோல் போர்த்த இந்த உடம்புக்குள்
என்னவெல்லாம் மாற்றம் செய்யும் என்பதனைப் பற்றி,
சொல்லாத இலக்கியங்களே தமிழில் இல்லையெனச் சொல்லலாம்.

“ஆக்குதல் என்றால் அறத்தை ஆக்குதல் வேண்டும்.
போக்குதல் என்றால் கோபத்தைப் போக்குதல் வேண்டும்.
நோக்குதல் என்றால் அறிவை நோக்குதல் வேண்டும்.
காக்குதல் என்றால் அன்பு நெறிகளைக் காத்திடல் வேண்டும்“
இந்த வரிகள்தான் யசோதரகாவியம் காட்டும் எழுத்தோவியம்.
உலக மாந்தர் உய்வதற்கு வழி காட்டும் கருத்தோவியம்.
அன்பை மீறி ஏதுமில்லை எனக்காட்டும் சொல்லோவியம்.
இவையெல்லாம் வாழ்விற்கு வழிகாட்டும் அன்புத் தத்துவங்கள்.
தாழ்வுதரும் அயர்வதனைத் தடுத்தாளும் சத்தியங்கள்.
வாட்டமதைப் போக்குகின்ற வளமான இவ்வரிகள்
நாட்டமுடன் நாமெல்லாம் கடைப்பிடித்தால் நாடே நலமாகும்.

அன்பு காட்டுதலில் இரண்டு வகை. ஒன்று உதட்டளவு. அது காரியவாதிகள் கைகாட்டிப் பிழைக்கப் பயன்படுத்தும் காரணமில்லாச் செயற்கைத் தோற்றம். இன்னொன்று வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாதிரி, உள்ளத்தின் உயர்வு காட்டும் கள்ளத்தனம் இல்லாத உயர்வான அன்பு. அது ஒன்றுதான் உண்மையான அன்பு.

கீர்த்தி என்பது தடிகொண்டு அடித்துப் பழுக்கவைக்கும் பழம் அல்ல. அது தானாய்க் கனியும் பழம். தேனாய் இனிக்கும் பழம். கீர்த்தி ஒருவருக்கு வருகிற வாசல் நேர்வழி வாசல். ஒளிவு மறைவுகளுக்கு இடம் தராத வாசல். அன்புள்ளம் ஒன்றுதான் கீர்த்திக்கு அச்சாரம். அன்பில்லாமற் போனால் கீர்த்தியும் இல்லாமற்

போகும். சிந்தித்தால், இந்த உலகமே அன்புக்குள் அடக்கம் என்ற சிந்தனை தெரிய வரும். அன்பற்ற உலகம் இயங்கினாலது மனித இயக்கத்தையே முடக்கிப் போட்டுவிடும் என்பதும் புரியவரும். அன்பிலா உலகம் இயற்கைக்கு முரண் என்றும் தெரியவரும்.
அன்பு ஒன்றுதான்.
ஆனால் அதில்தான் எத்தனை வகைகள்.
முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் வரிகளில் எடுத்துச் சொன்னால் அது புரியும்.

கணவன் தன் மனைவியிடம் வைக்கும் அன்புக்குப் பெயர் காதல்.
தாய் தன் குழந்தையிடம் வைக்கும் அன்புக்குப் பெயர் பாசம்.
உறவினர்களிடத்தில் நாம் வைக்கும் அன்புக்குப் பெயர் பட்சம்.
ஏழைகளிடத்து வைக்கிற அன்புக்குப் பெயர் இரக்கம்.
ஜீவ சந்துக்களிடம் வைக்கிற அன்புக்குப் பெயர் காருண்யம்.
கடவுளிடம் வைக்கும் அன்புக்குப் பெயர் பக்தி.
நண்பர்களிடத்தில் வைக்கும் அன்புக்குப் பெயர் நேசம்.
ஊழியன் எஜமானனிடம் காட்டும் அன்புக்குப் பெயர் விசுவாசம்.
தேசத்தின் மேல் நாம் காட்டும் அன்புக்குப் பெயர் அபிமானம்.

அன்பைப் புறக்கணித்தால் அர்ப்பணிப்பு வராது.
அன்புடன் செயல்களைச் செய்ய முடிந்தவன் சாதிக்கிறான்.
செய்ய முடியாதவன் போதிக்கிறான்.
அன்புடன் செயலாற்ற முடிந்தவனுக்கு எல்லாமே படிக்கற்கள்.
செய்ய முடியாதவனுக்கு எல்லாமே தடைக் கற்கள்.
செய்ய முடிந்தவன் அன்புச் செயல்களை எந்நாளும்
செய்துகொண்டே இருப்பான்.
செய்ய முடியாதவன் மற்றவன் செய்கின்ற
செயல்களை வேடிக்கை பார்த்துக் கொண்டே இருப்பான்.
செய்ய முடிந்தவன் அன்பிலாதன செய்யவே மாட்டான்.
செய்ய முடியாதவன் செய்யத் தகுந்ததைக்கூடச்
செய்ய யோசிப்பான்.

விதைக்கப் படுகிற செயல்கள் நல்லவைகளாக இருந்தால்,
அன்புள்ளவைகளாக இருந்தால், நல்ல பழக்கங்கள் உருவாகும்.
நல்ல பழக்கங்கள் விதைக்கப்படுமானால்
அவை உயர்வான எண்ணங்களை உருவாக்கித் தரும்.
நல்ல எண்ணங்கள் விதைக்கப்படுமானால்
அவை வளமிக்க வருங்காலத்தை உருவாக்கித் தரும்.

போற்றுதற்குரிய இந்தக் கூற்று
ஏற்றுக் கொள்ளப்படுமானால் சமுதாயமே அன்புமயமாகும்.

தர்மம் குலைந்திடாமல் இந்த நிலவுலகில் அறம் வளர்ப்பது அன்பு.
இல்லற அறம் பெருக்கித் திறம்காட்டும் புகழ்மிக்கது அன்பு.
எந்த மொழி இலக்கியமானாலும் அதன் கருவாய் இருப்பது அன்பு.
பணத்தைக் காட்டிப் பண்டமாற்று செய்ய முடியாதது அன்பு.
நெருப்பினை அணைக்கும் நீரைப் போல,
வெறுப்பினை வெல்ல உதவும் ஒரேவழி அன்பு.
நல்ல சிந்தனைகள் மனதை விட்டகலா வண்ணம் காப்பதும் அன்பு.
அதனால்தான் அன்பின் வழியது உயிர்நிலை என்றார்கள்.
அன்புக்குத் தடை போட யாராலும் முடியாதென்ற காரணத்தால்
அன்பிற்குமுண்டோ அடைக்கும் தாழ் என்றார்கள்.
உலகத்தின் இயக்கமே அன்பின் வழியது மட்டும்தான் என்றார்கள்.

வெறுப்பை வெறுப்பால் வெல்ல முடியாது என்றது புத்தம்.
இதயத்தில் வலுவிருந்தால் சுண்டெலியால்கூட யானையைத் தூக்கிவிட முடியும்.
அகத்தில் அன்பு கொலுவிருந்தால் இந்த உலகில் எதையும் சாதித்துவிட முடியும்.



குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற
நல் வாழ்த்துக்கள்

பழநியப்பா
சிட்பண்ட்ஸ் (பி) லிட்.,

Cell : 90926 34748 Ph: (04374) 222678

SERVICE IS OUR MOTTO



வாடிக்கையாளர் நல்ஆதரவுடன் 32 ஆண்டுகள்
நன்மதிப்பை பெற்ற நிறுவனம்.

நிர்வாக அலுவலகம் :
24/36, சன்னதி தெரு, பாபநாசம் 614 205, தஞ்சை மாவட்டம்.

நம்ம ஊரு

பெரி.பெ.ராம. கல்யாணசுந்தரம்
நற்சாந்துபட்டி

திருமலையாம் மலையக் கோவில்
சமுத்திரமாய் நகரத்தார் வாழும் ஊராம்

"திருமலை சமுத்திரம்"

திருமெய்யம் கோட்டை கட்ட நல்சாந்து
வணிகம் செய்து நற்சான்று பெற்றதனால்
ஊர்ப் பெயரை 'நற்சாந்துபட்டி' யென மாற்றினரே அன்று !
அனைவருமே சான்றோர் என நிரூபித்து
நிலை நிறுத்தினரே அந்தப் பேரை இன்று!
ஓடி ஓடி பணிசெய்வார்! ஓயாமல் உழைத்திடுவார்!
அசலூரில் பொருளீட்டி சிக்கனமாய் வாழ்ந்திடுவார்!
அத்தனையும் கொண்டு வந்து ஊருக்கே செலவழிப்பார்!
பசியே அறியாது பகலென்ன இரவென்ன
அறுசுவையாய் உணவளிப்பார்!
கல்லாரே இல்லாராக்க கல்வி தனை அளித்திட்டார்!
நோயில்லா வாழ்வு வாழ மருத்துவமனை அமைத்திட்டார்!
படித்தவரை பண்பாளராக்கிட படிப்பகம் அமைத்திட்டார்!
பயமறியா வாழ்வு வாழ பெட்டகம் தான் அமைத்திட்டார்!
அத்தனைக்கும் முத்தாய்ப்பாய்
ஆண்டவன் அருள்தனையே பெற வேண்டி
ஆலயங்கள் பல அமைத்திட்டார்!
இன்று குடமுழுக்கு கண்டிடும் சிவகாமி சிதம்பரேஸ்வரர் அருளால் நாமெல்லாம் நலமோடும் வளமோடும் நிறைவாக வாழ வேண்டிடுவோம் இறையருளை!

நற்சாந்துபட்டி நகரத்தார் புள்ளிக் கணக்கு விவரம்

(31-03-2021 அன்றைய தேதிக்கு எடுக்கப்பட்ட கணக்கு)

கோவில்	மொத்தப் புள்ளிகள்
1. இலுப்பைக்குடி கோவில்	198
2. வைரவன் கோவில்	158
3. இளையாத்தங்குடி கோவில்	157
4. பிள்ளையார்பட்டி கோவில்	242
5. மாத்தூர் கோவில்	99
நமது ஊர் மொத்தப் புள்ளிகள்	854



தஞ்சை பெரிய கோயில்

மு. நல்லகருப்பன்
நற்சாந்துபட்டி

வியத்தகு கட்டுமானம்

பொறியாளர் ஒருவர் மூலம் நாம் பெற்ற, தஞ்சை பெரியகோவில் கட்டுமானம் பற்றிய ஒரு தகவல்!

கோபுர உச்சியை நன்கு உற்று நோக்குங்கள். பிரம்மமந்திர கல் எனப்படும் ஸ்தூபிக்கல் இருக்கும். இது ஒரு கல்லோ , அல்லது பல கற்களின் சேர்க்கையோ ? இதன் எடை 80 டன்.

இந்த பிரம்மமந்திர கல்லைத் தாங்கும் அந்த சதுரவடிவக் கல்லை நோக்குங்கள்... அந்தக் கல்லும் 80 டன். அந்த சதுரக் கல்லின் மேல், பக்கத்திற்கு இரண்டு நந்தியாக மொத்தம் எட்டு நந்திகள். ஒவ்வொரு நந்தியின் எடையும் 10 டன். ஆக, எட்டு நந்தியின் மொத்த எடை 80 டன்.

இந்த மூன்றும் தான் பெரிய கோவிலின் அஸ்திவாரம்! இது என்ன விந்தை எனலாம்! அஸ்திவாரம் அடியில் தானே இருக்கும்... தலைகீழான கூற்றாய் உள்ளதே... ? என்கிற சிந்தனை ஏற்படலாம்.

நாம் செங்கற்களைக் கொண்டு ஒரு வீடு கட்டும் போது, கட்டிடத்தின் உயரம்12 அடி என்றால் 8 அடிக்காவது அஸ்திவாரம் இடுவோம் அல்லவா ?

பெரியகோவில் உயரம் 216 அடி முழுக்க முழுக்க கற்களைக் கொண்டு எழுப்பப்பட்ட ஒரு பிரம்மாண்ட கற்கோவில் ஆகும். கற்களின் எடையோ மிக மிக அதிகம்.

இவ்வளவு பெரிய கோவிலுக்கு அஸ்திவாரம் எவ்வாறு அமைந்து இருக்கும் என நினைக்கிறீர்கள் ? குறைந்தது 50 அடி ஆழம், 50 அடி அகல அஸ்திவாரம் வேண்டும் .இந்த அளவு சாத்தியமே இல்லை. 50 அடி ஆழத்தில் வெறும் தண்ணீரும் புகை மண்டலமாகத்தான் இருக்கும்.

ஆனால், பெரியகோவிலின் அஸ்திவாரம் வெறும் 5 அடிதான்! நம்புகிறீர்களா ? மேலும் ஒரு வியப்பு.



DR. SHOBANA. S M.D., D.D

DERMATOLOGIST AND COSMETOLOGIST

RADIENT SKIN CLINIC

No 3, Purusottam Apts., 64, 2nd Main Road Gandhi Nagar, Adyar, Chennai - 600 020 Phone : 044 4261 8717
Mon,Tue,Thu, Fri : 10-00 am to 1-00 pm

HARLEY CLINIC

Ground floor, Rams Flat, 5, Krishnabai Street
T Nagar Chennai - 600 017
Phone : 2834 2816
Mon to Fri 7-00 pm to 9-00 pm

✱ Laser Hair removal ✱ Microdermabrasion

✱ Laser Scar Correction ✱ Cosmetic Peels

✱ Radio Surgery ✱ RF Skin tightening

இது எப்படி சாத்தியம்..? இங்குதான் நம் சோழ விஞ்ஞானிகளின் வியத்தகு அறிவியல் நம்மை சிலிர்ப்படையச் செய்கிறது.

பெரியகோவில் கட்டுமானத்தை, அதாவது கற்கள் இணைக்கப்பட்டதை, "இலகு பிணைப்பு" என்கிறார்கள்.

அதாவது ஆங்கிலத்தில் LOOSE ⓘ INT என்பார்கள். அதாவது ஒவ்வொரு கல்லையும் இணைக்கும் போது, ஒரு நூலளவு இடைவெளி விட்டு அடுக்கினார்கள்! எதற்காக..'

நமது கிராமத்தில் பயன்பட்ட கயிற்று கட்டிலை நினைவில் கொள்ளுங்கள்.

கயிறுகளின் பிணைப்பு இலகுவாகத்ததான் இருக்கும்... அதன் மேல் ஆட்கள் உட்காரும் போது, கயிறுகள் அனைத்தும் உள் வாங்கி இறுகிவிடும். கயிறுகளின் இணைப்பு பலமாகிறது.

இதன் அடிப்படைதான் பெரிய கோவில் கட்டுமானம். இலகுவாக கற்களை அடுக்கிக் கொண்டே சென்று, அதன் உச்சியில் மிக பிரம்மாண்டமான எடையை அழுத்தச் செய்வதின் மூலம், மொத்தக் கற்களும் இறுகி மிகப் பலமான இணைப்பைப் பெறுகின்றன!

இதுதான் அந்த 240 டன் எடை கொண்ட, ஸ்தூபி, சதுரக்கல் மற்றும் எட்டு நந்தி.

அஸ்திவாரம் கோவிலின் உச்சியில் இடம்பெற்ற அதிசயம் இது.

எத்தனை பூகம்பம் வந்தாலும் எந்தக் கல்லும் அசையாது. எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் நிலைபெற்று இருக்கும்!

சூரியசந்திரர் இருக்கும் வரை இக்கோவிலும் இருக்கும்! என்று நம் இராஜராஜ சோழ மன்னரின் நம்பிக்கை எந்த காலத்திலும் பொய்க்காது.



சிவனுக்கே உறவினரான செட்டியார்கள்

புலவர் கும. திருப்பதி
நற்சாந்துபட்டி

கோயிலுக்கு கூரையில்லையா ?கூப்பிடு செட்டியாரை' என்றொரு பழமொழி உண்டு. தாம் தொழில் செய்ய சென்ற இடங்களிலெல்லாம் கோயில்களும், சத்திரங்களும் கட்டி காலத்தால் அழியாத அறப்பணி ஆற்றியவர்கள் நகரத்தார்கள். சென்று தங்கிய ஊர்களிலேயே இவ்வளவு அறப்பணிகள் என்றால், சொந்த ஊரில் கேட்க வேண்டுமா ?எந்த ஊருக்குச் சென்று கிளை பரப்பினாலும், சொந்த ஊரில் வேர் பாய்ச்சி நின்றவர்கள். பிறந்த ஊரில் தான் தம் இல்ல விழாக்களை நிகழ்த்தும் பண்பாடு கொண்டவர்கள். கோயில், நந்தவனம், சத்திரம், பசுமடங்கள், பாடசாலை என அனைத்தையும் அமைத்து, இறைப்பணியை ஒரு இயக்கமாக வளர்த்தவர்கள்." கோயிலைச் சார்ந்த குடிகள். குடிகளைச் சார்ந்த கோயில் "என்ற வரைமுறைக்கு உட்பட்டு வாழ்பவர்கள். கோயில் முறையில் 'இனவழி' பிரிதல் பிற மக்களிடையே இல்லை. நகரக் கோயில்களில் புள்ளிவரி செலுத்தும் முறையும் வேறு எந்த இனத்தார்க்கும் இல்லாத பண்பாடு. வருமான வரி, நிலவரி, வீட்டு வரி,விற்பனை வரி போல, புள்ளிவரி செலுத்தி, தாம் இறைவனின் குடிகள் என்பதை நிலைநாட்டி வருபவர்கள். தாம் செய்யும் தொழிலிலும் இறைவனுக்கு பங்கு வைத்தல் நகரத்தார் பழக்கம். ஐந்தொகை கணக்கு எழுதும் போது, 'சுவாமிகள் வரவு' என்று, முதலில் இறைவனுக்கு பங்கு வைத்து, இறைவனையே தொழிலில் கூட்டாளியாக்கிக் கொள்ளும் மரபு நம்மிடையே இன்றும் உள்ளது. நம் முன்னோர்கள், இறைவனை கூட்டாளியாக மட்டுமல்ல; உறவினராகவே ஆக்கிக் கொண்டார்கள். ஆம்; அத்தகைய ஓர் அதிசய உறவை நாம் இப்போது பார்ப்போம்.

பொதுவாக நம் திருமணங்களில் பங்காளிகள், உறவினர்கள் மொய்ப்பண ஏட்டில் 'பணமெழுதும் பழக்கம் உண்டு.

அதுபோல சிவபெருமானுக்கும் உமையம்மைக்கும் நடைபெற்ற திருமணத்தில் பணமெழுதும் 'மொய்ப்பண ஏட்டில் தன் பெயரிலும் பணமெழுதச் சொல்கிறார் நம் 'பிதாமகன்' பட்டினத்தார். இதோ பட்டினத்தாரின் அப்பாடல்.

"குன்றக் கோமான் தன் திருப்பாவையை,

நீல மேனி மால் திருத்தங்கையைத்
திருமணம் புணர்ந்த ஞான்று, பெரும! நின்
தமர் பெயர் எழுதிய வரி நெடும் புத்தகத்து
என்னையும் எழுத வேண்டுவன் “
(தமர்–உறவினர்; வரி நெடும் புத்தகம்–மொய்ப்பண ஏடு.)

இப்பாடல் பட்டினத்தார் இயற்றிய ‘கோயில் நான்மணிமாலையில் (பதினோராம் திருமுறை) இடம்பெற்றுள்ளது.

மொய்ப்பண ஏட்டில் பணமெழுதும் பழக்கம் பட்டினத்தார் காலத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்து வருகிறது. அதுவும் இறைவனின் திருமணத்திலேயே அப்பழக்கத்தை பட்டினத்தார் நிலைநாட்டிக் காட்டுகிறார். அதனால் தான் இன்று வரை இறைவன் விழாக்களை நாம் நடத்துவதும், நம் விழாக்களில் இறைவனை முன்னிறுத்துவதும் தொடர்ந்து வருகிறது. நாம் இறைவனின் உறவினர்கள். நாம் இறைவனின் குடி வழி மக்கள். அதனால் தான் இறைவனின் இல்லமான கோயில்களை நாம் காப்பதும், நம் குடிகளை இறைவன் காப்பதும் பண்பாட்டு வழி உறவாகிறது.

“செட்டி மகன் கப்பலுக்கு செந்தூரான் காப்பு” என்பது நம் முன்னோரின், நம் மக்களின் நம்பிக்கையன்றோ!



With Best Compliments from

Rtn. S.L. SIVA SANKARAN

98949 95301

RICHY FURN

8-13-8B, Aiswarya Kalyanamahal Compound,

Bus Stand Road, Keelakottai, Chinnalapatti - 624 301.
Dindigul District.

E-Mail slsivasankaran@gmail.com

www.npnagarathar.com



நீதிக் கதை

திருமதி லலிதா வீரப்பன்
U.S.A

எல்லாக் குழந்தைகளுக்கும் தெரிந்த ஒரே கதை. அதுதான் பாட்டி வடை சுட்ட கதை. பாட்டியவள் அழகாய்ச் சட்டியிலே ஆக்கிப் போட்ட வடையைக் கண்டுவிட்ட காக்கை ஒன்று தன் அலகால் வடையைத் தூக்கிக்கொண்டு உயரே பறந்ததாம். பறந்த காக்கை அருகில் இருந்த மரத்தின் கிளையில் அமர்ந்ததாம். அந்தப் பக்கம் வந்த தந்திரக்கார நரி ஒன்று காக்கையைப் பாட்டுப் பாடச் சொல்லிக் கேட்டதாம்.

இந்தக் கதைக்கு இரண்டு விதமான முடிவுகள். காக்கை காகாவென்று கத்தியதால் கவ்வியிருந்த வடை கீழே விழ அதை நரி தூக்கிக்கொண்டு ஓடியதாம் – இது பழைய முடிவு.

கவ்விய வடையைக் காக்கைதன் காலுக்கடியில் பாதுகாப்பாய் வைத்துக்கொண்டு காகாவென்று கத்த நரி ஏமாந்துபோய் ஓடியதாம். இது புதிய முடிவு.



இந்தக் கதையைக் கேட்ட குழந்தையிடம் வடை சுட்டது யார் என்று ஆசிரியர் கேள்வி கேட்க யோசிக்காமல் குழந்தை பதிலைச் சொன்னது. வடை சுட்டது காக்கை என்பதுதான் அந்தப் பதில். வடை சுட்டது பாட்டி என்று சொல்வதுதான் சரியானது என்ற ஆசிரியரின் கூற்றைச் செவிமடுக்காத குழந்தை திரும்பவும் 'காக்கை தான் வடை சுட்டது ' என்று சொல்லக் குழம்பிப் போனார் ஆசிரியர். காக்கை வடையைத் திருடியது என்று சொன்னாலும் காக்கை வடையைச்

சுட்டது என்று சொன்னாலும் இரண்டும் ஒன்றுதானே என்ற விவரம் பின்னர்தான் ஆசிரியர்க்குப் புரிய வந்தது. சுடுதல் என்றால் திருடுதல் என்பது இக்காலப் பேச்சுத் தமிழாய்ப் போனதால் வந்த வினையிது. திருடுவது காக்கையின் குணம் என்ற தவறான விதையைத் தவறிக்கூடக் குழந்தைகளின் பிஞ்சு மனங்களிலே யாரும் விதைக்க வேண்டாம். காரணம் காக்கைகள் திருடுவதில்லை . இரை தேடுகின்றன. காக்கை கருப்பாய் இருப்பதைக் காரணம் காட்டி குழந்தைகள்தம் மழலைச் சிந்தனைகளைச் சிதைக்கவேண்டாம். காரணம் காக்கைக்குக் கருமைதான் இயற்கை அளித்த நிறம். அது காக்கையின் குற்றமில்லை. மனிதர்கள் பார்க்கும் பார்வையிலேதான் குற்றம்.

தரையில் இறந்து கிடப்பதைத் தன் இரையாய்க் கொண்டு பூமியைச் சுத்தப்படுத்தும் சம்பளம் வாங்காத ஆகாயத்தோட்டி. இரையைக் கண்டவுடன் கரைந்து கரைந்து தன் உறவுகளையெல்லாம் அழைத்து உண்ணுகிற பாசத்தின் பிணைப்பு. மனதின் இறுக்கம் குறைய மனிதர்கள் காக்கையிடம் கற்றுக்கொள்ள வேண்டும் நிறைய. மானுடத்துக்கு அது செய்யும் சேவை இயற்கையாய்ப் பார்த்து அதற்குக் கொடுத்த வரம். காலையில் காக்கைக்கு சோறு வைக்காமல் வேறு வேலை எதுவும் தொடங்க மாட்டார்கள் நகரத்தார் குலம் சார்ந்த பெண்மக்கள். அது அந்தக்காலம். அதற்கெல்லாம் நேரமில்லாமற் போனதுதான் இந்தக் காலம். குழந்தைகளுக்குத் தாய்மார்கள் பறவைகளைக் காட்டிப் பால்சோறு ஊட்டியது அந்தக்காலம். பால்சோறு இன்றைக்கும் இருக்கிறது. ஆனால் காட்டி ஊட்டத்தான் தாய்மார்கள் இல்லை என்றாகிப் போனது இந்தக்காலம்.

அன்று ஐநூறுக்கும் மேல் தமிழ்ப்பறவைகள் இருந்தன. அவற்றில் சில:

முக்குளிப்பான், குழாய் முக்கி, கூழைக்கடா, காகம், நீர்க்காகம், அண்டங்காக்கை, நாகணவாய்ப்புள், தூக்கணாங்குருவி, கரிச்சான், மாடப்புறா, மரகதப்புறா, கிளி, குயில், செம்போத்து, ஆந்தை, பக்கி, தையல் சிட்டு, சிட்டுக்குருவி, சில்லை ,தேன் சிட்டு, மலர்க்கொத்தி, மரங்கொத்தி, பட்டாணி, கொண்டைக்குருவி, பூங்குருவி, மீன்கொத்தி, பஞ்சரட்டை, இருவாச்சி, வானம்பாடி, குக்குறுவான், குருகு, கொக்கு, கிளுவை, நாரை, பருந்து, கழுகு, வல்லூறு, கோழி, காடை, கவுதாரி, வாத்து, அரிவாள்மூக்கன், அன்றில், உள்ளான், ஆலா, கீச்சான், மின்சிட்டு, வாலாட்டி,

இப்படி விதவிதமாய்த் தமிழகத்தில் பறந்த பறவைகள் எப்படியோ அருகிக் குறைந்து போனதுதான் அநியாயம். பார்வைக்காக ஒன்றிரண்டு ஆங்காங்கே தருகின்றன காட்சி. அத்தனை பறவைகளும் மொத்தமாய் அழிவின் விளிம்பில் என்று சொல்வதில் நமக்குக் கிடைக்கப்போவதில்லை மாட்சி. காக்கை, குருவி போன்ற இருக்கிற கொஞ்சநஞ்சப்பறவைகளையும் தொலைத்திடாமல், அவற்றுக்குத் துன்பம் இழைத்திடாமல் வாழப்பழகிக் கொண்டால் அதுதான் மானுடம் மற்ற உயிர்களுக்குத் திருப்பிச்செலுத்துகிற நன்றிக்கடன்.

ஆன்மீகச் செய்திகள்...

தொகுப்பு-**ந.மு.அ.காசி**
நற்சாந்துபட்டி

■ காசியில் பல்லிகள் இருந்தாலும் ஓலி எழுப்பாது. அங்கு கருடனும் பறப்பதில்லை.

■ கர்நாடகாவில் உள்ள மேல்கோட்டை, ஸ்ரீபெரும்புதூர், ஸ்ரீரங்கம் கோயில்களில் ராமானுஜர் வழிபாடு அவர் வாழும் காலத்திலேயே ஏற்படுத்தப்பட்டன.

■ சென்னை திருவெற்றியூர் தியாகராஜர், திருவாரூர் தியாகராஜர் கோயில்களில் சிவபெருமானின் சிலை ஒன்று போல் இருக்கும்.

■ சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் கற்பகாம்பாளைத் தரிசித்த பின்னரே சுவாமியைத் தரிசிக்க வேண்டும்.

■ காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வர் கோயிலில் அம்மன் சன்னதி கிடையாது.

■ திருவள்ளூர் மாவட்டம் நாகலாபுரத்தில் இருக்கும் வேத நாராயணப் பெருமாள் சிலை தலை முதல் இடுப்பு வரை மனித உருவமும், அதற்குக் கீழே மீன் வடிவமும் கொண்டதாகும்.

■ திருவண்ணாமலை அண்ணாமலையார் ராஜ கோபுரம் வழியாக வருவதில்லை. பக்கத்து வாசல் வழியே புறப்படுவார்.

■ தர்மபுரி மல்லிகார்ஜுன கோயிலில் உள்ள நவக்கிரக மண்டபத்தில் உள்ள இரு தூண்கள் மட்டும் அதன் அடிப்பாகம் தரையில் படாமல் நுட்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

■ தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி ஸ்ரீ அபீஷ்ட வரதர் பெருமாள் கோயிலில் நவக்கிரகங்கள் பெண்வடிவில் காட்சி அளிக்கின்றனர்.

■ விருதுநகர் மாவட்டம் சொக்கநாதன் புத்தூர் தவ நந்திகேஷ்வர் கோயிலில் நந்தீஸ்வரருக்கு கொம்பு, காதுகள் கிடையாது.

With Best Compliments from

RM. MUTHUPALANIAPPAN



LEATHER EXPORTERS

14/16, MATTUKARA VEERABADRAN STREET

PERIAMET,

CHENNAI-600 003. MOBILE 90470 39411.

www.npnagarathar.com

கலாச்சாரத்தைக் காப்போம்

வீர. கி. இளங்கோவன்
தலைமையாசிரியர் (ஓய்வு). நற்சாந்துபட்டி

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த காலத்திலேயே கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் இரு கண்களாகப் பாதுகாத்து வாழ்ந்தவர்கள் நகரத்தார். அத்தகைய கலாச்சாரமும், பண்பாடும் இன்று இரண்டு தாக்குதல்களால் காயப்பட்டுள்ளன.

முதலாவது தாக்குதல் மணமுறிவு எனப்படும் விவகாரத்து. செட்டி நாட்டின் கலாச்சார மையம் எனப்படும் தேவகோட்டை நகரில் விவாகரத்து வழக்குகள் அதிகமாக உள்ளன. மற்ற ஊர்களிலும் ஒன்று அல்லது இரண்டு காணப்படுகின்றன. விவாகரத்திற்கு காரணமாக படித்த வேலைக்குப் போகும் நம் இனப்பெண்களைக் கூறுகின்றனர். அவர்கள் மீது தவறு இல்லை. அவர்களுக்கும் நம்முடைய உயர்ந்த கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் சிறு வயது முதலே கற்பிக்கத் தவறிய பெற்றோர்கள் தான் முழுமுதற் காரணம். இனிமேலாவது பெற்றோர்கள் இந்த தவறைத் திருத்திக் கொள்ள வேண்டும். முன்பு ஆண்கள் மட்டும் வெளிநாடுகளில் வணிகம் செய்தபோது வீட்டையும் நிர்வாகம் செய்து கொண்டு பிள்ளைகளையும் பண்போடு வளர்த்தவர்கள் நம் ஆச்சிமார்கள். அந்தப் பொற்காலம் திரும்ப வேண்டும். கணவன் மட்டும் போதும், கணவன் வீட்டில் உள்ள மற்றவர்கள் தேவையில்லை எனக் கருதும் பெண்களை பெற்றவர்கள் தான் திருத்த வேண்டும். கூட்டுக்குடும்பப் பெருமைகளை எடுத்துக் கூற வேண்டும்.

இரண்டாவது தாக்குதல் பிற இனத்தவரைத் திருமணம் செய்தல். மற்ற இனத்தவர்கள் கலப்புத் திருமணம் செய்தவர்களை இனத்தை விட்டே ஒதுக்கிவைத்தார்கள். ஆனால் அவர்களும் கலப்புத் திருமணங்கள் பெருகியபோது செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். இந்தத் தவறை நம் இளைஞர்கள் பெரும்பாலும் செய்கின்றனர். பெற்றோர்களும் வேறு வழியின்றி அவர்களுக்கும் ஆதரவாக செயல்படுகின்றனர். ஒரே மகனைப் பெற்றவர்கள் இதனால் துடிதுடித்துப் போகின்றனர். இளமையில் இனக்கவர்ச்சி என்பது இயல்பான ஒன்றுதான். ஆனால் தவிர்க்க முடியாத ஒன்றல்ல. பணிபுரியும் இடத்தில் மற்ற இனப்பெண்களை விரும்பி அவர்களை பெற்றோர்கள் சம்மதத்துடன் அல்லது சம்மதம் இல்லாமல் திருமணம் செய்கின்றனர். பணிபுரியும் இடத்தில் நம் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் குலப்பெருமைகளையும் நினைவில் கொண்டு தற்காலிகமாக ஏற்படும் உணர்வுகளுக்கு இடம் கொடுக்காமல் இளைஞர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். பெற்றோர்களும் பிள்ளைகளுக்கு உரிய பருவத்தை விட்டுவிடாமல் காலா காலத்தில் திருமணம் செய்ய முயற்சி செய்வது மிகவும் அவசியம்.

இரண்டு தாக்குதல்களையும் தடுத்து நிறுத்தும் பொறுப்பு யாருக்கு உள்ளது? பிள்ளையார் நோன்பு போன்ற விழாக்களை நம் நகரத்தார் சங்கங்கள் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். அதில் தவறு இல்லை. அதே நேரத்தில் நம் இளைஞர்கள், பெண்கள் ஆகியோரிடையே கலாச்சார விழிப்புணர்வை ஏற்படுத்துவது பற்றி அவை சிந்திக்க வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் நகரத்தார் சங்கம் உள்ளது. அதில் முக்கியப் பொறுப்பு வகிக்கும் பெரியவர்கள் நம் இனத்திற்கு ஏற்பட்டுள்ள கலாச்சாரத் தாக்குதல்களைத் தடுப்பது பற்றி சிந்திக்க வேண்டும். சிந்திப்பதுடன் நின்று விடாமல் அவற்றைச் செயல் படுத்தவும் வேண்டும். நகரத்தார் சங்கங்களைத் தவிர வேறு எவரும் தனிப்பட்ட முறையில் செயல்பட இயலாது. வரும் காலத்திலேனும் நகரத்தார் சங்கங்கள் இது பற்றிச் சிந்திக்க வேண்டும்.



இந்த கிரகம் என்னை ஆச்சரியப்படுத்துகிறது

மாணிக்கம் முத்துராமன்
பட்டதாரி ஆசிரியர், நற்சாந்துபட்டி

இந்த கிரகம் என்னை ஆச்சரியப்படுத்துகிறது.

மனிதன் மாறி விட்டான். வளங்களை சுரண்டி வசதிகளை பெருக்கி கொண்டான். நுகர்வுக்கு அடிமையாகி விட்டான். சுய நலமிக்க பேராசை கொண்டான். வசதிக்குப் பின்னால் ஓடுகிறான். சகமனித உணர்வுகளை நெறித்து விட்டான்.

ஆம்

இந்த கிரகம் என்னை ஆச்சரியப்படுத்துகிறது. பணம் என்னும் பண்டத்துக்காக கடல் கடந்து ஓடுகிறான். தாய் தந்தையைத் தவிக்க விடுகிறான். பச்சை அட்டை பெறுவதற்காக மதி கெட்டு அலைகிறான்.

ஆம்

இந்த கிரகம் என்னை ஆச்சரியப்படுத்துகிறது. இயற்கையின் வளங்களைச் சுரண்டுகிறான். உலகில் நியாயங்களை அழிக்கிறான். மனதின் மாண்பை மிதிக்கிறான். போட்டி மனப்பான்மையால் வேகிறான். வறட்சியை வா என்று அழைக்கிறான்.

ஆம்

இந்த கிரகம் என்னை ஆச்சரியப்படுத்துகிறது. சுய நலத்தை சுவீகரிக்கிறான். பேராசையைப் பெருக்குகிறான். உயிரினங்களைச் சுரண்டுகிறான். இரக்கத்தை அடக்கம் செய்கிறான். மனித உணர்வுகளை மாசுபடுத்துகிறான். கல்வியைக் காசுக்குப் படிக்கிறான்.

ஆம்

இந்த கிரகம் என்னை ஆச்சரியப்படுத்துகிறது. மனிதன் மிருகமாகிவிட்டான். ஹோமோ சேப்பியன்ஸ் ஆகி விட்டான்.



Engineering Components

Specialist in Wire Cutting & E.D.M Processes

FINE TOOLS

No. 891 (Old No. 473), E.V.R. Periyar High Road,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 2363 6246

www.npnagarathar.com

உள்ளம் உயர்வு வெற்றி

அண்ணாமலை தமிழரசு
B.E.,M.B.A., (I.I.M - B)
நற்சாந்துபட்டி

மனிதகுலத்தின் இயல்பான குணம் தற்போதுள்ள நிலையில் இருந்து உயர்வு நிலை அடைய வேண்டும் என்பது. நிகழ்கால நிகழ்வுகளில் சில வேறுபாடுகள் இருந்தாலும், வள்ளுவர் காலம் தொட்டு இயங்கி வரும் அறம் சார்ந்த வாழ்க்கையில் 'உள்ளத்தனையது உயர்வு' என்பதுதான் கோட்பாடு . மேன்மக்கள் (செட்டிநாட்டு மொழி வழக்கில் தரமான குடும்பம்) எப்பொழுதும் நேர்மறை எண்ணத்துடனும், கீழ்நோக்கு சிந்தனை அல்லாமலும் வாழ்ந்து வருகிறார்கள். அத்தகைய உள்ளத்தின் எண்ணம் உயர்வினைத் தருவதோடு, வெற்றிக்கும் இட்டுச் செல்கிறது. வெற்றிப் பாதையில் செல்லும் போது ஏற்படும் சிற்சில வலிகள் பொறுத்துக் கொள்ளக் கூடியவை தான். ஆங்கிலத்தில் ஒரு சொற்றொடர் உண்டு . "Feel the pain; Do not s ffer" ஏனெனில் உயிருடன் இருக்கும் வரைதான் வலியை உணர முடியும். தோல்வி என்ற வலிதான் வெற்றியின் ஆரம்பப் புள்ளி.

மேன்மக்கள் எந்தவொரு பொருளாதார சூழ்நிலையிலும், தங்களுக்கே உரிய மேம்பட்ட குணங்களில் இருந்து சிறிதும் விலக மாட்டார்கள்.

தங்கம் எப்போதுமே தரத்தில் குறைவதில்லை. நல்ல சிந்தனைகள் உள்ளத்தில் வளர, வளர உயர்வு நிலையை எளிதில் அடைய முடியும். அதனால்தான் புதிய தொழில் முயற்சி, அறச்செயல்கள், கல்வி, சமூகம் சார்ந்த நலப்பணிகள் நடைபெறுகின்றன. நகரத்தார்களில், மலேசியாவில் முதன் முதலில் ரப்பர் தோட்டம் பயிரிட்டது நமது நச்சாந்துபட்டியைச் சேர்ந்த பெ.ராம குடும்பத்தினர். தரமான கல்விக்குப் பெயர் பெற்ற ஊர், சுற்றுப்புற கிராம மக்களுக்குச் சேர்த்து மருத்துவமனை அமைத்துக் கொடுத்தது, இன்னும் பலப்பல. அத்தனை உயர்வுகளும் மேன்மக்கள் சிந்தனையின் வெளிப்பாடு.

நமது செட்டி நாட்டுப் பகுதி திருமண விருந்துகளில் பரவலாகப் பேசிக் கொள்வது; சிட்டைப்படி சாமான்களை கடைக்காரர் கொடுத்து விடுவார். நமக்குத் தெரிந்த மிக நல்ல சமையல் மேஸ்திரியிடம் ஆர்டர் கொடுத்து விடலாம், ஆனால் விருந்துச் சாப்பாடு சிறப்பாக அமைவது என்பது விசேஷகாரர்களின் மனதைப் பொறுத்தது என்பார்கள். வெற்றி என்பது பணம் சம்பாதிப்பது மட்டுமல்ல. இயன்ற வரை

அடுத்தவர்களுக்கு இடையூறு இல்லாமலும், அடுத்தவர் வாழ்வைக் கெடுக்க நினைக்காமலும் இருப்பதுதான் பரந்துபட்ட வெற்றி.

உயர்வான எண்ணங்களோடும், நேர்மறை சிந்தனைகளோடும், எந்த நிலையிலும் தரம் தாழ்ந்து விடாமல், மேன்மக்கள் காட்டிய வழியில் தொடர்ந்து பயணித்தால், வெற்றியை அடைவதும், வெற்றியை வசப்படுத்திக் கொள்வதும் நம்முடைய எண்ண ஓட்டத்தில் தடைகளற்று நிலைக்கச் செய்ய முடியும்.

வெள்ளத் தனையது மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

இறைவா

ந.மு.அ. காசி
நற்சாந்துபட்டி



இறைவா

வருமானம் குறைவானாலும்....
வயிறாற உணவைக் கொடு....
வாழ்நாள் குறைவானாலும்.....
நோயில்லா உடலைக் கொடு.....
வசதி குறைவானாலும்.....
அன்பான உறவைக்கொடு.....
பணம் குறைவானாலும்.....
பக்தி செலுத்தும் மனதைக் கொடு.....
பிறர் வலியைத் தன் வலியாய்....
உணரும் உணர்வைக் கொடு.....
உறவுகள் குறைவானாலும்.....
உயிர்தரும் நட்பைக் கொடு.....

ஐவகை கடமைகள்

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி
தொகுப்பு லெ. இராம. இராமனாதன் BE
நற்சாந்துபட்டி

மனிதனுக்கு ஐந்து வகையிலே கடமைகள் உண்டு. அவை

1) தான் 2) குடும்பம் 3) சுற்றம் 4)ஊரார் 5) உலகம் ஆகிய இவைகளாகும். இந்த ஐவகையும் அவரவர்கள் ஆற்றலுக்கும், வயதிற்கும், அறிவிற்கும் தக்கவாறு உயர்த்திக் கொண்டே போகலாம். ஆனால் முதல் முக்கியத்துவம் உடலில் இருக்க வேண்டும். இரண்டாவதாக குடும்பம் பிறகு சுற்றம், ஊரார், உலகம் என்று இவ்வாறு விரிய வேண்டும். இந்த ஐந்திலே ஒன்றினால் மற்றொன்று பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நான் சமுதாயத்திற்காக உழைக்கின்றேன் என்று கூறித் தன் குடும்பத்தைக் கவனிக்காது விட்டாலோ, உடல்நலத்தை சிதைத்து கொண்டாலோ, சமுதாய நலனிற்கு ஒருவர் தொண்டு செய்ய முடியுமா? குடும்ப நலனும், உடல் நலனும் வீணாகிப் போய்விடும். ஒரு மனிதன் நல்ல முறையிலே வாழ்ந்தானேயானால், அதாவது தன் உடலையும் மனத்தையும் சரிவர பேணி வந்தானேயானால் சமுதாயத்திற்கு லாபமாக, நன்மையாக அமையும். அவ்வாறின்றி அவன் உடல் 'நலம் குன்றி நோயுற்றால் சமுதாயம் தானே அதனை ஈடுசெய்ய வேண்டும்? அப்பொழுது சமுதாயத்திற்கும் இருவிதத்திலும் நஷ்டமாக வந்தடையும்; முதலாவதாக அவனால் கிடைக்கக்கூடிய லாபம் போய்விட்டது. இரண்டாவதாக அவனால் செலவும் இழப்பும் உண்டாகின்றன.

தனி மனிதன் தன்னைப் பாதுகாத்துக் கொள்வது என்பது சுயநலமல்ல. தன்னை சரியாக வைத்துக் கொள்வது, ஆற்றல் உள்ளவனாக மாற்றிக் கொள்வது, கல்வியிலே தேர்ந்தவனாக மாற்றிக் கொள்வது ஆகிய இவையெல்லாம் சுயநலமாகாது. நான் வாழக்கூடிய இந்த சமுதாயத்திற்கு நல்ல பிரஜையாக நல்ல தொண்டனாக வரவேண்டும் என்ற ஒரு அடிப்படையிலேதான் ஒரு மனிதனுடைய நலம், அவனை அறியாமலேயே அவன் செய்யக்கூடிய நல்ல காரியங்கள் எல்லாம் கூட சமுதாயத்திற்கு நன்மையாக முடியும். பிறருக்குத் தொண்டாற்ற வேண்டும், பிறர்படும் துன்பத்தை நீக்கித் துணை புரிய வேண்டும் என்ற வகையிலே தனி மனிதனுடைய தயாரிப்பு நிலை சமுதாய வளத்தையே பெருகச் செய்யும்.

V. RAAMU
Mobile :97509 77550

Ph: 04333 277550
94433 77845



Siddi Vinayaka Services

'Vignesh Illam',
Elango Street, NACHANDUPATTI - 622 404. Pudukottai Dt.
E-mail : raamusvs@gmail.com

OIL PURIFIER MACHINE SALES & SERVICE

அறுசுவை உணவிற்கு

கோமதி ராமு
75982 77845



விக்னேஷ் கேட்டர்ஸ்

உயர்தர செட்டிநாடு கேட்டரிங்

விக்னேஷ் இல்லம், இளங்கோ தெரு, நற்சாந்துபட்டி 622 404.
புதுக்கோட்டை மாவட்டம்

அருள்மிகு சிதம்பரேஸ்வரர் உடனாய சிவகாமி அம்பாள் திருக்கோவிலில்

நடைபெற்றுள்ள திருப்பணிகள்

தொகுப்பு கோலப்பிலா VR. ராமு

நாள் : 24-02-2021.

1 ஆலயத்தின் முன்புறம் 60 அடி உயரம், 5 நிலைகள் கொண்ட இராஜகோபுரம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, காண்பவர் வியக்கும் வகையில் வர்ணம் தீட்டப்பட்டுள்ளது.

2 திருக்கோவிலிலுள்ள பதினொன்று கோபுரங்களில் உள்ள பதுமைகள் சீரமைக்கப்பட்டு, வர்ணம் பூசப்பட்டு மிளிர்கிறது.

3 கஜா புயலினால் சேதம் அடைந்து, திருக்கோவில் மதில்களில் உள்ள உடைந்து போன பூதகனங்கள் புதிதாக கட்டப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டுள்ளது.

4. திருக்கோவிலில் சுவாமி, அம்பாள், பிள்ளையார், சுப்ரமணியர். மகாலெட்சுமி, மற்றும் பைரவர் சன்னதி கர்பகிரகத்தில் இருந்த டைல்ஸ் எடுக்கப்பட்டு, கல்சுவர்கள் சுத்தம் செய்யப்பட்டு 11 மூலிகைகள் கலந்து கற்சுவர்கள் முழுவதும் பூசப்பட்டுள்ளது.

5. திருக்கோவிலில் உள்ள அலங்கார மண்டபம், சுவாமி மண்டபம், மற்றும் அம்மன் மண்டபம் முழுவதும் சுத்தம் செய்யப்பட்டு வெடிப்புகள் சரிசெய்யப்பட்டு புதிதாக வர்ணம் பூசப்பட்டு பொழிவுடன் திகழ்கின்றது.

6. திருக்கோவிலில் உள்ள எல்லா கல்மண்டபமும், தரை சுவர் மற்றும் சீலிங், சுற்றுச்சுவர் உள்புறம் மற்றும் வெளிப்புறம் முழுவதும் கெமிக்கல் கொண்டு சுத்தம் செய்து, அதன் மேல் அதிக அழுத்தம் கொண்ட தண்ணீர் மூலம் சுத்தம் செய்யப்பட்டு, புதிதாக கட்டியது போல் பொலிவுடன் திகழ்கின்றது.

7. திருக்கோவிலின் மேல் தளம் சுமார் 20,000 சதுர அடி தளம் சுத்தம் செய்யப்பட்டு, தள ஓடுகளில் உள்ள விரிசல்கள் சரிசெய்யப்பட்டு டெரகோட்டா வண்ணம் பூசப்பட்டுள்ளது.

8. திருக்கோவிலின் மேல்தளத்தில் உள்ள ஜன்னல்கள் மழைநீர் உள்ளே வராமல் இருக்க இரும்பு தகரம் கொண்டு கூரைகள் அமைக்கப்பட்டுள்ளது.

9. திருக்கோவில் முழுவதும் ஏற்கனவே இருந்த மின்சார கம்பிகள் மற்றும் விளக்குகள் ஆகியவை பழுதடைந்து போனதால் முற்றிலும் புதிதாக மின்கம்பிகள் அமைக்கப்பட்டு, புதிதாக LED விளக்குகள் அமைக்கப்பட்டு, திருக்கோவில் இப்போது மின்னொளியில் மிளிர்கிறது.

10. திருக்கோவிலில் மின்சாரம் இல்லாத நேரத்தில் பூஜைகள் தடைபெறாமல் "நடப்பதற்காகவும் மற்றும் ஜெனரேட்டர் போடாமல் தடையில்லா மின்சாரம் வேண்டி 4 KVA சோலார் பேனல்கள் மேல் தளத்தில் அமைக்கப்பட்டு உள்ளது.

11. திருக்கோவிலில் உள்ள அனைத்து வாகனங்களும் பழுது பார்க்கப்பட்டு, புதிதாக ஒளிரும் வண்ணம் வர்ணம் பூசப்பட்டுள்ளது.

12. திருக்கோவிலில் உள்ள அனைத்து சன்னதிகளிலும் விளக்கு ஏற்றப்பட்டு அழுக்கும். கறையும் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, திருக்கோவிலின் தெற்கு பகுதியில் உள்ள மணி மண்டபம் ஏரியாவில், சில்வர் தட்டுகளில் விளக்கு ஏற்றுவதற்காக தனியாக இடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

13. திருக்கோவிலில் அலுவலக கட்டிடம் ஒன்று 256 சதுர அடியில் புதிதாக வெளிப்பிரகாரத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

14. திருக்கோவிலில் உள்ள வெளிப்புற மதில் சுவர்களில் ஏற்பட்டு இருந்த வெடிப்புகள் சரி செய்யப்பட்டு, அதிக அழுத்தம் கொண்ட தண்ணீர் அடித்து கறைகள் முழுவதும் நீக்கப்பட்டு, புதிதாக கண்ணை கவரும் வண்ணம் வர்ணம் தீட்டப்பட்டுள்ளது.

15. திருக்கோவிலின் மடப்பள்ளியில் புகையால் ஏற்பட்ட கறைகள் நீக்கப்பட்டு, அடுப்புகள் புதிதாக அமைக்கப்பட்டு, கிரானைட்டில் புதிதாக கல் பதித்து, புதிதாக மின்சார கம்பிகள் மற்றும் LED விளக்குகள் அமைத்து புதிப்பிக்கப்பட்டுள்ளது.

16. திருக்கோவிலில் உள்ள தண்ணீர் தொட்டிகள் சுத்தம் செய்யப்பட்டு, புதிதாக குழாய்கள் அமைத்து புதுப்பிக்கப்பட்டுள்ளது.

17. திருக்கோவிலில் உள்ள சன்னதிகளுக்கும், இராஜகோபுர படிகளிலும் ஏறி செல்வதற்கும் வசதியாக எவர் சில்வரில் ஆன கைப்பிடிகள் அமைக்கப்பட்டள்ளது. மேலும் வெளியில் உள்ள குடவரை பிள்ளையார் முதல் முருகன் சன்னதி வரைக்கும் ஆடு, மாடுகள் உள்ளே வராமல் தடுப்பதற்கு எவர்சில்வரில் தள்ளுகதவு அமைக்கப்பட்டுள்ளது.

18. திருக்கோவிலில் உள்ள திருவாச்சி, உற்சவ மூர்த்திகள் சரவிளக்குகள் அனைத்தும் மெருகு போடப்பட்டுள்ளது.

19. திருக்கோவிலின் திருக்குளம் சுத்தம் செய்யப்பட்டு சுற்றிலும் கம்பிகளில் ஆன வேலிகள் அமைக்கப்பட்டு மேலும் திருக்குளத்திற்கு வரும் நீர் வரத்துகள் அனைத்தும் சரி செய்யப்பட்டு, திருக்கோவிலின் மேல் தளம் அனைத்திலும் வரும் மழை நீரை குழாய்கள் மூலம் சேகரித்து இப்பொழுது திருக்குளத்திற்கு நீர் வரும்படி செய்யப்பட்டு நீர் நிரப்பபட்டுள்ளது.

20. திருக்கோவிலை சுற்றி வெளிப்புறம் சுத்தம் செய்யப்பட்டு, மரக்கன்றுகள் நடப்பட்டு, 27 நட்சத்திர மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரித்து வரப்படுகின்றது.

21. திருக்கோவிலின் கொடி மரம் பிரித்து சரிசெய்யப்பட்டு, முழுதும் மெருகு கொடுத்து மாட்டப்பட்டுள்ளது.

22. திருக்கோவிலின் அலங்கார மண்டபத்தின் முன்புறம் 1000 சதுரடி புதிதாக கான்கீரிட் கல் பதிக்கப்பட்டுள்ளது.

23. திருக்கோவிலின் வெளிசுற்றுபுற பாதை சரிசெய்யப்பட்டு, பக்தர்கள் நடந்து செல்வதற்கு வசதியாக கல் மராமத்து வேலை பார்த்துள்ளது.

24. திருக்கோவிலின் மேல் தளத்திற்கு ஏறிச் செல்வதற்கு, புதிதாக இரும்பில் ஆன ஏணிப்படி அமைக்கப்பட்டுள்ளது.

25. திருக்கோவிலின் அனைத்து சுவாமிகளுக்கும் சில்வரில் ஆன பெயர்பலகை மற்றும் போர்மில் ஆன பெயர் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளது.

26. திருக்கோவிலின் வெளி பிரகாரத்தில் பார்வதி விநாயகருக்கும். பாலசுப்பிரமணியருக்கும் புதிதாக கோபுர வேலைபாடுகள் மாடத்துடன் கட்டப்பட்டுள்ளது.

27. திருக்கோவிலின் உள்ளே காசி விஸ்வநாதர் சன்னதியின் இருபுறமும், உற்சவ மூர்த்தி விக்ரகங்கள் வைக்கப்பட்டு இருந்த மரத்தினால் ஆன மேடைகள் சேதம் அடைந்த காரணத்தினால், புதிதாக கல்லினால் ஆன மேடைகள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலே உள்ள அனைத்து திருப்பணிகளும் நற்சாந்துபட்டி நகரத்தார்கள் மற்றும் பெண் பிள்ளைகள் அளித்த நன்கொடையாலும், புள்ளி வரியாலும் மற்றும் அனைவரின் ஒத்துழைப்பாலும் நிறைவு பெற்று திருக்கோவிலின் நன்னீராட்டு பெருவிழா இனிதே நடைபெற்றது.

With Best Compliments from



S.N. TRADELINKS

32. Prasana Avenue, NGR Nagar Main Road,
Anaikadu, Tirupur - 641 601

KR. NALLAMUTHU

AVINI PATTI

www.npnagarathar.com

பன்னிரு திருமுறைகள்

நல்ல முத்துராமன்
நற்சாந்துபட்டி

தமிழ் வேதங்களாகத் திகழும் பன்னிரு திருமுறைகளும், சிவ பெருமானால், ஆட்கொள்ளப்பட்டு, அவரது கருணை வெள்ளத்தில் மூழ்கித் திளைத்த அருளாளர்களால் அருளப் பெற்றவையாகும். அவற்றை "வண் தமிழ்ப்பாடல்கள்" என்பார் திருஞான சம்பந்த சுவாமிகள். வண் தமிழ் என்றால், வேண்டுவோர் வேண்டுவனவற்றை எல்லாம் கொடுக்கும் தீந்தமிழ்ப் பாடல்கள் என்பது பொருள் ஆகும்.

பன்னிரு திருமுறை பகுப்பு

திருஞானசம்பந்தர் பாடியவை – 1,2,3 திருமுறைகள்

திருநாவுக்கரசர் பாடியவை – 4,5,6 திருமுறைகள்

சுந்தரர் பாடியது – 7 ஆம் திருமுறை

இந்த 7 திருமுறைகளும் தேவாரம் எனப்படும்.

மாணிக்க வாசகர் அருளியது – 8ஆம் திருமுறை (திருவாசகம், திருக்கோவையார்)

திருமாளிகைத் தேவர்
சேந்தனார்
கருவூர்த் தேவர்
பூந்துருத்தி நம்பிகாடநம்பி
கண்டராதித்தர்
வேணாட்டடிகள்
திருவாவிய முதனார்
புருடோத்தும நம்பி
– 9ஆம் திருமுறை (திருவிசைப்பா)

சேதுராயர் – 9ஆம் திருமுறை (திருப்பல்லாண்டு)

திருமூலர் – 10ஆம் திருமுறை (திருமந்திரம்)

www.npnagarathar.com

ஆலவாய் உடையார்
காரைக்காலம்மையார்
ஐயடிகள் காடவர் கோன்
சேரமான் பெருமாள்
நக்கீர தேவர்
கல்லாட தேவர்
கபில தேவர்
பரணதேவர்
இளம்பெருமான் அடிகள்
பட்டினத்துப் பிள்ளையார்
நம்பியாண்டார் நம்பிகள்

— 11ஆம் திருமுறை

சேக்கிழார் சுவாமிகள் — 12ஆம் திருமுறை (பெரிய புராணம்)

தேவாரங்கள் பல்லவர் காலத்தில் அருளிச் செய்யப்பட்டவை. அவை பாதுகாக்கப்பட்ட இடம் தில்லைச் சிற்றம்பலம். (சிதம்பரம் நடராஜர் கோவில்). பாதுகாத்த பணியைச் செய்தவர்கள் தில்லை வாழ் அந்தணர்கள். தில்லைச் சிற்றம்பலத்தில் பத்திரப்படுத்தி இருந்த தேவார ஏடுகளை, நம்பியாண்டார் நம்பி சுவாமிகள், முதலாம் இராஜ இராஜசோழன் காலத்தில் வெளிப்படுத்தினார் என்பது வரலாறு. திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி.

மொத்த திருமுறை ஆசிரியர்கள்	27
திருமுறைகள்	12
மொத்தப் பாடல்கள்	18350

திருச்சிற்றம்பலம்

www.npnagarathar.com



நவபாஷாணம் அறிவோம்

தமிழ்ச் செம்மல் **டாக்டர் சே.குமரப்பன்**
முதல்வர் (ப.நி) நாச்சியப்ப சாமிகள்
கலை அறிவியல் கல்லூரி, கோவிலூர்
கல்வி ஆலோசகர் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்(ப.நி)
கோவிலூர் மடாலயம்

நவபாஷாணத்தைப் பற்றி பல்வேறு தகவல்கள் கூறப்பட்டு வருகின்றன. இதனைக் கொண்டு தங்கம் உருவாக்கலாம், மாந்திரிகம் செய்யலாம். பல உடலுறுப்பு குறைபாடுகளைச் சரி செய்யலாம். பல நோய்களைத் தீர்க்கலாம் எனப் பலவாறாகக் கூறப்பட்டு வருகிறது. இவற்றில் சில சரியானவை, பல தவறானவை ஆகும்.

பழனி முருகன் சிலை நவபாஷாணத்தால் செய்யப்பட்டது என்பது அனைவரும் அறிந்ததே. எனவே நவபாஷாணம் என்றால் என்ன பொருள்? அது யாரால் எவ்வாறு உருவாக்கப்பட்டது? யார் பழனி முருகனின் சிலையை நவபாஷாணத்தால் உருவாக்கினார்கள்? அதன் நன்மைகள் என்ன? பயன்கள் என்ன? என்பது பற்றிக் காண்போம்.

நவபாஷாணம் என்றால் என்ன?

நவம் என்றால் ஒன்பது, பாஷாணம் என்றால் விஷம் அல்லது நச்சு என்பது பொருள். மனிதனைக் கொல்லக் கூடிய அளவிற்கு கொடிய நச்சுத்தன்மை உடைய பாஷாணங்களை பல பொருட்களுடன் கலந்து மனிதனைக் காக்கும் மாமருந்தாக மாற்றியவர்கள் சித்தர்கள் ஆவார்கள்.

சித்தர்கள் என்பவர் யார்?

ஆன்மீகத்திலும், மருத்துவத்திலும் சிறந்து விளங்கியவர்கள் சித்தர்கள் ஆவார்கள். இவர்கள் மூலிகைகளை ஆய்வு செய்து, பல நோய்களைக் குணப்படுத்தும் மருந்துகளை உருவாக்கி, மருத்துவம் செய்தார்கள். மூலிகைகளைக் கொண்டு நோயைக் குணப்படுத்தும் இவ்வகை மருத்துவ முறையை உருவாக்கிய சித்தர்கள் பெயரைக்கொண்டு சித்த வைத்தியம் என அழைக்கப்படுகிறது. இவர்கள் பெரும்பாலும் காடு மற்றும் காட்டை ஒட்டிய பகுதிகளில் துறவு வாழ்க்கை , தவ வாழ்க்கை வாழ்ந்துள்ளனர். யோகாசனம் உடற்பயிற்சி, தியானம் , தவம் செய்வதிலும் அற்புதங்களை நிகழ்த்திக் காட்டுவதிலும் சித்து விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கியுள்ளனர்.

With Best Compliments from

Valarmathi

FOR ANYTHING AND EVERYTHING
IN FERROUS AND
NON - FERROUS CASTINGS



VALARMATHI FOUNDRY

SF No. 258/1 & 259 / 2 Koilmedu, Velandipalayam,
COIMBATORE - 641 025. ©: 2402414
E-mail : valarmathify@hotmail.com

www.npnagarathar.com

போகர், சித்தர்

பழனி மலையில் உள்ள மூலவர் தண்டாயுதபாணி சிலையை நவபாஷாணத்தால் உருவாக்கியவர் போகர் எனக் கூறப்படுகிறது. இவர் கிமு 3000 ஆண்டுகளில் வாழ்ந்த பதினெட்டு சித்தர்களில் ஒருவர் என்றும் இவர் சீனா, மக்கா, மதினா ஆகிய நாடு மற்றும் நகரங்களுக்குச் சென்று அங்குள்ள மருத்துவ முறைகளைக் கண்டறிந்து வந்தார் என்றும் இரசவாதம், காயகல்பம், கணிதம், மருத்துவம், யோகா, ஆன்மீகம் ஆகியவற்றை நன்கு கற்றறிந்தவர் என்றும் அறியப்படுகிறது

மேலும் ஆயுர்வேதத்தின் தந்தை என அழைக்கப்படும் அகத்தியரிடம் ஆலோசனை பெற்று 4448 அரிய வகைத் தாவரங்களைக் கண்டறிந்து அவற்றை ஒன்பது நச்சுத் தன்மையுடைய பாஷாணங்களுடன் கலந்து ஒரு முதன்மை மருந்தினை (Mas er medic ne) உருவாக்கினார் என்றும் இந்த முதன்மை மருந்தினை திருமூலர் அவரது திருமந்திரம் நூலில் குறிப்பிட்டு உள்ளார் என்றும் கூறப்படுகிறது. போகர் பழனி தண்டாயுதபாணி சிலையை நவபாஷாணத்தால் உருவாக்கி மூலஸ்தானத்தில் நிறுவிய பின், அவருடைய முதன்மைச் சீடர் புலிப்பாணி சித்தரிடம் முருகனுக்கு செய்ய வேண்டிய அபிடேக முறை, பூசைகளை மேற்கொள்ளும் முறைகளைச் சொல்லி அவ்வாறு செய்துவர பணித்துவிட்டு பழனி மலைத் தண்டாயுதபாணி சிலைக்கு கீழே உள்ள சுரங்கப்பாதை வழியாக நிர்வாண நிலையில் சென்று ஜீவசமாதி அடைந்தார் என்றும், அவர் சமாதி அடைந்த இடம் தென்மேற்கு மூலையில் உள்ளது என்றும் அங்கு போகர் வழிபட்ட அம்மனும், மரகத லிங்கமும் உள்ளன எனவும் சொல்லப்படுகிறது.

நவபாஷாணத்தின் மகிமை

பழனிமலைக் கோவில் மூலவர் தண்டாயுதபாணி, குழந்தை வேலப்பர், கொடைக்கானல் பூம்பாறையில் உள்ள குறிஞ்சி ஆண்டவர் ஆகிய மூன்றும் நவபாஷாணத்தால் செய்யப்பட்ட சிலைகள் எனக் கூறப்படுகிறது. இவற்றில் பழனி ஆண்டவர் சிலை பற்றி மட்டுமே பெரும்பாலான தகவல்கள் அறியப்படுகின்றன.

தெய்வ விக்கிரகங்கள் உலோகம் மற்றும் கருங்கற்களால் மட்டுமே உருவாக்கப்படுவது வழக்கம். ஆனால் மனித குல நன்மைக்காக பல ஆய்வுகள் செய்து பழனியாண்டவர் சிலையை போகர் நவபாஷாணத்தால் உருவாக்கியுள்ளார். பழனியாண்டவருக்கு, பால், தேன் மற்றும் பஞ்சாமிர்தம் மட்டுமே அபிஷேகம் செய்யப்படுகிறது. இந்த அபிஷேக பொருட்கள் தண்டாயுதபாணி சிலை மீது பட்டு வரும் பொழுது நவபாஷாணம் அதில் கலந்து மருத்துவ குணம் பெறுகிறது எனவும் அபிஷேகம் செய்த பால், தேன், பஞ்சாமிர்தம் உண்டால் தீராத நோய்கள் தீரும் என சித்தர்கள் கூறியுள்ளனர். பக்தர்கள் பலர் இதனை நம்புகின்றனர்.

நவபாஷாணத்தில் உள்ள மருந்துகள் உடலில் உள்ள நரம்பு மண்டலம், உணவு மண்டலம், ரத்த ஓட்ட மண்டலம், இனப்பெருக்க மண்டலம், சுரப்பிகள் மற்றும்

ரத்தம் ஆகியவற்றைச் சுத்திகரித்து புத்துணர்வு பெறச் செய்து அனைத்து மண்டலங்களையும் இணைத்து சிறப்பாகச் செயல்படச் செய்கிறது எனவும் இதன் மூலம் உள்ளத்திலும் உடலிலும் புத்துணர்வு ஏற்படும் எனவும் கூறப்படுகிறது.

நவபாஷாணத்தில் உள்ளவை யாவை?

நவபாஷாணத்தில் ஐம்பெரும் பூதங்களான மண், காற்று, நீர், நெருப்பு, ஆகாயம் மற்றும் உலோகங்களான தங்கம், நாகம், செம்பு, இரும்பு, துத்தநாகம் மற்றும் மிருந்தாரு சங்கி, சங்குப் பாஷாணம், குந்தகம், லிங்கம், ரசம் மற்றும் நவபாஷாணங்களை(விஷங்களை) உள்ளடக்கியதாகும் எனச் சொல்லப்படுகிறது. 81 சித்தர்கள் போகர் உடன் இணைந்து 81 பாஷாணங்களையும் பிற பொருட்களையும் கலந்து இதனைத் தயாரித்தார்கள் எனக் கூறப்படுகிறது

பொதுவாக நோயைக் குணப்படுத்த மருந்து உட்கொள்ளும்படி சொன்னால் முறையாக உட்கொள்ள மாட்டார்கள். ஆனால் புண்ணிய தீர்த்தம், கடவுளின் பிரசாதம் என்றால் உட்கொள்வார்கள் என எண்ணியே போகர் பழனி தண்டாயுதபாணி சிலையை மருத்துவ குணத்துடன் செய்தார் என்றும் தண்டாயுதபாணியின் சிலை மீது அபிஷேகம் செய்யும் பொழுது அப்பொருள்களில் நவபாஷாணம் கரைந்து கலந்து வருகிறது என்றும் இந்த பொருட்களை அருந்துவதால் பல நோய்கள் குணப்படுத்தப்படுகின்றன என்றும் பக்தர்கள் நம்புவதாகக் கூறப்படுகிறது. அறிவியல் நோக்கில் இதனைப் பார்த்தால் ஆய்வுகள் மற்றும் ஆதாரங்கள் இல்லாமல் இவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது.ஆனால் இவற்றை ஆன்மீக மருந்து (ஒ iritual medic ne) என ஏற்றுக்கொள்ளலாம்.



நம்பிக்கையுடன் வழிபடுவோம்

ந.மு.அ. முத்து அழகப்பன்
நற்சாந்துபட்டி

அற்புதமான இந்த வாழ்க்கையை அர்த்தம் உள்ளதாக்குவோம். முழுமையான ஈடுபாடு இருந்தால் தான் வாழ்க்கை ரசிக்கும். சொந்த வலிமையும் இறையருளும் இணைந்தால் எதையும் சாதிக்கலாம். உங்களால் முடியும் என்று உறுதியாக நம்பினால் உங்களால் முடியும். தன்னைத்தானே வெற்றி கொண்டால் வாழ்க்கைச் சூழலை வெல்லலாம். நல்லதே நாடுங்கள்; நல்லவை உங்களை வந்தடையும். வெற்றியை நாடுங்கள்; வெற்றியாளராகத் திகழ்வீர்கள். விருப்பமானவற்றைத் தொடர்ந்து சிந்தியுங்கள்; விரும்பியவை வசப்படும், கடவுளிடம் நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் உங்கள் ஆழ்மனதில் பதியுங்கள். ஆழ்மனது நம்பினால் நனவாகும் சூழ்நிலை உருவாகும். இறைவன் நம் அளப்பரிய ஆற்றலை வெளிக் கொணர்ந்து மகத்தான சாதனைகள் புரியச் செய்வார் என்று நம்புங்கள்.

வாழ்க்கை எப்போதுமே சுலபமானதாகவும் சுகமானதுமாகவே இருந்து விடாது. சிரமங்களைத் திறமையாகக் கையாண்டால் உறுதியானவர்கள் ஆவீர்கள். வாழ்க்கையில் சங்கடங்களைக் கண்டு அஞ்சாதீர்கள். நமது திறமையை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததாக நினையுங்கள். கடவுளுக்கு நம்மை மிகவும் பிடிக்கும். நாம் சங்கடங்களைத் திறமையாகக் கையாள்வோம் என்பது அவருக்குத் தெரிந்திருக்கிறது.

* வழிபாடு தான் கவலைக்கு அருமருந்து.
* மனமுருகி வழிபட்டால் எந்தக் கவலையும் பறந்து விடும்.
* காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது நாதன் நாமம் அல்லவா ?
* வழிபாடு நம்மை வலிமையாக்குகிறது; நம் ஆற்றலைப் பெருக்குகிறது; அளப்பரிய சக்தியைக் கொடுக்கிறது.
* ஆழ்ந்த வழிபட்டினால் மனம் அமைதி கொள்கிறது; மன இறுக்கம் தளர்கிறது; தன்னம்பிக்கை பிறக்கிறது; மனம் லேசாகிறது. மனம் லேசானால் உற்சாகம் ஊற்றெடுக்கும். பிறகென்ன ? மகிழ்ச்சி தானே!
* நாம் நமக்காக மட்டுமல்ல, மற்றவர்களுக்காகவும், சமுதாயத்திற்காகவும் வழிபடுவது, பிரார்த்திப்பது சாலச் சிறந்தது. கூட்டு வழிபாடு ஆகச் சிறந்தது.

எனவே நம்பிக்கையுடன் இறைவனை வழிபடுவோம், நலம் பெறுவோம்.

AVAILABLE LYCRA / COTTON FABRIC

(ON ORDER BASIS)

18GG RIB	12	13	14	15	16	17	18	19	20	21	22	23	25	26	28	29	30	32
				2	4	4	2	2	2					2	2			
INTER LOCK 24 GG	21	22	23	27	30	34	36											
	2	1	1															
SINGLE JERSY 28GG	18	19	20	21	22	23	24	26	27	28	29	30	32	34	36			
							2	3		5		6	3	3				
SINGLE JERSY 24GG	16	17	18	19	20	21	22	24	26	30								

HOSIERY YARN AVAILABLE

(PC/PV/100% COTTON / SLUB / VISCOSE / LYCRA FABRIC

THE PARADISE KNITTERS

98652 04051, 98422 22844, 98422 70168 KNITTING YARN

HOTEL PARADISE INN

13, M.S.Puram Opp. Tirupur Tirupathi Temple

Uthuk li Road, TIRUPUR-641 601

23 A/C & 10 Non Alc Rooms Aa ilable

Cell : 9994830168 Phone : 0421-4330168

KARPAGA VINAYAGAR A/C HALL

Ao mmodate 300 People

PARADISE PARTY HALL

Ao mmodate 300 People

* Aa ilable for All Funt ions * 200 a r park ng fat lity

Paradi Shopping Complex, Hare Rama Hare Kri na Nagar,

Peri a ndipala a m Piru , Mangalam Road,TIRUPUR - 641687

98422 70168, 98422 22844

தண்ணீர்... தண்ணீர்...

அக்ரி பெரி. திருப்பதி
நற்சாந்துபட்டி

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

பிரச்சினைகள் வருவதற்கு முன்னமே வராமல் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை, நெருப்பின் முன் நின்ற வைக்கோல் போர் போல் அழிந்துவிடும். "என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்?" என்று பாடினார், கண்ணதாசன். ஆனால் இன்றைக்கு நம் நாட்டின் வளங்கள் சூறையாடப்பட்டுவிட்டன. மலைகள் நொறுக்கப்பட்டு பாதாளமாகிவிட்டது. ஆறுகளில் மணலும் இல்லை, புனலும் இல்லை. காடுகள் அழிக்கப்பட்டுவிட்டன. தொழிற்சாலைப் பெருக்கம், நகரமயமாக்கல், சுற்றுச்சூழல் பாதிப்பு இப்படி நாடு நரகமாகிக்கொண்டு வருகிறது. தண்ணீர் இல்லை. கடல் வளத்தையும் நாம் விட்டுவைக்கவில்லை.

தென் ஆப்பிரிக்காவின் கேப்டவுனில் "Day Zero" Caution கொடுக்கப்பட்டு அங்குத் தண்ணீர் ரேஷனில் போலீஸ் மேற்பார்வையில் ஒருவருக்கு ஒரு நாளைக்கு 50 லிட்டர் வழங்கப்படுகிறது. இந்தியாவில் புதுடில்லி, புனே, பெங்களூர், சென்னை ஆகிய நகரங்களில் Day Zero நிலை வர வாய்ப்புள்ளது. ஆஸ்திரிய நாட்டில் நீச்சல் குளத்தில் தண்ணீர் குடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வியன்னா நகரில் 18 பொது நீச்சல் குளங்கள் இருக்கின்றன. குளிக்கும்போது அறிந்தும் அறியாமலும் வயிற்றுக்குள் தண்ணீர் போகிறது. இப்படித் தினமும் 5000 லிட்டர் தண்ணீர் காணாமல் போவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. இத்தனைக்கும் குளோரின் கலந்த நீர். இந்த நீர் இழப்பைச் சரி செய்ய நிர்வாகம் கணிசமாகச் செலவு செய்ய வேண்டியுள்ளது. எனவே வாயை மூடிக்கொண்டு நீந்துங்கள் எனப் பிரச்சாரம் செய்கிறது. முன்பு இது போலச் சிக்கன நடவடிக்கைக்காக பெர்முடா, ஷார்ட்ஸ் அணிந்து குளத்தில் இறங்கத் தடை விதித்தது. காரணம், பெர்முடா அணிந்த ஒருவர் குளித்துக் கரையேறும்போது இரண்டரை லிட்டர் தண்ணீரையும் அதில்

உறிஞ்சியெடுத்துப் போகிறாராம். தண்ணீரின் மதிப்பு தங்கத்தைக் காட்டிலும் உயர்ந்துவருவதற்கு இதுவே சான்று.

மூன்றாவது உலகப் போர் ஏற்பட்டால் அது தண்ணீரினால்தான் ஏற்படும் என வல்லுநர்கள் கூறுகின்றார்கள். பூமியின் முக்கால் பங்கு தண்ணீர் என்றாலும், அதில் 97 சதவீதம் கடல்நீர். குடிக்க முடியாது. நதி நீர் அரைச் சதவீதத்திற்கும் சற்றே அதிகம். நிலத்தடி நீர் ஒன்றரை சதவீதம். மீதி மலையிலும் மேகத்திலும் ஒளிந்திருப்பது. இரண்டே சதவீதம் உள்ள நதிநீரும், நிலத்தடி நீரில் 70 சதவீதமும் விவசாயத்திற்குச் செலவாகிறது. மீதிதான் வீடு முதல் ஆலைகள் வரை அனைத்துப் பயன்பாட்டிற்கும் கிடைக்கிறது. அவ்வளவு அரிய பொருளான நல்ல தண்ணீரை அளவுக்கு மீறிக் கெடுக்கிறோம். வீணாக்குகிறோம். மாசு தாங்காமல் பல நதிகள் உயிரிழந்து போயின. பல வறண்டு மறைந்தன. தரமற்ற நீரால் ஏற்படும் நோய்களால் ஆண்டுக்கு 30 இலட்சம் மரணங்கள் நிகழ்கின்றன.

காலநிலை மாற்றத்தால், புவி வெப்பத்தால் நிலத்தடி நீர் அதலபாதாளத்திற்குச் சென்றுவிட்டது. நீர் நிலைகளிலும் தண்ணீர் இல்லை. பருவ மழை தவறும் ஒவ்வொரு கோடையிலும் தண்ணீர்ப் பிரச்சினை உச்சக்கட்டத்தை எட்டுகிறது. இதைச் சமாளிக்க நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். வீட்டில் மழைநீர்ச் சேகரிப்பு அமைப்புகளைச் சீரமைப்பது அவசியம். நதிநீர் மற்றும் நிலத்தடி நீரில் 70% விவசாயத்திற்குத் தேவைப்படுவதால் அதில் கவனம் செலுத்தி பெய்யும் மழைநீர் அல்லது நதிநீர் ஒரு துளி கூடக் கடலில் கலக்காது மண்ணில் இருத்தி நிலத்தடி நீரை உயர்த்த கீழ்க்கண்ட முறைகளைக் கடைப்பிடிப்பது அவசியம்.

1. நீர் நிலைகள் மற்றும் வாய்க்கால்களைத் தூர் வாருதல்
2. கோடை உழவு (சரிவுக்குக் குறுக்கே)
3. மழை பெய்தவுடன் ஆவியாவதைத் தடுக்க மேல்மண்ணைக் கிளறிவிடுதல்
4. ஆழச்சால் அகலப்பாத்தி / சாசர் பேசின் அமைத்து மழைநீரை மண்ணுக்குள் இருத்துதல்
5. கசிவுநீர்க் குட்டை, தடுப்பணைகள் அமைத்தல்
6. தண்ணீர் குறைவாகத் தேவைப்படும் பயிர்களைச் சாகுபடி செய்தல்
7. தண்ணீர் கொண்டுசெல்ல PVC குழாய்களைப் பயன்படுத்துதல்
8. பயிர்களுக்கு ஏற்ப சொட்டுநீர், தெளிப்புநீர்ப் பாசனம் மேற்கொள்ளுதல்

9. நீர் ஆவியாவதைத் தவிர்க்க பயிர்க்கழிவு அல்லது பாலிதீன் போர்வை அமைத்தல்

10. எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் மரம் நட்டு பாதுகாத்தல்

11. நெகிழியை ஒழித்து சுற்றுச் சூழல் பாதுகாப்பு

இன்னும் 20 ஆண்டுகளில் இருப்பை விடத் தேவை 50 சதவீதம் அதிகரிக்குமாம். அடுத்த தலைமுறை தவிக்கட்டும் என விடுவது பாவம். அப்போது என்ன செய்வது என இப்போதே யோசித்துச் செயல்படுவோம்.

சிறுதுளி பெருவெள்ளம் மழைநீர்..... உயிர்நீர்!



D.Senthilkumaran S. Vijithra

Cell: +91 96007 11138 +91 95666 56290

Polyester Sewing Thread
Polyester Filament Thread
Polyester Corespun Thread
Organic Cotton Thread
Fusing Thread
Cotton RFD Thread
All Special Threads Available
Recycled Core Sewing Threads



Wholesale Distributors

Vardhmān A&E

No.73, Avinashi Main Road, Near Gandhi Nagar Signal,
Gandhinagar P.O., TIRUPUR - 641 603
Tel: 0421-4333122, email: texworldtextile@gmail.com



TEXWORLD TEXTILE

குடமுழுக்கு ஆண்டு 2021

ஹைவேஸ் சிதம்பரம்
நற்சாந்துபட்டி

செலவில்லா ஆண்டு
சென்றாண்டு போனது
தேவையில்லா பொருட்கள்
தேடாமல் முடிந்தது.
தியேட்டர் மால் செல்லாமல்
கால்வலி மறைந்தது.
பேர் & லவ்லி குறைந்ததால்
முகம்
பெயரளவில் தெரிந்தது.
மேக்கப்பில் இல்லாமல்
வீட்டு
லாக்கப்பில் கழிந்தது.
கோவிட் போனபின்னும்
கொள்கையைப் பேணினால்
காசுபணம் சேருமென ஓரளவு புரிந்தது.
ஆனாலும்
சிறகடித்துப் பறக்கவேண்டும்.
புறக்கணித்த சொந்தங்கள்
பொழுதெல்லாம்
சேரவேண்டும்.
கலகலப்பு கூடவேண்டும்
கோவிட்
கலகலத்துப் போக வேண்டும்.
குடமுழுக்கு ஆனபின்னே
தடங்களெல்லாம்
நீங்க வேண்டும்.
கும்பிடும் பக்தருக்கு
கோடிபணம்
சேரவேண்டும்.

Phone: 264654





SANTHI MEDICALS

722, Jawahar Bazar, KARUR-639001

ஈதல் இசைபட வாழ்தல்

M. குமரப்பன்
நற்சாந்துபட்டி

குடும்ப வாழ்க்கையை அறம் என்று போதித்தது இந்து மதம். அதனால் தான் அதனை இல்லறம் என்கிறோம்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

என்கிறார் வள்ளுவர். எல்லோரிடமும் அன்பு காட்டி வாழ்தலும், அறச் செயல்களைச் செய்தலுமே இல்லறத்தின் பண்பும் பயனும் ஆகும்.

"Giving is an Art" என்பார்கள். கொடுப்பது என்பது ஒரு கலை. "Life is to give , Not to take " என்றார் ஓரு அறிஞர். வாழ்க்கை என்பது நம்மிடம் உள்ளதை பிறருக்குக் கொடுப்பது. அடுத்தவரிடமிருந்து எதையும் எடுப்பதன்று. மனிதர்களாக வாழும் போது நாம் பெறுகிற செல்வம் பேரும் புகழும் தான். புகழ் ஒன்று தான் இந்த உலகில் என்றும் அழியாதது. ஆதலால் தான் அழியாத புகழ் கொடுப்பவர்க்கே வந்து சேரும் என்பதை "இரப்பார்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ்" என்று திருக்குறள் கூறுகிறது.

மனிதனாகப் பிறந்தவன் வாழை போல அனைத்தையும் மற்றவர்களுக்குத் தரும் பண்பு, உருகி ஒளி வீசும் மெழுகு போன்ற மனம் கொண்டிருந்தால் தெய்வம் போல் எண்ணப்படுவான் என்பதைக் கவியரசர் கண்ணதாசன்,

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
வாரிவாரி வழங்கும் போது வள்ளலாகலாம்
வாழைபோல தன்னைத் தந்து தியாகியாகலாம்
உருகியோடும் மெழுகைப்போல ஒளியை வீசலாம்

என்று அழகாகப் பாடினார்.

நகரத்தார்கள் தர்ம காரியங்களுக்கும், கோவில் திருப்பணிக்கும், கல்விக்கும் அள்ளி அள்ளிக் கொடுத்தவர்கள். நகரத்தார் என ஓரு சமூகம் உண்டு. நல்ல குணங்கள் பல அவர்களுக்கு உண்டு என்று சொல்லத்தக்க வகையில் சிறப்புகள் பல பெற்ற சமூகம். நல்லதையே நினைப்பதையும், சொல்லுவதையும், செய்வதையும் வாழ்க்கை நெறியாகக் கொண்டவர்கள். திரைகடல் ஓடி திரவியம் குவித்தவர்கள். அரசர்கள் காலத்திற்குப் பின்பு ஆலயத் திருப்பணி செய்தவர்களில் முதன்மையானவர்கள் நகரத்தார்கள் என்று காஞ்சி மாமுனிவரால் பாராட்டப்பட்டவர்கள்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஐவர் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

1. காரைக்கால் அம்மையார் 2. அமர்நீதி நாயனார் 3. இயற்பகை நாயனார்

4. கலிக்கம்ப நாயனார்

5. மூர்த்தி நாயனார்

சம்மந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வருக்கும் காலத்தால் முற்பட்டவர் காரைக்கால் அம்மையார். அதனால் சிவபெருமான் மேல் முதன்முதலாகப் பதிகம் பாடியவர் என்ற பெருமையைப் பெறுகிறார். சிவபெருமான் காரைக்கால் அம்மையாரை "அம்மையே" என்று அழைத்து தனக்குத் தாயாக்கிக் கொண்டான். இறைவனுக்கே தாயான பெருமையைப் பெற்ற சமூகம் நகரத்தார் சமூகம்.

நகரத்தார்கள் சைவத்தையும், தமிழையும் வளர்த்தவர்கள். அகரத்தில் தொடங்கிய தமிழை சிகரத்தில் ஏற்றியவர்கள். தமிழ் பதிப்பகங்களை ஏராளமாக நிறுவியவர்கள்.

நகரத்தார் இல்லையென்றால் "நற்றமிழும், சிவமதமும் நகரத்தான் இயன்றிடுமா" என்றார் கவிஞர் வாலி.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் கொடைத் தன்மையைப் பற்றி கவியரசர் கண்ணதாசன் அவர்கள்.

மாசற்ற பொன்னும் மணிவயிரம் ரத்தினமும்
தூரசென்று எண்ணித் தூக்கிக் கொடுத்துவந்தோம்
பண்டைத் தமிழ் மரபைப் பண்போடு காத்துவந்தோம்
அண்டை நிலங்களில் நம் ஆண்டவனை ஊன்றி வைத்தோம்
காசிவீசாலாட்சி கவி மதுரை மீனாட்சி
கட்டியுள்ள ஆடைகளும் கழுத்திலுள்ள பொன்நகையும்
சுற்றியுள்ள மண்டபமும் தூக்கிவரும் வாகனமும்
முற்றும் அழியாத மொட்டைக் கோபுரத்தழகும்
அண்ணா மலையில் அமர்ந்திருக்கும் பேரழகும்
ஆக்கிக் கொடுத்தவர்கள் அமர்ந்திருந்து காத்தவர்கள்
நாட்டுக்கோட்டை வளர்த்த நகரத்தார் அல்லேமோ!

என்று பாடினார்.

நகரத்தார் திருப்பணி இல்லையென்றால் பல திருக்கோயில்கள் இல்லை என்றே சொல்லலாம்.

புறநானூறு சங்க-இலக்கியமான எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"

போன்ற உயர்ந்த கருத்துக்களைப் பதிவு செய்திருக்கின்ற வரலாற்றுப் பெட்டகம். அதிலே நக்கீரர் எழுதிய ஒரு பாடல். வாழ்க்கையில் நாம் ஈட்டுகிற செல்வத்தின் பயன் என்ன ? என்ற கேள்விக்கு விடைசொல்கிறது இந்தப் பாடல்.

இந்தப் பாடலில் வருகின்ற " உண்பது நாழி உடுப்பவை இரண்டே

செல்வத்துப் பயனே ஈதல்"

என்ற வரிகள் வாழ்க்கையின் மகத்துவத்தை உணர்த்துகின்ற உன்னதமான வரிகள்.

உலகம் முழுவதையும் தன் வெண்கொற்றக் குடையின் கீழ் ஆளும் அரசனுக்கும் இரவும், பகலும் கண் உறங்காமல் கொடிய விலங்குகளை வேட்டையாடி வாழும் கல்வியற்ற ஒரு வேடனுக்கும் உண்ணுகின்ற உணவு ஒரு நாழி தான். மேலாடை, கீழாடை என இரண்டு ஆடைகள் தான். இது அனைவருக்கும் பொதுவானது. ஆனால் ஒருவன் பெற்ற செல்வத்தின் பயனே பிறருக்குக் கொடுப்பது தான்.

"செல்வத்துப் பயனே ஈதல்"

என்ற புறநானூற்றுப் பாடலுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் வள்ளல் அழகப்பர்.

கோடி கொடுத்த கொடைஞன் குடியிருந்த

வீடும் கொடுத்த விழுத்தெய்வம் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த பண்பாளர். சம்பாதித்ததை எல்லாம் கல்விக்குக் கொடுத்த வள்ளல். கொடுப்பதற்காகவே சம்பாதித்த வள்ளல்.

நமது தேசப்பிதா மகாத்மா காந்தி, பண்டித ஜவஹர்லால் நேரு, இராஜேந்திர பிரசாத், டாக்டர். இராதாகிருஷ்ணன், மூதறிஞர் இராஜாஜி, சர்.சி.வி. இராமன், பெருந்தலைவர் காமராஜர் ஆகியோரோடு நல்ல நட்பு கொண்டிருந்தார்.

"தென்னாட்டின் சமதர்ம முதலாளி" என்று ஜவஹர்லால் நேருவால் பாராட்டப்பட்டவர்.

ஆங்கில இலக்கியத்திலே புலமை வாய்ந்த அழகப்பருக்கு தமிழிலும் ஆர்வம் இருந்தது. கன்னித்தமிழ் பாடிக் கம்பன் புகழ் வளர்த்த கம்பன் அடிப்பொடி சா. கணேசனார், சீர்திருத்தச்செம்மல் சொ.முருகப்பா, பண்டிதமணி கதிரேசன் செட்டியார், தமிழ்க்கடல் இராய. சொ. ஆகியோருடன் ஏற்பட்ட நட்பு தமிழார்வம் பெருகுவதற்குக் காரணமாய் அமைந்தது.

நமனசமுத்திரத்திலே நடந்த ஒரு நிகழ்ச்சி

ஒரு நாள் சென்னையிலிருந்து காரைக்குடிக்கு வந்த அழகப்பர் நமனசமுத்திரம் ரயில்வே கேட் மூடியிருந்ததால் காரில் காத்துக்கொண்டு இருந்தார். அப்போது ஒரு கிழவி கூடை நிறைய வெள்ளரிப் பிஞ்சுகளுடன் அவரிடம் வந்தாள்.

அவர் யார் ? என்பது அவளுக்குத் தெரியாது. அவரிடம் அய்யா தருமதுரை காலையிலேயிருந்து வியாபாரம் ஆகல. உங்க ராசிக் கையால கால் ரூபாய்க்கு

Dr. K. VISWANATHAN. M.B.B.S.,



SUMATHI CLINIC

KUNNATHUR - 638 103. TIRUPUR-DT.

www.npnagarathar.com

வாங்குங்க அய்யா என்று கை நிறைய வெள்ளரிப் பிஞ்சுகளை அள்ளி காரின் உள்ளே நீட்டினாள்.

அந்த வயதான பெண்மணியைப் பரிவுடன் பார்த்தார் அழகப்பர். என் கை ராசியோ, இல்லையோ தெரியாது. ஒரு ரூபாய்க்கு வெள்ளரிப்பிஞ்சு கொடு என்று சிரித்தபடி கையை நீட்டினார் அவர். அவள் சந்தோஷம் பொங்க அவர் மடியிலே வெள்ளரிப்பிஞ் சுகளை வைத்தாள். அழகப்பர் தன் பையிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து அவளிடம் கொடுத்தார். அந்த நோட்டைப் பார்த்து திகைத்துப் போனாள் கிழவி. அந்த மாதிரி நோட்டை அவள் பார்த்ததே இல்லை.

அய்யா தருமதுரை, இது எத்தனை ரூபாய் நோட்டு? என்கிட்ட பாக்கி கொடுக்க சில்லரை இல்லையே என்று கவலையுடன் சொன்னாள் கிழவி. பாக்கி வேண்டாம். நீயே வச்சுக்க. இது நூறு ரூபாய் நோட்டு என்று அழகப்பர் சொன்னதும் அவளது பொக்கை வாய் விரிந்து பிளந்தது.

அய்யா தருமதுரை, நீங்க நல்லாயிருக்கனும் என்று கைகளை மேலே தூக்கிக் கும்பிட்டாள். என்னைக் கும்பிடாதே பாட்டி என்று தன் கரங்களால் அவளது கைகளை கீழே அழுத்தி கும்பிட்ட கைகளைப் பிரித்தார்.

இந்த நேரத்தில் ரயில் கேட்டைத் தாண்டி ஓடியது. கேட் கதவுகள் மெல்லத் திறந்ததும் இருபுறமும் வாகனங்கள் சென்றன. காரில் இருந்த படியே கிழவியைத் திரும்பிப் பார்த்தார் அழகப்பர். அவள் தன் கூடையிலிருந்த வெள்ளரிப்பிஞ்சுகளை சுற்றி நின்ற சிறுவர்கள், பெரியவர்களிடம் அள்ளி அள்ளிக் கொடுத்துக் கொண்டிருந்தாள் காசு எதுவும் வாங்காமலே. வள்ளலின் கைப்பட்ட ராசி அவளும் வள்ளலாகி விட்டாள்.

மறைந்த கவிஞர் வாலி அவர்கள் ஒரு திரைப்படப் பாடலில்

கொடுத்ததெல்லாம் கொடுத்தான் - அவன்
யாருக்காகக் கொடுத்தான்
ஒருத்தருக்கா கொடுத்தான் - அவன் ஊருக்காக கொடுத்தான்

என்று கூறினார். அப்படி ஊருக்காக அள்ளி அள்ளிக் கொடுத்தவர் வள்ளல் அழகப்பர்.

சங்ககாலக் கடையேழு வள்ளல்கள் அனைவரின் கொடைப் பண்புகளையும் ஒரு சேரக் கொண்ட வள்ளல் அழகப்பர்

'ஈதல் இசைபட வாழ்தல்' என்னும் வள்ளுவனின் வாக்குக்கு இலக்கணமன்றோ?

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று செம்மொழித் தமிழுக்குச் சிறப்புச் சேர்க்கும் திருக்குறள் வாழ்கிற போதே உதவி செய்பவன் தான் வாழ்பவன் என்கிறது.

எனவே, பிறருக்குக் கொடுத்து மகிழ்வோம். '***ஈதல் இசைபட வாழ்தல்***' என்னும் குறள் கூறும் நெறியின்படி வாழ்வோம்.

குடமுழுக்கு விழா சிறக்க வாழ்த்துக்கள்

கே. ஜி. மருத்துவமனை

47. மேட்டூர் ரோடு. ஈரோடு-11, (அபிராமி தியேட்டர் எதிர் ரோடு)

0424-4562268, 2252268

kg nursing home

UROLOGY ANDROLOGY

Dr.R.S. பாலசுந்தரம்

MS. FAIS.,FIAGES.,FICS., Regn. No.31572
லேப்ராஸ்கோபிக் & எண்டாஸ்கோப்பிக்
பொது அறுவை சிகிச்சை நிபுணர்

Dr.K. தமிழரசி

M.B.B.S. D.G.O... Regn. No. 34255
லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சை
மகளிர் & மகப்பேறு மருத்துவ நிபுணர்

Dr.N. லக்ஷ்மி கிருஷ்ணா

M.B.B.S., D.G.O., DNB (O & G)., MNAMS., FMAS.,
Regn. No. 86931
லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சை
மகளிர் & மகப்பேறு மருத்துவ நிபுணர்

Dr.B. பிரவீன் சுந்தர்

MS MCh(URO), DNB (URO), MNMAS, FMAS Regn. No. 88565
சிறுநீரக சிறப்பு அறுவை சிகிச்சை நிபுணர்

ஞயம் பட உரை

M. குமரப்பன்
நற்சாந்துபட்டி

பேச்சு மனிதர்களுக்கு இறைவன் கொடுத்த வரம். அதை நாம் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். இனிமையான பேச்சு தான் வாழ்வின் உயர்வுக்கு அடிப்படை. நமது வாழ்வின் வெற்றியும், தோல்வியும் நமது பேச்சைப் பொறுத்தே அமைகிறது.

“ உலகத்தை எல்லாம் வசப்படுத்தும்

உபாயம் இன்சொல்” என்கிறார் கீதையில் கண்ணபிரான்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று

என்கிறார் நம் வள்ளுவப் பெருந்தகை.

அதாவது பிறருக்கு நன்மை தரும் சொற்கள் இருக்க கடுஞ்சொல் கூறுவது கனிகள் இருக்க காய்களைப் பறித்து உண்பதைப் போன்றதாகும்.

நபிகள் நாயகம் ஒருமுறை நண்பர்களோடு பேசிக்கொண்டு இருந்தார். அப்போது ஒருவர் கேட்டார். தாங்கள் அச்சம் கொள்ளும் பொருள் உலகில் ஏதேனும் உண்டா ? என்று

உண்டே நான் அச்சம் கொள்ளும் பொருள் இதுதான்! சொல்லிக்கொண்டே அப்பொருளைச் சுட்டிக்காட்டினார்.

அப்பொருள் வேறு எதுவுமில்லை. அவரது நாக்கு தான்.

நான்கு அங்குல நீளமுள்ள நாக்கு ஆறடி உயரமுள்ள மனிதர்களையும் வீழ்த்திவிடும். பேசாத வார்த்தைகள் என்றும் தீங்கு விளைவிப்பதில்லை

இறந்து விட்ட காலம் பிறந்து வருவதில்லை. பிறந்து விட்ட வார்த்தை இறந்து விடுவதில்லை.

பேசும்போது கவனமாகவும், எச்சரிக்கையாகவும் பேச வேண்டும். உள்ளத்தின் கதவுகளைத் திறக்கும் ஆற்றலும், அதை மூடிவிடும் ஆற்றலும் பேச்சுக்கு இருக்கிறது.

மனம் – எண்ணத்தின் பிறப்பிடம்

எண்ணம் வார்த்தைகளின் தாய்

வார்த்தை செயலின் உந்து சக்தி

இதைப் புரிந்து கொண்டால் தேவையற்ற வார்த்தைகள் வராது.

“நாநலம் என்னும் நலனுடைமை” என்பார் திருவள்ளுவர்

நாவன்மையை நானிலம் போற்றும். நலனுடைமை என்று கூறுவதன் பொருள் நாநலம் ஒரு நல்ல உடைமை. அதாவது நல்ல சொத்து. ஆகவே கவனமாகக் காப்பாற்ற வேண்டும்.

சொல்லாத சொல்லுக்கு விலையேதும் இல்லை

ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும்

ஒரு சொல் சினத்தை ஏற்படுத்தும், ஒரு சொல் ஆறுதல் தரும்.

ஒரு சொல் இன்பம் தரும், ஒரு சொல் துன்பம் தரும்.

எனவே ஒன்றைப் பேசுவதற்கு முன்னால் சிந்தித்துப் பேச வேண்டும்.

இராமாயணத்தில் ஒரு காட்சி

இராமனும், இலக்குவனும் கிஷ்கிந்தை மலைக்கு வருகின்றார்கள். தூரத்திலிருந்து சுக்ரீவன் அவர்களைப் பார்க்கின்றான். புதிதாக வரும் அவர்களை யாரென்று அறிய விரும்பி அனுமனை அனுப்பி வைக்கின்றான். இராம, இலக்குமணர் இருக்கும் இடத்தை அடைந்த அனுமன் அவர்கள் இருவரின் தோற்றத்தைக் கண்டவுடன் அவர்கள் வீரம் பொருந்தியவர்கள் என்று புரிந்து கொண்டான்.

இந்த நிலையில் அனுமன் இராமனைப் பார்த்து “யாரென விளம்புகேன் நான், என் குலத் தலைவர்க்கு உம்மை வீர! நீர் பணித்தீர்”! என்று கேட்டான். வார்த்தைகளில் அன்பும், மரியாதையும் தெளிவாகத் தென்பட்டது. “ நீர் பணித்தீர் “என்பதன் மூலம் கட்டளையிடுங்கள் என்று கூறி அவர்களைத் தலைவர்களாக ஏற்றுக்கொண்டதைப் புரியச் செய்தான்.

அடக்கமான மரியாதைமிக்க இவ்வார்த்தைகளைக் கேட்ட இராமன் “யார் கொல் இச் சொல்லின் செல்வன்” என்று வினவினான். ஒரு வரியிலேயே அனுமனது பேச்சுத் திறமையை அறிந்து கொண்ட இராமன் அனுமனைச் “சொல்லின் செல்வன்” என்று பாராட்டியது இராமனின் பேச்சுத் திறமையைக் காட்டுகிறது.

“தூய்மையில் இருந்தும் மௌனத்தில் இருந்தும் ஆற்றல் வாய்ந்த சொற்கள் பிறக்கின்றன” என்றார் சுவாமி விவேகானந்தர்.

இரணியனுடைய மகன் பிரகலாதன் திருமாலுடைய பக்தன். தன் மகன் அந்த ஆண்டவன் நாராயணனைப் புகழ்ந்து பேசும்போதெல்லாம் அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இகழ்ந்து பேசினான் இரணியன்.

“இறைவன் எங்கே இருக்கிறான்”? என்று இரணியன் கோபத்தோடு கேட்டான். இறைவன்

“தூணிலும் இருக்கிறான்”

“துரும்பிலும் இருக்கிறான்”

என்பதோடு “சொல்லிலும் இருக்கிறான்” என்று பதில் சொன்னான் பிரகலாதன். எவ்வளவு பெரிய உண்மை. ஆம்.” ஆண்டவன் சொல்லிலும் இருக்கிறான்” இனிமையான சொற்களில் அவன் இணைந்து இருக்கிறான். “சொல்லில் இனிமை வேண்டும்“ அந்த இன்சொல்லில் இறைவன் இருக்கிறான் என்பதை உணர வேண்டும்.

மனித உறவுகளின் மேன்மைமிக்க இனிய முகத்துடன் கூடிய இனிய பேச்சே சிறந்ததாகும். எனவே, வாழ்க்கையில் மேன்மேலும் உயர

அன்பாகப் பேசுங்கள்


பணிவுடன் பேசுங்கள்

கனிவுடன் பேசுங்கள்


அளவாகப் பேசுங்கள்

“ஞயம் பட உரை” என்றாள் ஔவை.

“மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்“ என்றான் பாரதி. ஒவ்வொரு சொல்லையும் மந்திரம் போல் பயன்படுத்திய மனிதர்களை இந்த உலகம் என்றும் போற்றியிருக்கிறது. இதயத்தில் எத்தனை வலி இருந்தாலும் இனிமையாகப் பேசுங்கள். உலகமே உங்களிடம் பேச ஆசைப்படும்.



OPEN DIE AND CLOSED DIE HOT FORGED AND MACHINED PARTS



Innoforge Pvt Ltd

Forging The Future

Best on Quality, Cost & Ontime

B2/2, SIDCO Industrial Estate, Phase I, Hosur,
Tamilnadu. Pin - 635 126. Phone: 7708000648 / 7904958142
Fax: 04344 - 420102 Email: mktg@innoforge.net

www.npnagarathar.com

அழகு

மீனா சிதம்பரம்
நச்சாந்துபட்டி.



சிவகாமி அம்மனும்
சிதம்பர ரேஸ்வரரும்
தவமாய்காட்சிதரும்
சன்னதிகள் பேரழகு!

நன்மைகள் பலவற்றை
நலமாய் அருளுகின்ற
ஊரணிப் பிள்ளையாரின்
உதவிகள் பெருமளவு!

ரம்மியமாய் காட்சிதரும்
ராஜ கோபுரத்தின்
சிற்பங்கள் அத்தனையும்
செதுக்கிய கையழகு!

நல்லதொரு ஊராம்
நற்சாந்து பட்டியில்
நாமெல்லாம் வசிப்பது
நமக்கே அழகு!

WITH BEST WISHES



அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர்
திருக்கோவில் குடமுழுக்கு சிறப்பாக நடைபெற
எங்களது மணமார்ந்த வாழ்த்துக்கள்

RM. PALANIAPPAN. & PL. SETHU.

NACHANDUPATTI - 622 404

www.npnagarathar.com

நற்சாந்துபட்டியின் சிறப்பு

மீனா செல்வம்
வி.லெட்சுமிபுரம்

அற்புதங்கள் நிறைந்த ஊர்

ஆனந்தத்தைக் கொடுக்கும் ஊர்

இந்திரப்பிரஸ்தம் போன்ற ஊர்

ஈகை உள்ளம் கொண்டோர் நிறைந்த ஊர்

உயர்ந்தவர்கள் உள்ள ஊர்

ஊக்கமுள்ள இளைஞர்களைக் கொண்ட ஊர்

எங்கும் செழிப்பான ஊர்

ஏந்திலைகளை பெற்ற ஊர்

ஐங்கரனின் ஆசி பெற்ற ஊர்

ஒற்றுமைக்கு உதாரணமான ஊர்


ஓங்காரப் பொருளான ஊர்

ஔஷதம் அருளும் ஊர்

அ**ஃ**தே எங்கள் ஊர்

நற்சாந்துபட்டி என்னும் நான் பிறந்த ஊர்

www.npnagarathar.com



ALPHA POLYMERS

PL. YEGAPPAN,
VENTHANPATTI.

MANUFACTURER:

ALL KINDS OF HOSES & WATER TANKS

UNIT I : **SALEM**
UNIT II : **CHENNAI**
UNIT III : **HYDERABAD**

DEPOT : **BANGALORE, VIJAYAWADA MADURAI, TRICHY**

www.alphapolymers.in

Since 1990

An ISO 9001 Certified Company
ALPHA POLYMERS
SINCE 1990

www.npnagarathar.com

இணங்கி வாழ்வது எப்படி?

அக்ரி பெரி திருப்பதி
நற்சாந்துபட்டி

முன்னுரை:

இணங்கி வாழ்வது எப்படி எனச் சிந்திக்கும் போது முதலில் குடும்பத்தில் இணங்கி வாழ வேண்டும். குடும்ப உறுப்பினர்களுக்குள்ளேயே எத்தனையோ கருத்து வேறுபாடுகள். அப்பா மகனுக்கு பிரச்சினை. அண்ணன் தம்பிக்கு பிரச்சினை. கணவன் மனைவிக்குள்ளே பிரச்சினை. இந்த பிரச்சினைகளைத் தீர்க்கனும்னா ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு விட்டுக்கொடுத்து போகனும். நம்ம குடும்பம்னு ஒற்றுமையா இருக்கனும். இந்திய குடும்ப அமைப்பு மிகவும் சிறந்தது என மேலைநாடுகளில் போற்றப்படுகிறது. ஒவ்வொரு குடும்பமும் ஒற்றுமையா இருந்தா குடும்பம் சிறக்க ஊர் சிறக்க மாவட்டம் சிறக்க நாடு சிறப்படையும்.

இல்லறம் வெற்றி பெற:

கணவன் மனைவி உறவு ரொம்ப முக்கியம். கணவன் சொல்வதை மனைவி கேட்கனும் (அல்லது) மனைவி சொல்வதை கணவன் கேட்கனும். அல்லது 2 பேரும் சேர்ந்து முடிவு எடுக்கனும். இல்லைனா எப்போதுமே சண்டைதான் நடக்கும். கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு நான் என்பதை மறந்து நாம் என்று எண்ணவேண்டும். கணவன் நான் ஜெயித்தேன் என்றால் அங்கு மிருகம் ஜெயித்ததாக அர்த்தம். மனைவி நான் தான் ஜெயித்தேன் என்றால் அங்கு பிடாரி குடியிருப்பதாக அர்த்தம். இருவரும் தோற்றுப் போகத் தயாராக இருந்தால் அந்த வீட்டில் இல்லறம் ஜெயித்ததாக அர்த்தம். குழந்தைகள் பெற்றோர்களை முன்மாதிரியாக நினைத்து வாழ்வதற்கு அவர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்வது அவசியம்.

அவமானம் கண்டு அஞ்சுதல் கூடாது:

பெரிய மனிதர்களுக்கு பெரிய அவமானங்கள் வரத்தான் செய்யும். தென் ஆப்பிரிக்காவில் ரயில் வண்டியில் ஏறியபோது வெள்ளைக்கார போலீஸ் காந்தியடிகளை கீழே தள்ளினான். அவர் நாட்டுக்காக பொறுத்துக் கொண்டு விடுதலைக்காக அரும்பாடுபட்டார். வெள்ளையன் அவரை ரயிலில் இருந்து அப்புறப்படுத்தினான். ஆனால் காந்தி வெள்ளையனை இந்தியாவில் இருந்தே அப்புறப்படுத்தினார்.

அன்னை தெரசா ஏழை மக்களுக்காக ஒரு தனவந்தரிடம் கையேந்தினார். அதற்கு அந்த செல்வந்தர் ஏன் இவ்வாறு பிச்சை எடுக்கிறீர்கள் அவர்கள் உழைத்துச் சம்பாதிக்க முடியாதா எனக் கூறி அவரது கைகளில் காரி உமிழ்ந்தார். அப்போதும் அன்னை தெரசா கோபமின்றி இந்த எச்சில் எனக்குப் போதும். என் ஏழை மக்களுக்கு என்ன கொடுக்கப் போகிறீர்கள் என்று கேட்டார். அதனால் மனம் மாறிய அந்த செல்வந்தர் பின்னர், இடம், பொருள், வீடு கொடுத்து உதவினார். அதைப்போல அப்ரஹாம் லிங்கன் பல தோல்விகளுக்குப் பிறகு தனது 52 வயதில் அமெரிக்காவின் ஜனாதிபதியானார்.

எல்லோருக்கும் இதுபோல அவமானங்கள் நடக்கலாம். அதை உள் வாங்கி பாடம் படித்துக் கொண்டு வழி அமைத்துக் கொள்பவன் வாழ்வு இனிதாக இருக்கும்.

சைவம் நல்லது:

சைவ உணவில் எல்லா சத்துக்களும் இருக்கிறது. ஐரோப்பியர்கள் கூட இப்போது சைவ உணவை விரும்பிச் சாப்பிடுகிறார்கள். சைவ உணவு சாப்பிடும் குதிரையின் சக்தி எவ்வளவு இருக்கிறது. கீரை, பச்சைக் காய்கறிகள், பழங்கள் போன்ற இயற்கை உணவு மிகவும் நல்லது. ஒருவன் மீனைப் பிடிக்க புழுவை தூண்டிலில் இட்டு மீனைப் பிடிக்கிறான். அப்போது அந்த புழு துடிக்கிறது. பின்னர் மீனைப் பிடித்து வெளியே எடுத்ததும் மீன் துடிக்கிறது. மனிதன் இதனைப் பார்த்த பின்பும் மீனைச் சாப்பிட்டால் அவன் எப்படி துடிக்கப் போகிறானோ தெரியவில்லை என ஒரு கவிஞர் கூறியுள்ளார்.

“தன்னூண் பெருக்கற்குத் தான்பிரிது ஊண்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்” என வள்ளுவர் கூறியுளார்.

முயற்சி பயிற்சியாக வேண்டும்:

கனி விழாது போனாலும் கல் எறிவதை நிறுத்திவிடாதே என்றான் ஓர் அறிஞன். நம்முடைய முயற்சிகள் தோற்கலாம் ஆனால் நாம் முயற்சிப்பதில் தோற்கக்கூடாது. வெற்றி பெறுவதைவிட வெற்றி பெற முயற்சிப்பதில் தான் இன்பம் இருக்கிறது.

“தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்“

என்று வள்ளுவர் கூறியுள்ளார். தனது நிலைக்கு விதிதான் காரணம் என சோம்பிக் கிடந்தால் சிலந்தியும் நம்மைச் சிறை பிடிக்கும் “வெறுங்கை என்பது மூடத்தனம் 10 விரல்கள் மூலதனம்” என்றான் ஒரு புதுக் கவிஞன். மனித முயற்சியினால் இன்று பிரமிக்கத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஐசக் நியூட்டன் ஆப்பிள் கீழே விழுவதைப் பார்த்து பூமிக்கு ஈர்ப்பு சக்தி உள்ளது என்பதைக் கண்டறிந்தார். மின் விளக்கை கண்டறிந்த எடிசன் 1000முறை தோல்வி கண்டு தான் பெருவெற்றி கண்டார். அப்ரஹாம் லிங்கன் தோல்விகளை கண்டு துவண்டு விடாமல்

விடாமுயற்சியுடன் செயல்பட்டதால் தான் 52வது வயதில் அமெரிக்காவின் ஜனாதிபதியானார்.

நம்பிக்கை:

நம்பிக்கைதான் மனித வாழ்க்கைக்கு முக்கியம். என்னால் முடியும் என்று நினைப்பது தன்னம்பிக்கை. என்னால் மட்டுமே முடியும் என்று நினைப்பது ஆணவம். என்னால் எதுவும் முடியாது என்று நினைப்பது தாழ்வு மனப்பான்மை. "நீ என்னவாக வேண்டும் என்று ஏங்கித் தவிக்கிறாயோ அதுவாகவே நீ ஆகிறாய்" என்பது பகவத் கீதை. மனதின் சக்தி மாபெரும் சக்தி.

மனிதநேயம்:

மனித வாழ்க்கை என்பது மக்கள் சமுதாயத்திற்கு தொண்டு செய்வது. தொண்டு செய்யாத வாழ்வு மிருக வாழ்க்கைக்கு சமம் என்பது பெரியார் வாக்கு. மனிதன் குரங்கில் இருந்து தோன்றினான். ஆயிரம் ஆண்டுகளில் எத்தனையோ ஏற்றங்கள் மாற்றங்கள். காலால் நடந்து சென்ற மனிதன் ஒலியை விட இருமடங்கு வேகமாகச் செல்லும் விமானத்தைக் கண்டுபிடித்துவிட்டான். இருப்பினும் இன்னும் மனிதன் மனிதனாக வாழக் கற்றுக் கொள்ளவில்லை. மனிதம் என்பது அடுத்தவர் துன்பம் துடைப்பதில் அடங்கியிருக்கிறது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை டாக்டராக்கனும் எஞ்சீனியராக்கனும் IAS ஆக்கனும். ஆபிஸர் ஆக்கனும், அரசியல்வாதியாக்கனும்னு நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் எப்போதும் மனிதர்களாக மனித உணர்வு படைத்தவர்களாக ஆக்கனும்னு நினைக்கிறதில்லை. ஆகவே சமுதாயம் இருண்டு கிடக்கிறது. மனிதநேயத்தை காத்து வளர்த்திட வேண்டும். நல்ல எண்ணங்கள் சொற்களாக மாறி செயலுக்கு அடித்தளம் அமைக்கிறது. செயல் தான் பழக்கங்களை உருவாக்குகிறது. பழக்கங்களே பண்புகளாக மலர்கின்றன. மனிதநேயப் பண்புகளைப் பராமரிக்க வேண்டும். பயிற்சியும் முயற்சியும் வாழ்க்கைப் பறவையின் சிறகுகள். அடுத்தவர் இன்பத்தில் இன்பம் காண்பதுதான் மனித நேயம்

மகிழ்ச்சியாய் வாழ:

உள்ளத்தில் உண்மையும், வாக்கில் தெளிவும், தொழிலில் திறமையும், தொண்டில் ஆர்வமும், துன்பத்தில் சகிப்புத் தன்மையும் இருந்தால் மகிழ்ச்சியாக வாழலாம். மனதாலும், வாக்காலும் காயத்தாலும் பிற உயிர்களுக்கு நன்மை செய்வோமானால் நாமும் துன்பமில்லாமல் இன்பமாக வாழ முடியும். தொண்டு வாழ்வு நம்மை உயர்த்தும். தாழவிடாது. இன்பம் துன்பம், பிறப்பு, இறப்பு, நிந்தனை, புகழ்ச்சி இவற்றை சமமாக எவன் கொண்டுள்ளானோ அவனே மகிழ்ச்சியாக இருப்பான் என்றார் மகாவீரர்.

ஒற்றுமை இந்தியா ஒரு மிகப் பெரிய ஜனநாயக நாடு. 2000 மைல் நீளமும் 2500 மைல் அகலமும் கொண்டது. இந்தியாவில் பல இன, மொழி பேசும் மக்கள்

SRI LAXMI DRUG STORES

(மருந்து மொத்த வியாபாரம்)





SV. LAKSHMANAN & FAMILY

No.21, Bharathiyar Street, Karur - 639 001.
Mobile: 98426 48161 Phone: 04324 263124

www.npnagarathar.com

இருந்தாலும் ஓரின மக்கள் என்ற உணர்வோடு வாழ்வதை நம் தேசியக்கவி பாரதி,

“செப்புமொழி 18 உடையாள்

ஆனால் சிந்தனை ஒன்றுடையாள்” என பாடியுள்ளார். ‘ வெள்ளையன் பீரங்கியுடன் நின்றான். ஆனால் நம் காந்தியடிகள் ஈரங்கியுடன் நின்று கத்தியின்றி ரத்தமின்றி நாட்டுக்கு சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தார். ஆனால் அவருக்குப் பின்னால் நின்றது 30 கோடி மக்கள் எனும் ஜனசக்தி. அந்த ஒற்றுமை இப்போது குலைந்து வருகிறது. மாவட்டத்துக்கு மாவட்டம், மாநிலங்களுக்குள்ளே, அண்டை நாடுகளில் இப்ப நிறைய பிரச்சினைகள் இருக்கு, அந்த பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து நாம ஒற்றுமையா இருந்து புதிய பாரதத்தை படைக்க வேண்டியது ஓவ்வொரு இந்தியனின் கடமை. நாட்டுக்காக நாம் நிறையத் தியாகம் செய்ய வேண்டும்.

முடிவுரை

நகரத்தார்கள் மனித நேயம் மிக்கவர்கள் இந்தியாவின் ஜனத்தொகை 130 கோடி, தமிழகத்தின் ஜனத்தொகை 7.50 கோடி, அதில் நம்ம ஜனத்தொகை 1.5 லட்சம் மட்டுமே. 1% கூட இல்லை. கோவில், பாடசாலை, அன்னசத்திரம், நந்தவனம், பசுமடம், மருத்துவம் போன்ற பணிகளுக்கு நம் முன்னோர்கள் அளித்தது பலகோடி. காசியில் இருந்து கன்னியாகுமரி வரை, வேங்கடத்தில் இருந்து குமரி வரை நம்மவர்கள் செய்த தர்மம் இன்று நம் தலை காக்கிறது.

“மலையளவு பொருள் தந்தார் அறத்தை காக்க
மக்களைப் போல் கடவுளுக்கும் பங்கு வைத்தார்
நிலை உயர்ந்து நின்றவர்கள் இன்று தாழ்ந்தார்
நேரத்தில் மறுபடியும் எழுந்து நிற்பார்”.

என்று கண்ணதாசன் கூறியதற்கிணங்க நம் இளைஞர்கள் இன்று நம் சமூகத்தை எழுந்து நிற்கச் செய்துள்ளனர். இன்று நம்மிடம் தேவை ஒற்றுமை மட்டுமே. நம் ஒற்றுமையை எடுத்துக் காட்டுவது இதுபோன்ற கும்பாபிஷேகம் மற்றும் அறப்பணிகள் மட்டுமே. ஆகவே அறப் பணிகளைத் தொடர்வோம், வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோம்.

கணியன் பூங்குன்றனார்

திருமதி **வள்ளிமயில் நாச்சியப்பன்**
நற்சாந்துபட்டி

சிவகங்கை மாவட்டம் நெற்குப்பை அடுத்த மகிபாலன்பட்டி சாலையில் உள்ள ஒரு சிறு கிராமம் பூங்குன்றம். இங்கு பிறந்த கணியன் பூங்குன்றனார் எழுதிய பழமையான பாடல் இது.

யாதும் ஊரே யாவரும் கேளிர்

இதன் முதல் வரி மட்டுமே பிரபலம். பாடலின் எல்லா வரிகளும் வாழ்வின் முழுத் தத்துவத்தைச் சொல்கிறது.

முழுப் பாடலும் அதன் பொருளும் .

“யாதும் ஊரே; யாவரும் கேளிர்,
தீதும் நன்றும் பிறர்தர வாரா,
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன.
சாதலும் புதுவது அன்றே,
வாழ்தல் இனிது என மகிழ்ந்தன்றும் இலமே.
முனிவின் இன்னாது என்றலும் இலமே
மின்னொடு வானம் தண்துளி தலைஇ யானாது
கல்பொருது மிரங்கு மல்லல் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப்படூஉம் என்பது திறவோர்காட்சியின் தெளிந்தனம்
ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே”.

பொருள்

“யாதும் ஊரே யாவரும் கேளிர்”

எல்லா ஊரும் எனது ஊர். எல்லா மக்களும் எனக்கு உறவினர் என்று நினைத்து, அன்பே வாழ்வின் அடிப்படை, ஆதாரம் என்று வாழ்ந்தால், இந்த வாழ்வு நமக்கு எவ்வளவு இனிமையானது, சுகமானது.

“தீதும் நன்றும் பிறர் தர வாரா”

‘தீமையும் நன்மையும் அடுத்தவரால் வருவதில்லை’ எனும் உண்மையை உணர்ந்தால் சக மனிதர்களிடம் விருப்பு வெறுப்பு இல்லா ஒரு சம நிலை சார்ந்த வாழ்வு கிட்டும்.

நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன

துன்பமும் ஆறுதலும் கூட மற்றவர் தருவதில்லை. மனம் பக்குவப்பட்டால், அமைதி அங்கேயே கிட்டும்.

“சாதல் புதுவது அன்றே”

பிறந்த நாள் ஒன்று உண்டெனில், இறக்கும் நாளும் ஒன்று உண்டு. இறப்பு புதியதல்ல. அது இயற்கையானது. எல்லோருக்கும் பொதுவானது. இந்த உண்மையை உணர்ந்தும், உள் வாங்கியும் வாழ்ந்தால் எதற்கும் அஞ்சாமல் வாழ்க்கையை வாழும் வரை ரசிக்கலாம்.

“வாழ்தல் இனிது என மகிழ்ந்தன்றும் இலமே முனிவின் இன்னாது என்றலும் இலமே”

இந்த வாழ்க்கையில் எது, எவர்க்கு, எப்போது, என்ன ஆகும் என்று எவர்க்கும் தெரியாது. இந்த வாழ்க்கை மிகவும் நிலை அற்றது. அதனால், இன்பம் வந்தால் மிக்க மகிழ்வதும் வேண்டாம். துன்பம் வந்தால் வாழ்க்கையை வெறுக்கவும் வேண்டாம். வாழ்க்கையின் இயல்பை உணர்ந்து இயல்பாய் வாழ்வோம்.

மின்னொடு வானம் தண்துளி தலைஇ யானாது கல்பொருது மிரங்கு மல்லல் பேரியாற்று நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர் முறைவழிப் படூஉம் என்பது திறவோர் காட்சியின் தெளிந்தனம்“

இந்த வானம் நெருப்பாய், மின்னலையும் தருகிறது. நாம் வாழ மழையையும் தருகிறது. இயற்கை வழியில் அது அது அதன் பணியைச் செய்கிறது. ஆற்று வெள்ளத்தில், கற்களோடு, அடித்து முட்டிச் செல்லும் படகு போல, வாழ்க்கையும், சங்கடங்களில் அவரவர் ஊழ்படி அதன் வழியில் அடிபட்டு போய்க்கொண்டு இருக்கும். இது இயல்பு என மனத்தெளிவு கொள்ளல் வேண்டும்.

“ஆதலின் மாட்சியின் பெரியோரை வியத்தலும் இலமே; சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே”

இந்தத் தெளிவு பெற்றால், பெரிய நிலையில் உள்ள பெரியவர்களைப் பார்த்து மிகவும் வியந்து பாராட்டவும் வேண்டாம். சிறிய நிலையில் உள்ள சிறியவர்களைப் பார்த்து ஏளனம் செய்து இகழ்வதும் வேண்டாம். அவரவர் வாழ்வு அவரவர்க்கு. அவற்றில் அவரவர்கள் பெரியவர்கள்.

இதை விட வேறு எவர் வாழ்க்கைப் பாடத்தை சொல்லித்தர முடியும்?



M. MANJUNATHAN B.E.,
Chairman & Managing Director
Cell : 9176876781



M.N. INDUSTRIES

Manufacturers of Roller Conveyors, Aero Space, Tex Parts, Food Industries

Automobile - Precision Turned and Milled Components

GSTIN : 33ANRPM9852E1ZK

#103. Padavattamman Industrial Estate, Chennai-600 098.

E-mail: md.mnindustries@gmail.com

Website : www.mnindustries.in

நகரத்தார்களின் வணிக வரலாறு

சீனிவாசன் அரவிந்த் மெய்யப்பன் B.E.,
காக்னிஸண்ட் டெக்னாலஜி சொல்லூஷன்ஸ்,
பிரைட்டன், லண்டன்

தமிழ்நாட்டின் தற்போதைய சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 96 (74) ஊர்களைப் பூர்விகமாகக் கொண்டவர்கள் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள். இவர்கள் தொன்று தொட்டு வணிகத்தை முதன்மை தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். வணிகத்தையும் இந்து சமயத்தையும் வெளிநாடுகட்கு எடுத்து சென்றதில் நகரத்தார்கட்கு முக்கிய பங்குண்டு.

நமது செட்டியார்கள் கால் பதிக்காத துறைகளே இல்லை. அவைகளில் குறிப்பிடத்தக்கவை வர்த்தகம், வங்கிப் பரிவர்த்தனை, கல்வி மற்றும் திரைப்படத்துறை ஆகும்.

10ம் நூற்றாண்டில் உப்பு, மற்றும் அரிசி வியாபாரம் செய்யத் தொடங்கி அதிலும் வெற்றி கண்டனர். இந்தியாவைத் தவிர்த்து, பர்மா (இன்றைய மியன்மார்) மலேசியா, கொழும்பு, கம்போடியா, வியட்நாம் போன்ற ஆசிய நாடுகளில் தங்களின் வணிகத் தொழிலை விரிவு படுத்தினர். ஒரு காலகட்டத்தில் பர்மாவின் மூன்றில் ஒரு பங்கு வயல்களை நகரத்தார் தம்வசம் வைத்திருந்ததாகச் சொல்லப்படுகிறது.

இரண்டாம் உலகப் போரின் இறுதியில் இந்தியா திரும்பிய நகரத்தார். வங்கி பரிவர்த்தனையில் கோலோச்சினர். வரவு, செலவு, கடன், பற்று போன்ற வார்த்தைகளை வழக்கில் கொண்டு வந்தவர்கள் நகரத்தார்.

இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மதுரா வங்கி போன்ற முக்கியமான வங்கிகளைத் துவக்கியவர்கள் நகரத்தார். முருகப்பா குழுமம், ஸ்பிக், ஏவிஎம் நிறுவனம், சௌத் இந்தியா கார்ப்பரேஷன், அழகப்பா கல்வி நிலையங்கள், தியாகராசர் கல்வி நிலையங்கள், அண்ணாமலை பல்கலைக்கழகம் போன்றவைகள் நகரத்தார்களின் பெயர் சொல்லும் நிறுவனங்களாகும்.

இத்தனை துறைகளில் கால் பதித்த போதிலும் நகரத்தார்கள் ஒரு போதும் தமது கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் கைவிட்டதில்லை.

இன்றைய நகரத்தார்களுள் பலர் பொறியியல் மருத்துவம் சார்ந்த துறைகளை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்து இருந்தாலும் நம் முன்னோர்கட்கு பெருமை சேர்க்கும் வகையில் வர்த்தகம் போன்ற துறைகளிலும் நமது பங்களிப்பைத் தொடரவேண்டும்.

With Best Compliments From



CHINTHAMANI
SALES CORPORATION

Distributor for:

TI CYCLES OF INDIA
Cycle Spares

PARAMOUNT INDUSTRIES
Rubber Solution

& **All Ludhiana Cycle Spares Dealer**



No. 5, 5th Cross, Ramalinga Nagar South Extension, Vayalur Road,
Trichy-620 017. Mobile: 94436 45278

சில பொன்மொழிகள்

திருமதி **முத்து மீனா மாணிக்கம்**
புதுப்பட்டி

“ஒவ்வொரு துளி நீரையும் மதியுங்கள்
அது விண்ணில் இருந்து வந்தாலும் சரி
கண்ணில் இருந்து வந்தாலும் சரி”

“பிறருக்குக் கொடுக்கப் பணம் இல்லை
என்பதற்காக வருந்தாதே
பிறரைக் கெடுக்கும் குணம்
உன்னிடம் இல்லை என்பதால்
நீயும் குணத்தால் கோடீஸ்வரன் தான்”

“கோபமும், புயலும் ஓரே மாதிரிதான்
அடங்கிய பிறகுதான் தெரியும் அடைந்த நஷ்டம்
எவ்வளவு என்று”


“எதிர்பார்ப்பு இல்லாமல் மற்றவர்களைப்
பார்த்துப் புன்னகை செய்யுங்கள்
உங்களைவிட அழகானவர்கள்
இந்த உலகில் யாருமில்லை .”

“எத்தனை சிறப்பாக குதிரை
வண்டியை இழுத்தாலும்
அதற்கு சாட்டையடி உண்டு.
அதே போல் எத்தனை சிறந்த மனிதனாக
நீ இருந்தாலும் உனக்கும் விமர்சனம் உண்டு ”









Best Wishes From

KARPAGA VINAYAGA EDUCATIONAL GROUP

MEDICINE
DENTISTRY
ENGINEERING
NURSING

PUDUKKOTTAI CAMPUS

J.J College of Arts and Science. (Autonomous)

J.J. Teacher Training Institute.

J.J. College of Education.

J.J. Institute of Nursing.

Karpaga Vinayaga College of Nursing.

Karpaga Vinayaga Institute of Management (KIM).

Karpaga Vinayaga Matric Higher Secondary School.

J. J. Nagar, Sivapuram Post,
Pudukkottai – 622 422.
Phone: 04322 - 260103, 261801, 802

E-mail: jjcollege.pdkt@gmail.com,
Website: jjc.kvet.in

CHENNAI CAMPUS

Karpaga Vinayaga College of Engineering and Technology.

Karpaga Vinayaga Institute of Medical Sciences.

Karpaga Vinayaga Institute of Dental Sciences.

Karpaga Vinayaga General Hospital.

Karpaga Vinayaga College of Nursing

Karpaga Vinayaga Global School.

G.S.T. Road, Palayanoor Post,
Madhuranthagam Taluk,
Chennai – 603 308.

''கடவுளைப் பார்த்ததில்லை என்று சொல்லாதீர்கள்
உங்கள் கஷ்டத்தில் உதவும்
கருணை உள்ளம் கொண்ட
அனைவரும் கடவுளே"

"விடை தேடிய பயணம் தான் வாழ்க்கை
சிலருக்கு விடை தெரியவில்லை
பலருக்கு வினாவே புரியவில்லை ."

"வீசுகின்ற வாசனையைப் பொறுத்துத்தான்
மலர்கள் மதிக்கப்படுகின்றன.
பேசுகின்ற வார்த்தையைப் பொறுத்துத்தான்
மனிதர்கள் மதிக்கப்படுகிறார்கள்"

"மனம் திறந்து பேசுங்கள்.
மனதில் பட்டதை எல்லாம் பேசாதீர்கள்.
சிலர் புரிந்து கொள்வார்கள்.
சிலர் பிரிந்து செல்வார்கள்."

"கால் நனையாமல் கப்பலில்
கடல் கடந்தவர்கள் உண்டு.
ஆனால்
கண் நனையாமல் வாழ்க்கையைக்
கடந்தவர்கள் யாரும் இல்லை."

www.npnagarathar.com

AARROW Construction



புதிய வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள், கடைகள்,
அழகாக தரமாக கட்டி தரப்படும்.

Er. க. முத்து மெய்யப்பன். செல்: 90030 42756

CRYSTAL PROPERTY MAINTANANCE



CRYSTAL AGENCIES
VENLAC PAINTS & PUTTY

செட்டிநாடு வீடுகளை
பழமை மாறாமல் புதுப்பித்து
தர நம்பிக்கையான நிறுவனம்
உரிமை
மு. வள்ளிமயில்
செல் 73730 65124

1043, Periyur Nagar, Rajagopalapuram(PO), Pudukkottai - 622003.

ஆலயமும் வழிபாடும்

முனைவர். லெ.வமீரவன்
முதல்வர் (ஓய்வு) அரசு கலைக்கல்லூரி

ஆலயம் என்பதை ஆ + லயம் எனப் பிரிக்கலாம். "ஆ" என்பதற்கு ஆன்மா என்று பொருள். லயம் என்பதற்கு லயிப்பதற்கு அல்லது சேருவதற்கு உரியது என்பது பொருள். ஆகவே, ஆலயம் என்பதற்கு கடவுளது திருவடியில் ஆன்மா லயிப்பதற்கு உரிய இடம் என்பது பொருள். ஆ என்பது ஆணவ மலத்தையும் லயம் என்பது அடங்கியிருத்தலையும் குறிக்கின்றமையால் ஆலயம் என்பதற்கு ஆணவ மலம் அடங்குவதற்குரிய இடம் என்றும் பொருள் கூறலாம். இதற்குக் கோயில் என்றும் ஒரு பெயர் உண்டு. அதனைக் கோ + இல் எனப்பிரித்து, கோ–கடவுள், இல்–தங்குமிடம், கடவுள் தங்குமிடம் எனப் பொருள் கூறுவர்.

பூமியினடியில் எங்கும் வியாபித்திருக்கும் தண்ணீரை நமக்கு உபயோகப்படுத்த வேண்டுமானால், ஒரு கிணறு வெட்டிக் கட்ட வேண்டியிருக்கிறது. தண்ணீர் பூமியின் அடியில் எங்கும் நிறைந்திருந்தாலும், கிணற்றினாலேயே நமக்குத் தாகவிடாய் தீருகிறது. எலக்டரான் (மின்சாரம்) ஆகாயமெங்கும் வியாபித்திருந்தாலும் எலக்டரிசிட்டி பவர் ஹவுஸ் (மின்சார நிலையம்) மூலமாகவே, நமக்கு அதனை அனுபவிக்க முடிகிறது. இவற்றைப்போல, கடவுள் எங்கும் நிறைந்திருந்தாலும் ஆலயங்களில் விசேஷமாக நின்று அருள் செய்கின்றார்.

இந்துமத ஆலயங்கள் ஒவ்வொன்றும், முதல் நூல்களின்படியே இயற்றப்பட்டுத் தத்துவ ஞானத்தை உண்டாக்குவதற்கு இன்றியமையாக் கருவிகளாய் விளங்குகின்றன.

கோபுரம், கொடிமரம், பிரகாரங்கள், மண்டபங்கள் முதலியன சிறந்த தத்துவங்களை விளக்கும்படியே அமைக்கப்பட்டுள்ளன. ஆலயங்களில் நடைபெறும் பஞ் சகத்தி, பூஜை நைவேத்தியம், தீபாராதனை, உற்சவம் முதலியனவும் சிறந்த கருத்துக்களை வெளிக்காட்டுவனவாக இருக்கின்றன. கோபுரம் ஸ்தூல லிங்கத்தை உணர்த்துகின்றது. சரியை கிரியை உடையவர்களை யோகிகளாக்க ஆலயங்கள் பயன்படுகின்றன. கோபுரதரிசனம். கடவுளது பாத தரிசனம் ஆகும்.

கோயிலின் உள்ளிருக்கும் ஐந்து பிரகாரங்கள் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்துவித கோசங்களையும் குறிக்கின்றன.

மூன்று பிரகாரங்கள் ஐந்து கோசங்களினாலான ஸ்தூல சூட்சும காரணம் என்னும் மூவகைச் சரீரங்களை விளக்குகின்றன. வழிபடுவோர் மூன்று முறை, ஐந்து முறை பிரகாரங்களைச் சுற்ற வேண்டுமென்பது, பஞ்ச கோசங்களையும் மூவகைச் சரீரங்களையும் கடந்து இறைவன் விளங்குகின்றான் என்பதை நினைப்பதற்காகும்.

கர்ப்பக்கிரகம் என்பது பிரதான மூர்த்தியை வைத்து வணங்கப்படும் இடம். இதற்கு மூலஸ்தானம் என்று பெயர் உண்டு. இதன் உண்மை எல்லா உலகங்களையும் படைத்ததற்குக் காரணமான மூலப்பிரகிருதியின் இடம் என்பதாம். அரூபியாகிய கடவுள் ரூபாரூபியாகிறார்.

அர்த்த மண்டபம், மஹா மண்டபம், ஸ்நபந மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம் என்னும் மண்டபங்கள் நிவிருத்தி, பிரிதிஷ்டை , வித்தியை, சாந்தி சாந்தியாதீதம் என்னும் கலைகளை உணர்த்துகின்றன.

ஆலயத்திற்குச் செல்கையில் தேக சுத்தி செய்து, மன சுத்தியோடு செல்வது நல்லது. கோயிலின் பக்கத்திற் சென்றதும் கை கால்களை கழுவிக் கொண்டு கோபுரத்தின் முன் சென்று நின்று, இரண்டு கரங்களையும் தலைமேற் குவித்து, மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டும் அருட் பாக்களைப் பாடிக் கொண்டும், வேறு விசாரங்கள் ஒன்றுமில்லாமல், கோபுரத்தை ஸ்தூல லிங்கமாகவும், கடவுள் பாதங்களாகவும் பாவித்து வணங்கிக் கோயிலுக்குள் போக வேண்டும்.

கொடிமரத்தின் பக்கத்தில் சென்றதும் புருஷர்கள் அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும். அஷ்டாங்க நமஸ்காரமாவது தலை, செவியிரண்டு, கையிரண்டு, புஜங்களிரண்டு , மோவாய்க்கட்டை ஆகிய எட்டு அவயங்களும் பூமியிற்படும்படி வணங்குதலாம். பஞ்சாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு, முழங்காலிரண்டு ஆகிய ஐந்து அவயங்களும் பூமியிற்படும்படி நமஸ்கரித்தலாம். இறைவனை அடைந்தவர் அழிவற்ற ஆனந்தத்தில் நிலைத்திருப்பர் என நினைத்து கொடிமரத்தை சூக்ஷம லிங்கமாக எண்ணி வணங்க வேண்டும்.

கொடிமர தரிசனம் செய்த பிறகு, மூல மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு மூன்று தரம் வலம் வந்து வணங்கி உட்செல்லுவதற்காகப் பலி பீடத்தின் அருகிற் செல்ல வேண்டும். நம்மிடமிருக்கும் காமம், குரோதம், உலோபம், மோஹம், மதம், மாச்சரியம் என்பவற்றைப் பலி கொடுத்ததாக உறுதி பண்ண வேண்டும்.

பிரதக்ஷணம் செய்யும்போது ஐந்து பிரகாரங்களையும் அன்னமயகோச முதலிய பஞ்சகோசங்களாக மதித்து ஒவ்வொரு கோசத்திலும் ஆன்மா உழன்று தெளித்து அதை விடுத்து மேலே செல்வதாக நினைக்க வேண்டும். இங்ஙனம் ஐந்து பிரகாரங்களையும் கடந்தால் கடவுளது சாமீப்யபதத்தை அடையலாம்.

www.npnagarathar.com

கோயிலில் விநாயகரது ஸ்தானம் கன்னி மூலை விநாயகர் சந்நிதியில் வலக்கையை இடக்கையின் முன் வைத்து வலக்கையால் இடப்புறத்திலும், வலக்கையால் இடக்காதையும் பிடித்துக் கொண்டு, மூன்று முறை தோப்புக்கரணமிட்டு விநாயகர் தோத்திரம் கூறி வணங்குதல் வேண்டும். ஒரு குற்றவாளி தான் செய்த குற்றத்திற்குத் தண்டனையைத் தானே விதித்துக் கொண்டு தானே அனுபவித்தல் போல் கடவுளின் சமீபத்தில் செல்லுவதற்குத் தகுதியில்லாதபடி குற்றங்கள் நிறைந்த மக்கள் தாம் செய்த குற்றத்திற்குத் தாமே தண்டனைகள் செய்து அனுபவிக்க மேற்கூறியவாறு செய்து, இனி அவ்விதம் குற்றங்கள் செய்ய மாட்டோம் என உறுதி செய்து கொள்கிறார்கள். நாம் செய்த குற்றங்கள் பாவங்களாக உருண்டு திரண்டு உருக்கொண்டு நிற்கின்றதாகத் தேங்காயைப் பாவித்து, அது விநாயகர் வணக்கத்தால் உடைந்து சிதறினது என நினைத்து விடலையெறிந்து இனிமேல் அவ்வகைப் பாவங்கள் செய்யாதிருப்போம் என நினைத்து கொள்ளுதற்காம்.

விநாயகர் வணக்கம் முடிந்தபின் துவாரபாலக விக்ரகங்களின் முன் சென்று அடியேன் உட்சென்று இறைவனை வணங்குதற்கு அனுமதி செய்தருளும் என்று வேண்டிக்கொண்டு சந்நிதியிற் சென்று நின்று இறைவனை வணங்கித் தோத்திரப் பாக்கள் கூறுதல் வேண்டும். இங்கு தேங்காய், பழம் முதலிய நிவேதனப் பொருள்களைக் கொடுத்து நிவேதிக்கச் செய்யலாம். அருச்சனையும் செய்விக்கலாம். கற்பூர தரிசனம் செய்து பிரசாதம் வாங்கித் தரிசித்துக் கொண்டு மூலஸ்தான மூர்த்தியை நன்றாய் மனதில் பதியவைத்து எலும்புகளெல்லாம் நெக்குநெக்குருகக் கண்ணீர் அருவி போலப் பாயக் கசிந்துருகித் துதித்து வெளிவரல் வேண்டும். பின், அம்பிகை சந்நிதியிலும் அவ்வாறே வணங்கல் வேண்டும் உட்பிரகாரங்களிலிருக்கும் ஒவ்வொரு மூர்த்தியையும் வணங்கிக் கொண்டே வலம் வரல் வேண்டும்.

சண்டிகேசுவரர் முன் நாம் இறைவனை மூன்று முறை கையால் கொட்டி அவர் நம்மைப் பார்ப்பதாய் மதித்துச் சிவதரிசன பலனைத் தருமாறு பிரார்த்திக்க வேண்டும். சனீஸ்வர வணக்கம், சனீஸ்வர பகவானே உனைத் தொழுவேன், எனைத் தொடாதே என வேண்டித் தீவினை நம்மை அணுகாதிருக்கப் பிரார்த்தனை செய்வதாம்.

கோயில் வழிபாடனைத்தும் முடிந்த பிறகு கொடிமரத்திற்குச் சற்று தூரம் விலகியிருந்து மூல மந்திரத்தை நூற்றெட்டு முறையோ அதற்கு மேற்படவோ ஜபித்து, தான் கண்ட இறைவன் திருவுருவத்தை நினைத்து, எங்கு சென்றிருந்து தியானிப்பினும் புறக்கண்ணால் கண்ட திருவுருவத்தை அகக் கண்ணால் காணும்படி ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும்.



“முத்துவேல் நகர்”

வீட்டடிமனை, பிளாட்டுகள்
விற்பனைக்கு உள்ளது

இடம்: ஐகோர்ட் மற்றும் பத்திர ஆபீஸ் அருகில்,
இராஜகம்பீரம், யா. ஒத்தக்கடை PO,
மதுரை – 625107.

ஆபீஸ் செல்:
98656 19320, 93847 80117, 97516 56734
Email: muthuvelarumuga@gmail.com

நற்சாந்துபட்டி ஸ்ரீ சண்முகவிலாச கலாசாலை

சின்னப் பள்ளிக்கூடம்

கா. செந்திவேலு
பொறியாளர் (ஓய்வு)
நற்சாந்துபட்டி

இப்பள்ளிக்கூடம் தற்சமயம் இரண்டு கட்டிடங்களில் இயங்குகிறது. சின்ன ஊரணி தென்கரையில் அமைந்திருக்கும் அழகிய கட்டிடம் மற்றும் சிவன் கோவிலுக்கு எதிர்புறம் உள்ள கட்டிடம்.

ஆரம்பத்தில் இருந்த கூரைக்கட்டிடத்தை உயர்திரு. பெ.ராம. லெட்சுமணன் செட்டியார் அவர்கள் 1980ம் ஆண்டு ரூபாய் ஒரு லட்சம் செலவழித்து ஆஸ்பெஸ்டாஸ் சீட்டு கட்டிடமாக மாற்றினார். இக்கட்டிடம் மதுரையைச் சேர்ந்த திரு.ரெங்கநாதன் அவர்களால் வடிவமைக்கப் பட்டது

சிவன் கோவிலுக்கு எதிரில் அமைந்து இருக்கும் கட்டிடம் 1959ம் ஆண்டு திரு. பெரி. பெ. பெரியகருப்பன் செட்டியார் அவர்களால் தனது சகோதரியான திருமதி. கல்யாணி ஆச்சி அவர்களின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டது. பின்னர் இக்குடும்பத்தினரால் 1990ம் ஆண்டு ரூபாய் இருபதினாயிரம் செலவில் அழகுறப் புதுப்பிக்கப்பட்டது.


“சின்ன ஊரணியின் தென்கரையில் உள்ள ஸ்ரீ சண்முக விலாச கலாசாலைப் பள்ளிக்கட்டிடத்தில் பொன்னம்பல விநாயகரும், சிதம்பரேஸ்வரரும் முன்னோர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு அனைவரது வழிபாட்டிலும் உள்ளது,.

சாமியாடி செட்டியார் குடும்பத்தைச் சேர்ந்த சி.ஆ.சின. குடும்பத்தினர் பொன்னம்பல விநாயகருக்கு வெள்ளி அங்கியும், சி.ஆ.லெ. குடும்பத்தினர் சிதம்பரேஸ்வரருக்கு வெள்ளி அங்கியும் செய்து வைத்துள்ளனர். மேற்படி வெள்ளி அங்கிகளும் சோலையாண்டவர் பூச்சொரியல், மகர் நோன்பு, மஹேஸ்வர பூஜை ஆகிய விசேஷங்களுக்கு சாத்தப்பட்டு வருகிறது”. பொன்னம்பல விநாயகருக்கும், சிதம்பரேஸ்வரருக்கும் 02.06.2005 கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. பின்னர் புதிதாக கோபுரம் கட்டப்பட்டு 01.02.2021 அன்று கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

இந்தக் கட்டிடத்தில் தான் முன்பு நகரக் கூட்டங்கள் நடந்தது. மேலும் தைப்பூசத்திற்கு நகரத்தார்கள் மலையக்கோவிலுக்குக் காவடி செலுத்துவதற்காக முதல் நாள் சர்க்கரைக் காவடிகள் கட்டி வைத்து பூசைகள் செய்து மறுநாள் பூசத்திற்குப் புறப்படுவார்கள். கோட்டூர் அம்மன் கோவிலில் செவ்வாய்த் திருவிழா

With Best Compliments

SVRP
REFRACTORIES



We are leading manufacturers of all refractory bricks & Castables and allied products for steel, Cement, Sugar, Paper, Chemical, Tyre and foundaries.



71/8B2, Aladi Road, Kandiyankuppam Village,
Virudhachalam - 606 001. Cuddalore District.

நடக்கும் காலத்தில் சுந்தரநாயகி அம்மன் நற்சாந்துபட்டிக்கு எழுந்தருளி இருக்கும் போது இந்தக் கட்டிடத்தில் ஆறாம் திருவிழா மண்டகப்படி நடக்கும்.

புரட்டாசி மாதம் நவராத்திரி உற்சவத்தின் போது கயிறு கோலாட்டம் கும்மி முதலியன ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்பட்டு இந்தப் பள்ளிக்கூடத்திலே நடக்கும்.

மகர் நோன்பு தினத்தில் பிள்ளைகளும் பெரியவர்களும் இங்குள்ள பொன்னம்பல விநாயகரை தெரிசனம் செய்து அம்பு போடச் செல்வார்கள்.

மஹேஸ்வர பூசைகளும் இப்பள்ளிக்கூடத்தில் தான் நடைபெற்றன

இப்பள்ளி நற்சாந்துபட்டி நகர சான்றோர்களால் 1850ம் ஆண்டு துவக்கப்பெற்றது. அக்காலத்தில் சிவகெங்கைச் சீமையிலிருந்து கோவில்பட்டி கிராமத்தில் வந்து குடியேறிய திருவாளர். லெட்சுமண வாத்தியார் மக்கள் சுப்பிரமணிய வாத்தியார் குமாரசாமி வாத்தியார் மேற்பார்வையில் பள்ளிக்கூடங்கள் சிறப்பாக நடைபெற்று வந்தது.

பின்னர் குமாரசாமி வாத்தியார் அவர்களின் சுவீகாரப் புத்திரன் சுப்பிரமணிய வாத்தியார் மேற்பார்வையிலும் 1915ல் மாப்பிள்ளை வாத்தியார் என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட முத்துசாமி வாத்தியார் மேற்பார்வையிலும் இப்பள்ளிக்கூடம் சிறப்பாக நடத்தப்பட்டது.

இக்குடும்பத்தினர்களிடம் கல்வி பயிலாத நகரத்தார் பெருமக்களே இவ்வூரில் கிடையாது என்ற அளவிற்கு இக்குடும்பம் சிறப்படைந்திருக்கிறது.

பின்னர் இப்பள்ளியை ராம. வயி. சுப. சுப்பிரமணியன் செட்டியார் (பல்லடம்) அவர்கள் சில காலமும் 1944லிருந்து நமது நகர ஊராட்சி மன்றம் சில காலமும் குமாரசாமி வாத்தியார் சில காலமும் நிர்வகித்து வந்திருக்கிறார்கள். பின்னர் நெடுங்காலம் பெரி. பெ. ராமனாதன் செட்டியார் அவர்கள் பள்ளியை நிர்வகித்து வந்தார்கள். தற்போது திரு. ராம. கல்யாணசுந்தரம் செட்டியார் அவர்கள் இப்பள்ளி செயலராக இருந்து நிர்வகித்து வருகிறார்கள். திருமதி. கரு. தையல்நாயகி M.A. B.Ed அவர்கள் தலைமை ஆசிரியையாக இருந்து வருகிறார்கள்.

M



ஸ்ரீ ஐநூற்றி விநாயகர் துணை
ஸ்ரீ கொப்புடைய நாயகி அம்மன் துணை



லெட்சுமணன்

செட்டிநாடு ஸ்நாக்ஸ்



எங்களிடம் மணகோலம், அதிரசம், உருண்டைச் சீடை, சீப்புச் சீடை, மாவுருண்டை, கை முறுக்கு, தேன்குழல், இடியப்ப மாவு, வத்தல் வகைகள் அனைத்தும் மொத்தமாகவும். சில்லரையாகவும் சுத்தமான முறையில் செய்து தருகிறோம்,

G. லெக்ஷ்மணன் செட்டியார், மீனாள் ஆச்சி

SRM தெரு, மேலமடம், காரைக்குடி - 630 001

Ph: (04565) 221770 Mobile: 97511 35198, 94885 15578

நகரத்தார் தாலாட்டு

கும. பெரி. மெ. சுப்பு
நற்சாந்துபட்டி

செட்டிமக்கள் சார்ந்திருக்கும் ஈசனவன் ஆலயங்கள்
நாட்டினிலே ஓன்பதடா நாடிடவே நன்மையடா

தித்திக்கும் மொழிகேட்டுத் திக்கெட்டும் பாராட்டும்..
பெத்தெடுத்த நெஞ்சமது பெருமையுடன் சீராட்டும்..

சின்னவனே ` மன்னவனே பேசுகின்ற சித்திரமே..
என்னருகே நீயிருக்க நிம்மதியும் நிறைந்திருக்கும்..

கடுங்கோடை தருகின்ற தாளாத` வெப்பமெலாம்..
தளிர்மேனி தீண்டியதும் குளிராக மாறிடுமே..

ஆத்தாவென வாய்மொழியும் அழகுத்தமிழ்ச் சொல்லுக்கு
இத்தரையின் செல்வமெல்லாம் ஈடில்லை பொன்மணியே

பாட்டையா தருமங்கள் பார்முழுதும் பேசுவதைக்
கேட்டுநீயும் கண்மணியே கண்ணுறக்கம் கொள்வாயே..

பொருளோடு அருள்தேடும் பெருங்குடியில் பிறந்தவனே
விழிமூடி நீயுறங்க என்னுள்ளம் நிறைந்திடுமே

அப்பத்தா அருமைமொழி அப்பச்சி கேப்பாக..
ஆத்தாவின் சொல்லைத்தான்... தள்ளித்தான் வைப்பாக..

கடலாடும் அலைபோல கவலையிலே மனம்வாடும்
தவழ்ந்தாடும் தளிர்காண துன்பநிலை பறந்தோடும்

ஊக்கமுடன் உள்வலிவும் கொண்டிலங்கும் நெஞ்சமதை
ஆக்கமுடன் அரும்புகழும் வந்தடையும் கண்மணியே

துயில்கொள்ளும் வேளையிலே.. தொல்லைதரும் பேரழகே..

தாயிவளின் நிலைகண்டு தானாகக் கண்ணுறங்கு...

நூறாண்டு ஆனாலும் ஓராண்டே மதிக்கின்ற
தோற்றமது தான்கொள்ளும் கோட்டையிலே கண்ணுறங்கு

தம்பியவன் தரணியிலே தடம்பதிக்கும் காலம்வரை
வம்பேதும் செய்யாமல் விழியுறங்கு கண்மணியே

கண்ணுறங்கும் வேளையிலும் கண்ணாமூச்சி விளையாடி
என்னுறக்கம் நீதடுக்க எண்ணுவதும் முறைதானோ

வெண்மதியின் வடிவழகை வதனமதில் ஏந்திவரும்..
கண்மணியே பொன்மணியே கண்ணுறக்கம் கொள்வாயே..

தருமங்கள் பலசெய்து தழைக்கின்ற பரம்பரையில்
அரும்பாகி மலர்ந்தவனே ஆழ்ந்துறங்கு ஆழ்ந்துறங்கு

கொடுத்துயர்ந்த பரம்பரையில் தோன்றிவந்த பாலகனே
நினைத்துயர எண்ணம்கொண்டு இன்னுறக்கம் கொள்வாயே

சத்தமிட்டு விளையாட சாமங்கள் உருண்டோட
பெத்தமனம் திண்டாட பிள்ளைமனம் கொண்டாட

ஆலையிட்ட கரும்பாக அல்லலுறும் தாய்மனது
காலைவரை தாலாட்ட வேலைகெட்டுப் போகுமடா

அத்தையவள் ஒருநாளும் அப்பத்தா மறுநாளும்
நித்தமுன்னைத் தாலாட்ட சித்தமிங்கு குளிர்ந்திடுமே

வண்ணமிகு வாழ்வதனை வடிவேலனிங்கே தந்திடுவான்...
எண்ணமதை நெஞ்சில்வைத்து இன்னுறக்கம் கொள்வாயே..!

www.npnagarathar.com

செட்டிநாட்டுப் பழமொழிகள்

கும.மா.ச.சுப்பிரமணியன்
நற்சாந்துபட்டி

பழமொழிகள்.
பலவிதமான மொழிகளில்,
பலவிதமாய்ப் பழமொழிகள் தருவது அறிவுரைகள்.
அவை உண்மையில் எளிமையாய் இயல்பாய்
பேச்சு வழக்கிலே யாவரும் பயன்படுத்தக்கூடிய அறவுரைகள்.
அந்தந்த நாட்டு மக்களின் அனுபவங்களின்
மறுவடிவம்தான் இந்தப் பழமொழிகள்.
பழமொழிகள் என்று நாம் சொன்னாலும்
எல்லாக் காலத்தும் ஏற்றதாயிருப்பதால்
உண்மையில் இவை கலாச்சாரம் பகர்கின்ற புதுமொழிகள்.
பழமொழிகள் ஓரு நாட்டின் பண்டைய வளம் பற்றிச் சொல்லும்
சேதாரம் இல்லாத ஆதாரங்கள்.
கொள்கைப் பிடிப்புக்குக் கட்டியம் கூறும்
உன்னதமான தத்துவங்கள்.

செட்டிநாட்டுப் பகுதியிலே இன்றைக்கும்
அதிகம் காணப்படுவது பழமொழிகளின் ஆதிக்கம்..
நகரத்தார் பழக்க வழக்கங்களிலே இன்றைக்கும்
விட்டு விலகாமல்
தொட்டுத் தொடர்கிறது பழமொழிகளின் தாக்கம்.
ஆக்கமுடன் செயல் நடத்திட அவர்களுக்குப்
பழமொழிகள் உண்மையில் தருவதோ ஊக்கம்.
படித்தவர் படிக்காதவர் என்கின்ற பாகுபாடு இல்லாமல்
இருக்கிறவர் இல்லாதவர் என்கின்ற ஏற்றத்தாழ்வில்லாமல்

ஸ்ரீ பதினெட்டாம்படி கருப்பர் துணை

ஸ்ரீ அம்பாள் ஸ்டோர்ஸ்

பாத்திரக்கடை



எங்களிடம், எவர்சில்வர், பித்தளை, அலுமினிய பாத்திரங்கள் மற்றும் அனைத்து வகையான வீட்டு உபயோக பொருட்களும் மலிவாகவும் தரமாகவும் கிடைக்கும்.

செல்போன், வாட்ச், மிக்ஸி, கிரைன்டர், இன்டக்ஸன் ஸ்டவ், கேஸ்ஸ்டவ் போன்ற அனைத்து வீட்டு உபயோக பொருட்களும் சிறந்த முறையில் பழுதுநீக்கி தரப்படும்.

183. பாரதியார் வீதி,
போஸ்ட் அபீஸ் எதிரில்,
நச்சாந்துபட்டி – **622404.**

Mobile: 98430 49202

எல்லோர் வாழ்விலும் இரண்டறக் கலந்திருக்கும்
நல்லபல பழமொழிகள் தான் நமக்குக் கிடைத்த ஆக்கம்.
எத்தனை எத்தனை பழமொழிகள் செட்டிநாட்டு வழக்கிலே.
அத்தனையும் அனுபவங்களின் வெளிப்பாடு.
ஒவ்வொரு பழமொழிக்குள்ளும்
ஒவ்வொரு தத்துவம் மறைமுகமாய்ப் புதைந்திருக்கும்.
அதன் பொருளறிந்து செயல்பட வேண்டியது நம் கடப்பாடு.
உதாரணத்திற்குச் சில:

* 'எரிகிற விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்'–அறிவு தூண்டப் படுமானால் மேலும் பிரகாசிக்கும் என்பதற்காக இது.

* 'சிறுதுரும்பும் பல் குத்த உதவும்'–இந்த உலகில் உபயோகமற்றது எதுவுமில்லை என்பதனை எடுத்துக்காட்டுவதற்காக இது.

* 'பதறாத காரியம் சிதறாது'–பொறுமையுடன் செயல்பட்டால் வெற்றி கிட்டும் என்பதற்காக இது.

* 'விளையும் பயிர் முளையிலே தெரியும்'–ஒருவன் திறமைசாலியாய் வருவானா என்பது இளமையிலேயே தெரியும் என்பதற்காக இது.

* 'அழுத பிள்ளை பால் குடிக்கும்'–கேட்டால் கிடைக்கும் என்பதை வலியுறுத்துவதற்காக இது.

* 'ஆறிலும் சாவு, நூறிலும் சாவு'–வாழ்க்கை நிலையற்றது. செய்யவேண்டியதைத் தள்ளிப் போடாதே என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காக இது.

* 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு'–கோபம் தலைக்கேறிய பின்னால் எதையும் யோசிக்க இயலாது என்பதற்காகவும், வெறுப்பை வெறுப்பால் வெல்ல முடியாது என்பதற்காகவும் சொல்லப்பட்டது இது.

* 'ஒரு காசு பேணின் இருகாசு தேறும்'–சேமிப்பின் அவசியத்தினை உணர்த்துவதற்காக இது.

'* 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து'–இருப்பதை வைத்து திருப்தியுடன் வாழ்தல் வேண்டும் என்பதற்காக இது.

* 'ஒருகை தட்டினால் ஓசை வராது'–கூட்டு முயற்சியின் வலிமையைச் சொல்வதற்காக இது.

www.npnagarathar.com

* 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்'–கால நேரம் வாய்க்கின்ற போதே காரியத்தை முடித்துக் கொள்ளுதல் வேண்டும் என்பதற்காக இது.

இப்படி செட்டிநாட்டுக்குள்ளே ஊடுருவி மக்களின் வாழ்க்கையில் கலந்து கிடக்கிற பழமொழிகள் கணக்கிலடங்கா.

பன்னாட்டுப் பழமொழிகள் சிலவும் நமக்கு அறிவுரை தரும் மொழிகளாக இருப்பதையும் கொள்ளவேண்டும் நாம் கருத்தில். அவற்றில் சில :

1. என்னுடன் எப்பொழுதும் ஆறு நாணயமான நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் எனக்கு எல்லாவிதமான நல்லதும் கெட்டதும் சொல்லித் தருகிறார்கள். அந்த நண்பர்கள் யார் யார்

என்று கேட்கிறீர்களா ? அவர்கள்தான் 1.எங்கே ? 2.என்ன ? 3.எப்போது ? 4.ஏன் ? 5.எப்படி ? 6.யார் ?

2. ஒருவனுடைய கரங்கள் சுத்தமானதாக இருக்கிறதா என்றுதான் கடவுள் பார்க்கிறார். கரங்கள் நிறைவாக இருக்கிறதா என்று கடவுள் பார்ப்பதே இல்லை. நடைமுறை வாழ்க்கையில் கூட, நாம் ஒருவனைப் பற்றி விசாரிக்கிறபோது அவன் பணக்காரனா என்றுதான் கேட்கிறோமே தவிர அவன் நல்லவனா என்று கேட்பதில்லை. பணத்தின் ஆதிக்கம் பெருகியதால் வந்த வினை இது.

3. என்னால் முடியாது என்று ஓட்டுமொத்தமாக ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் அதற்குப் பெயர் மூடநம்பிக்கை. என்னால் முடியுமா என்று தன்னைத்தானே சந்தேகித்துக் கொண்டு கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தால் அதற்குப் பெயர் அவநம்பிக்கை. என்னால், என் முயற்சியால் இதை நான் கண்டிப்பாக நிறைவேற்றிக் காட்டுவேன் என்று சொன்னால் அதற்குப் பெயர்தான் தன்னம்பிக்கை.

4. ஒருவன் கடவுளை நோக்கி மெதுவாக நொண்டிச் செல்கிறான். ஆனால் சைத்தானை நோக்கி வேகவேகமாக ஆர்வத்தோடு குதித்தோடிச் செல்கிறான்.

5. அகம்பாவம் என்பது ஒரு பொல்லாத முரட்டுக் குதிரை. அது தன் எஜமானனை ஒருதடவையாவது கீழே தள்ளாமல் விடாது.

6. ஒவ்வொருவனும் தன்னை அறிஞன் என்று எண்ணிக் கொண்டிருக்கிறான். அதனால் தான் உலகில் இத்தனை முட்டாள்கள் இருக்கிறார்கள்.

7. ஏழை கோழிக்கறி தின்றால் ஒன்று அவன் நோயாளியாக இருப்பான். அல்லது அந்தக் கோழிக்கு நோயாக இருக்கும்.

8. நொண்டியுடன் ஓராண்டு நீ நடந்தால் வருட இறுதியில் நீயும் நொண்டியாகிவிடுவாய்.

9. ஆயிரம் மைல்கள் நடந்தவனானாலும், அவன் ஒவ்வொரு அடியாய் எடுத்துவைத்துத்தான் அத்தனைமைல்களும் கடக்க முடிந்தது என்பதனை மறந்துவிடாதீர்கள்.

10. ஏழைகள் உணவைத் தேடுகிறார்கள். பணக்காரர்கள் பசியைத் தேடுகிறார்கள்.

11. எலி அழுதால் பூனை விட்டு விடுமா என்ன ?

12. முழுக்க முழுக்கச் சர்க்கரையாக இருந்துவிடாதே. உலகம் உன்னை விழுங்கிவிடும். முழுக்க முழுக்க எட்டிக்காயாக இருந்துவிடாதே. உலகம் உன்னை உமிழ்ந்துவிடும்.

13. உன்னிடம் பணம் இருந்தால் உன்னை உனக்கே தெரியாது. உன்னிடம் பணம் இல்லாவிட்டாலோ உன்னை யாருக்குமே தெரியாது.

14. தேவையில்லாதவற்றை வாங்குவோன் விரைவில் அவசியமானவற்றை விற்க நேரிடும்.

15. ஒரு வெளவால் வீட்டுக்கு இன்னொரு வெளவால் விருந்துக்குவந்தால் அதுவும் தொங்கிக் கொண்டுதான் இருக்க வேண்டும்.

16. மணவாழ்க்கை என்பது முற்றுகையிட்ட கோட்டை மதிரி. வெளியே இருப்பவர்கள் உள்ளே செல்ல விரும்புகிறார்கள். உள்ளே இருப்பவர்கள் வெளியே செல்ல நினைக்கிறார்கள்.

17. ஒரு சங்கிலியின் பலம் அச்சங்கிலியின் வலுக்குறைந்த வளையத்தைப் பொறுத்தது.

18. இந்த உலகில் இரண்டுபேர் தான் நல்லவர்கள். ஒருவர் ஏற்கனவே இறந்துவிட்டார். மற்றொருவர் இன்னும் பிறக்கவேயில்லை.

19. தவறுகளைப்பாடமாக எடுத்துக்கொள். ஆனால் அதையே எப்போதும் படித்துக்கொண்டிராதே.

www.npnagarathar.com



செல்வகுமரன் ஏஜென்ஸி

No.13 முதல் தளம், முத்துவேலப்பா வீதி, ஈரோடு - 638001,
Phone: 9994472223, 0424-2254800

அமர்ந்த நிலையில்

காரைக்கால் அம்மையார்

ந.மு.அ. காசி
நற்சாந்துபட்டி



அறுபத்து மூன்று நாயன்மார்களில், பெண் நாயன்மார்கள் மூவர் மட்டுமே. அவர்கள் தான் 1. காரைக்கால் அம்மையார். 2. மங்கையர்க் கரசியார் 3. இசைஞானியார். அது மற்றும் இன்றி நாயன்மார்களில் காரைக்கால் அம்மையார் மட்டும் தான் அமர்ந்த நிலையில் காட்சி தருவார். மற்ற அனைவரும் நின்ற நிலையில்தான் இருப்பார்கள். பிரிந்துசென்ற கணவரை பாண்டிய நாட்டுக்கு தேடிச் சென்றபோது கணவர் தன் குடும்பத்தோடு காரைக்கால் அம்மையாரின் காலில் விழுந்து வணங்கினார். இது அம்மையாருக்கு மன சங்கடத்தை அளித்தது. அதன் பிறகுதான் பேய் உருவம் பெற்று கைலாயம் சென்றார். இறைவனே இவரை அம்மையே வருக அமர்க என்று கூறினார். இறைவனே அம்மையை அமரச் சொல்லியதால் நாயன்மார்களில் காரைக்கால் அம்மையார் மட்டும் அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார்.



10 நிமிடத்தில் பாஸ்போர்ட் போட்டோ எடுத்திட !!

TÜV ISO 9001:2008

- 9000 சதுர அடியில்
- நான்கு மாடிகளுடன்
- **ISO** தரச்சான்றிதழ் பெற்ற ஒரே கலர்லேப்



MR கலர் லேப்™

MR ஸ்டுடியோ™

H.O. : M.R. டவர்ஸ், 1463 A, மேட்டூர் ரோடு,
பஸ்நிலையம் எதிரில், ஈரோடு. போன் : 0424 - 2223860

■ ஈரோடு ■ திருப்பூர் ■ திருச்செங்கோடு ■ பள்ளிபாளையம் ■ பெருந்துறை ■ கோபி

பெட்டியடி

வெ.வ.வெள்ளையப்பன்
நற்சாந்துபட்டி

எந்தமூலமாய்ப் பணத்தைப் பெருக்கலாம் என யோசித்த
அந்தக்காலச் செட்டியார்களின் சிந்தையில்
உந்துதலாய் வந்துதித்த
மந்திரச்சொல் தான் பெட்டியடி.

கடல் கடந்து வியாபாரம் கணக்கின்றிச் செய்தாலும்
முதலாளி உடன்கூட
ஓட்டிக்கொண்டு வருபவன்தான் பெட்டியடிப் பையன்.
பெட்டியடி காக்கும் செட்டியார் பையன்கள் என்றாலே
கிட்டிவிடும் உடனடியாய் அவர்களுக்குத்
தனியானதோர் தரமுயர்ந்த மதிப்பு.
பழக வந்த பெட்டியடிப்பையன்கள்
பையப் பையத் தொழிலைப்
பழகிய பின்னாலே
அழகிய முதலாளிகளாய் ஆன கதை எத்தனையோ.

நெற்றி நிறைய விபூதிப்பட்டை
பெட்டியடிப்பையன்களின் நெற்றியை அலங்கரிக்க
வெற்றிக்கு இதுதான் அணியென்று அன்றைய நகரத்தார்
பற்றிக்கொண்ட உத்திராட்சக் கொட்டை மாலையது
அவர்கள் கழுத்தில் புரண்டு விளையாட,
மகிழ்வுடன் வாழ்ந்திட்ட பெட்டியடிப் பதிவுகள்
நினைத்தாலே நமக்கெல்லாம் புத்துணர்வு பூரிக்கும்.

எத்தனை கோடி வரவு செலவு ஆனாலும்
அத்தனையும் செட்டியாரின்
ஒற்றைக் கைப்பெட்டிக்குள்ளே அடக்கம்.
அற்றை நாளில் அவர்களுக்கு
ஏற்படவில்லை எந்தவிதத்திலும் தொழிலில் முடக்கம்.

காரணம் பிள்ளையார்சுழி போட்டுத்
தொழிலை அவர்கள் தொடங்கியதால் தொடர்ந்திட்ட தொடக்கம்.
அவர்களின் சிவநெறி வழுவாத வழக்கம்.

ஆயிரக்கணக்கான மைல்கள் தாண்டி
அக்கரைச் சீமைக்குப் போயிருந்தாலும்
அந்தக்காலச் செட்டியார்கள்
ஒருநாளும் மறந்தாரில்லை
தம் மண்ணின் பெருமையை.

நினைப்பெல்லாம் செட்டிநாட்டையே
சுற்றிச் சுற்றி வந்தாலும்
மனைவி மக்கள் என்கின்ற நீங்காத உறவெல்லாம்
நினவுகளாய்ப் பற்றிப்பற்றித் தொடர்ந்தாலும்
கொண்ட கடமையை நினைவில் கொண்டு,
கொண்டுவித்தலில் குறியாய் இருந்து,
மனத்தளவு வேதனைகள் மறுபுறம் தள்ளிவைத்து
சோதனைகள் எல்லாம் சொற்பமாய்க் கடந்து
சாதனை மனிதர்களாய்த் தாய்நாடு திரும்பிச்
சரித்திரம் படைத்திட்ட நாயகர்கள்தாம் நம் முன்னோர்.

இந்தக் கூற்றை யாரும் இங்கே மறுப்பதற்கில்லை என்றாலும்
அன்றைய நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கும்
இன்றைய தலைமுறைக்கும் இடையே
சத்தியமாய் எத்தனை எத்தனை வித்தியாசங்கள்.
அன்றைக்கு வீட்டுக்கு வீடு
விட்டு விலகிப் போகாமல் நிரந்தரமாய்த்
தங்கிக் கிடந்த நகரத்தார் புகழ்
இன்றைக்கு மங்கிப் போய்க் கிடக்கிறதே
அதற்கு என்ன காரணம்? யார் காரணம்?

அன்றைக்கு,
வாய்மை ஒன்றுதான் நம் முன்னோர்கள் படித்த வேதம்.
நேர்மை மட்டும்தான் அவர்களுக்கான தொழில் முறைக் கீதம்.
பெட்டியடிதனில் எத்தனை கோடித் தொழில் நடந்தாலும்
விட்டுவிடவில்லை அவர்கள்தம் இறைநம்பிக்கை என்பதால்
எந்நாளும் அவர்களுக்கு வந்ததில்லை சேதம்.

ஒற்றுமை உணர்வுகள் இனத்துக்குள்ளே ஓங்கிக் கிடந்ததால்
அன்றைக்கு தலைதூக்காமல் போனது
அவர்களுக்குள்ளே வேற்றுமை எனும் பேதம்.

ஆனால் இன்றைக்கு,
பெட்டியடி என்ற சொல் புழக்கத்திலேயே இல்லை.
கொண்டுவித்தல் என்ற சொல்லும் நகரத்தார்
அகராதியை விட்டே அகன்று போனது.
எதிர்மறைச் சிந்தனைகள் ஏற்றம் கண்டதால்
நேர்மறைவாதிகள் நிழலிழந்து போனார்கள்.
நமக்கிருப்பது நம்மவர்கள் விட்டுச் சென்ற
பாரம்பரியம் மட்டும்தான்.
வசதிகள் ஏதும் இல்லாத அந்தக் காலத்திலே
வளமாய் வாழ்ந்திடுதல் சாத்தியம் என்றபோது
வசதிகள் குவிந்திருக்கும் நிகழ்காலம்
வளமாய் மாற்றுதல் நம் கடமையன்றோ ?
அதற்கான வழி.
மிகவும் எளிதான ஓரே வழி,
இருப்பவன் இல்லாதவன் என்றும்
படித்தவன் படிக்காதவன் என்றும் நம்
இனத்தாருக்குள்ளே வேற்றுமை பாராட்டாத நேர்மை வழி.
அதற்குப் பெயர்தான் ஒற்றுமை வழி.
அதுதான் பெட்டியடி மந்திரம் கற்றுத்தரும் வழி.



ஸ்ரீ பதினெட்டாம்படி கருப்பர் துணை

ஸ்ரீ அம்பாள் ஸ்டோர்ஸ்

பேன்ஷி ஸ்டோர்ஸ்







எங்களிடம் பேன்ஷி. செப்பல், ஸ்டேசனரி, ஜெனரல் மெர்சென்ட் பொருட்கள் அனைத்தும் மலிவாகவும் தரமாகவும் கிடைக்கும்.

நச்சாந்துபட்டி நகரத்தார்
அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் திருக்கோவில்
குடமுழுக்கு விழா மலர் சிறப்படைய வாழ்த்துக்கள்,

183. பாரதியார் வீதி,
போஸ்ட் ஆபீஸ் எதிரில்,
நச்சாந்துபட்டி – **622404.**

Mobile: 98479 74000

நற்சாந்துபட்டி நகரத்தார்கள் நடத்தும் படைப்புகள்

முன்னோர் வழிபாடு

முனைவர் திருமதி **G.மீனாட்சி**

உலகத்தினரின் அவமானத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிய துரியோதனனுக்கு எப்படி கர்ணன் நன்றி உடையவனாக இருந்தானோ, அதே போல் தமது பாரம்பரியம், கலாச்சாரம் ஆகியவற்றால் உலகளவில் போற்றிப் புகழப்படும் நகரத்தார் பெருமக்களாகிய நாம் நம் " முன்னோரை மறக்காமல் நினைத்துப் போற்றும் மாண்பிலும்" நமக்கு நிகர் நாமே.

படைப்புத் தெய்வத்தின் வழி வந்த நகரத்தார் ஆணுக்கும், நகரத்தார் பெண்ணுக்கும் பிறந்த வழித்தோன்றல்கள் இந்த வழிபாட்டினை மேற்கொள்வர்.

இந்த வழிபாட்டை மூதாதையர் வாழ்ந்த அதே ஊரில், அவர்கள் வாழ்ந்த அதே வீட்டில் நடத்துவார்கள்.

நம் வீட்டில் வாழ்ந்து, காலத்தால் இறைவனடி சேர்ந்த நம் வீட்டின் மூதாதையர்களை, வருங்காலச் சந்ததியினர் மறந்துவிடக்கூடாது என்பதற்காகவே, ஆண்டிற்கு ஒருமுறை அல்லது இரண்டாண்டிற்கு ஒருமுறை அவர்களுக்குப் பிடித்த உணவுகளைச் சமைத்து, கோடி சேலை, கோடி வேட்டி, அவர்கள் அணிந்து கொண்ட ஆபரணங்களை வைத்து வழிபடும் வழிபாடுதான் படைப்பு ஆகும்.

ஒரு வீட்டில் படைப்பு என்றால் அந்தக் குடும்பத்தின் அத்தனை கிளைகளும் எந்த தேசத்தில் எந்த ஊரில் இருந்தாலும் தவறாமல் வந்து கலந்து கொண்டு விடுவார்கள். படைப்பு வழிபாடு நிகழ்த்தக் காரணம்:

1. நமது பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை உலகளவில் பரப்ப முக்கியப் பங்காற்றி, நமக்கு இந்த நல்ல, அழகான, அருமையான, சிறப்பான வாழ்வு அமைய முன்னோடியாக இருந்து அரும்பாடுபட்ட நம் முன்னோர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு.

2. எதிர்காலத் தலைமுறையினருக்கு கடந்த காலத்தைப் பற்றித் தெரியப்படுத்தும் ஒரு நிகழ்வு.

3. ஒவ்வொரு குடும்பத்தினரின் வரலாறு, கலாச்சாரம், சடங்கு செய்யும் முறை, பாரம்பரியத்தின் தனித்துவம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் ஒரு நிகழ்வு.

4. எதிர்காலச் சந்ததியினரை ஆசீர்வதிக்கும் நிகழ்வாகக் கருதப்பட்டு, இவர்களைக் கும்பிடுவோர்களுக்கு கல்விச் செல்வம், பொருட் செல்வம், குழந்தைச் செல்வம் என அனைத்துச் செல்வங்களும் கிடைத்திடும் என்ற நம்பிக்கைதனைப் போற்றுகின்ற ஒரு நிகழ்வு.

5. இதில் விசேஷம் என்னவென்றால், செட்டியார்கள் கடல்கடந்து வணிகம் செய்யச் சென்ற அக்காலத்தில், கோட்டை போன்ற வீடுகளையும், தம் மக்களையும் கட்டிக்காத்து செட்டிநாட்டை ஆட்சி செய்த ஆச்சிமார்களை நினைவு கூறும் வகையில், நற்சாந்துபட்டியில் நடக்கும் ஏழு படைப்புகளும்' பெண் தெய்வங்களுக்கே'

1. அடைக்கம்மை அப்பத்தாள் படைப்பு	இலுப்பைக்குடி கோவில்
2. அழகி அப்பத்தாள் படைப்பு	பிள்ளையார்பட்டி கோவில்
3. உமையாள் ஆயாள் படைப்பு	இளையாத்தங்குடி பெருமருதுடையார் சாத்தன் செட்டி வகையறா
4. நல்லி அப்பத்தாள் படைப்பு	இளையாத்தங்குடி பெருமருதுடையார்
5. சேவாத்தாள் படைப்பு	வைரவன் கோவில் கழனிவாசல் பிரிவு
6. லெட்சுமி அப்பத்தாள் படைப்பு	இளையாத்தங்குடி விராச்சிலையார் வீடு
7. வள்ளி அப்பத்தாள் படைப்பு	மாத்தூர் உறையூர் பிரிவு.



நற்சாந்துபட்டி நகரத்தார் கல்யாண மண்டபம்

SP. நடராஜன்

தலைவர், நகரத்தார் கல்யாண மண்டபம்
நற்சாந்துபட்டி

1990 களில் நற்சாந்துபட்டியில் திருமண மண்டபங்கள் இல்லாததால் அதன் தேவை உணர்ந்து 1991ல் நடந்த சிவன் கோவில் குடமுழுக்கு விழா உபரி நிதியில் இருந்தும், நற்சாந்துபட்டி நகரத்தார்களிடம் இருந்தும் நிதியுதவி பெற்று கட்ட தீர்மானிக்க பெற்று திரு. S.V. சிவனடியான் செட்டியார் தலைமையில் ஒரு குழு அமைக்கப் பெற்று நிதி வசூல் செய்து கட்டப்பட்டது.

மண்டபமும் 18123 ச.அடி இடத்தில் 7931 ச.அடி கீழ் தளமும் 2568 ச.அடி மேல் தளமும் கொண்டுள்ளது. மண்டபமும் கட்டிமுடிக்கப்பட்டு 23.05.1992 அன்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் அப்பொழுது மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சராகவும் தற்பொழுது திருமயம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினராகவும் உள்ள உயர்திரு S. ரகுபதி B.Sc , B.L., அவர்களால் திறந்து வைக்கப்பெற்று சிறப்பாக நடைபெற்று வருகிறது. மண்டபம் கட்ட மறைந்த திரு. S.V. சிவனடியான் செட்டியார் அவர்கள் ஆற்றிய பணி மிகவும் பாராட்டப்பட வேண்டியது.

மண்டபத்தின் முதலாவது தலைவராக திரு. S.V. சிவனடியான் செட்டியார் அவர்களும் செயலாளராக திரு. மு.மெ.முத்துராமன் செட்டியார் அவர்களும் பொருளாளராக திரு.S. சிவசாமி செட்டியார் அவர்களும் இருந்து உள்ளார்கள்.

தரைத்தளத்தில் இடம் பற்றாக்குறையால் 2009ம் ஆண்டு நற்சாந்துபட்டி நகரத்தார்களிடம் நிதி வசூல் செய்து விரிவாக்கப்பட்டு முதல் தளம் கட்டி போஜன ஹால் மேல் தளத்திற்கு கொண்டு செல்லப் பெற்றது.

சமையல் கூடம் பழமையான முறையில் இருந்ததால் வட அமெரிக்க நகரத்தார் சங்கம் மற்றும் கிரில்லோ திரு. K.R. வீரப்ப செட்டியார் அவர்களால் நிதியுதவி வழங்கப்பெற்று புணரமைக்க பெற்று 11.04.2018 அன்று பயன்பாட்டிற்கு வந்தது.

கல்யாண மண்டப நிர்வாகக்குழு இரண்டாண்டிற்கு ஒரு முறை மகாசபை கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப் படுகிறது. தற்பொழுது தலைவராக திரு. நடராஜன்



SHREE SHIVASAKTHI MEDICAL AGENCIES

STOCKISTS FOR

Abbott India Ltd | Adroit | AFD Pharma | AICE | Ajantha (All Division) Aksigen | Alcon | Alembic (All Division) | Alkem | Allergan | Aureus Auro Lab | Avesta (Sun Division) | Bayer | Bharath Serum | Biocon Biomedica Bionew | Boehringer | Brio Bliss | Cadila (All Division) | Capital Pharma Careaway | Centaur | Chethana | Cipla | Comed Chemical | Corona Remedies | Cresha Lifesciences | Curatio (Tedibar) Delcure | Dermal Pharmaceutical | Dermarex | Diacarex Healthcare Diamond | Dr. Reddy's |Eli-Lilly | Emcure Pharma (All Division) | Entod Glenmark | H&H Laboratory Hibiscus Pharmaceutical Ltd | Hicare Pharma | Icon | Indiabulls | Indoco | Innova Care | Intas (All Division)Ipca (All Divison) | Jawaa Pharmaceuticals | Jenburkt | Khandelwal (All Division) | Koye Larion | Life Science | Live Pharma | Linux | Llyod | Lupin (All Division) | Macleods (All Division) | Mark (Acnil Soap) | Med-Manor Meyer Organics | Micro All Division | Milmet (Sun Division) | Minarini (Shalaks) | Modi-Mundi Pharma | Mova Pharmaceuticals | MSD Pharmaceuticals Nivulia Life Sciences | Novarties | Okanet | Ozone Pharma | Panacea Biotec (All Divisioi | Pfizer (All Division) | Pharm Product | Q-Check | Renu Biotrue | RPPL | Serum Institute | Sigmund Promedica | Stead Fast Medisheild Sunmaker | Sunways (All Division) | Systopic | Tablets India Limited | UCB Ltd | Warren Women's Health Care | Zivira | Zuventus | Zydes Sughar Free | Zydus Cadila | Zydus (All Division)

8/1, 8/2, Perumal Street, Kaikolan Thottam, Erode - 638 001.
Phone: 0424 - 2258444, 2257404,
Mobile: 98948 96969, 80563 22999, 98429 96969

அவர்களும் செயலாளராக திரு. ரெ. சிதம்பரம் அவர்களும், பொருளாளராக திரு. A. காசி அவர்களும் இருந்து திறம்பட செயல்படுத்தி வருகிறார்கள். மேலும் 30 ஆயுள் அங்கத்தினர்களும் நிர்வாக குழுவுடன் இணைந்து செயல்படுகிறார்கள்.

திருமணங்களுக்கு மட்டுமின்றி ஊர் மற்றும் நகரத்தார் பொதுக் காரியங்கள் நிகழ்ச்சிகள் சமூகப் பணி, சமுதாயப் பணி போன்றவைகளுக்கு எந்தவித கட்டணமும் இன்றி வழங்கப் பெற்று சமுதாய முன்னேற்றத்தில் நாங்களும் ஒரு அங்கம் வகிக்கிறோம்.

2018ம் ஆண்டு கஜா புயலின் பொழுது 2 வாரங்களுக்கு தொடர்ந்து மின்சாரம் தடை ஏற்பட்டதால் அதை சரி செய்ய வெளிமாவட்டங்களில் இருந்து வந்த 100க்கு மேற்பட்ட மின் வாரிய ஊழியர்கள் மண்டபத்தில் தங்கி ஜெனரேட்டரை உபயோகித்து மின் வசதி பெற்று முதலில் நமது ஊருக்கும் படிப்படியாக மின்தடை ஏற்பட்ட அருகில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுத்தார்கள். பொது நலம் கருதி அவர்களிடம் எந்தவிதமான கட்டணமும் வசூலிக்கப்பட வில்லை .

நகரச் சிவன் கோவில் இராஜகோபுரம் மற்றும் கும்பாபிசேக வேலைகளுக்கு வெளியூரில் இருந்து வந்த வேலையாட்கள் தங்குவதற்கு மண்டபத்தில் இடவசதி செய்து கொடுத்து வேலைகள் சிறப்பாகவும் விரைவாகவும் செய்து முடிக்க உதவி செய்யப்பட்டுள்ளது.

நமது மண்டபம் நற்சாந்துபட்டியில் முதல் மண்டபமாக திறக்கப்பெற்று தற்பொழுது 6 மண்டபங்களுடன் செயல்பட்டு வருகின்ற போதிலும், அருள்மிகு சிதம்பரேஸ்வரர் சிவகாமி அம்மன் அருளாசியுடன் திறம்பட செயல்பெற்று வருகிறது.

With Best Compliments from

SARAVANA TEX

YARN & CLOTH MERCHANT

C. ALAGAPPAN

Mobile: 9442256617 E-mail: alagappan567@gmail.com



10/50, Kongunagar, 2nd Street,
Tirupur - 641 607.

நகரத்தார் பொன்மொழிகள்

தொகுப்பு – **கிரில்லோ வீரப்பன்**
நற்சாந்துபட்டி

1. பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்.
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்.
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்.
அன்பெனப்படுவது என்னெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்.
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்.
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்.
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்.
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்.
வறுமை என்பது என்னெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்.
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்.
அனுபவித்தேதான் அறிவது வாழ்வெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்.
ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி
அனுபவம் என்பதே நான்தான் என்றான்.

– கவியரசர் கண்ணதாசன்

www.npnagarathar.com

ஸ்ரீ காட்டுப் பெருமாள் ஐயனார் துணை

முத்து டிபார்ட்மெண்ட் ஸ்டோர்

(A.பெருமாள் தேவர் மளிகை கடை)

மெயின் ரோடு, நற்சாந்துபட்டி

எங்களிடம் தரமான முறையில் மளிகைப் பொருட்கள் சில்லரையாகவும், மொத்தமாகவும் அனைத்து விஷேசங்களுக்கும் கிடைக்கும்.

அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் திருக்கோவில் குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற எங்கள் வாழ்த்துக்கள்.



P. ரெங்கராஜன்

R. தேன்மொழி
(ஊராட்சி மன்ற து. தலைவர், பேரையூர்)

மல்லாங்குடி.

95851 78778

2. ஈட்டலும், காத்தலும், காத்த வகுத்தலும் ஆகிய இம்மூன்றும் தான் என் வாழ்வியலில் நான் ஏற்றுக்கொண்ட தலையாய கொள்கை நெறிகள்.

– ராஜா சர் அண்ணாமலை செட்டியார்.

3. குறிக்கோள் இலாத வாழ்வு
கோடுகள் இலாத ஆட்டம்
நெறிக்கோள் இலாத நெஞ்சு
நிறைநீர் இலாத ஆறு
மறிக்கோள் இலாத கல்வி
வரப்புகள் இலாத நன்செய்
செறிக்கோள் இலாத மேனி
திறவுகோல் இலாத பூட்டாம்!!
நல்லாவின் பால் முழுதும் கன்றுக்கில்லை,
நறும்பூவின் மணமுழுதும் சோலைக்கில்லை,
நெல்லாகும் கதிர் முழுதும் நிலத்துக்கில்லை,
நிறைகின்ற நீர் முழுதும் குளத்துக்கில்லை,
பல்லாரும் கனி முழுதும் மரத்துக்கில்லை ,
பண்ணரம்பின் இசை முழுதும் யாழுக்கில்லை,
எல்லாமே பிறர்க்குழைக்கக் காணுகின்றேன்.
என் வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும் வேண்டும்!!

– மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார்

4. உலகில் இன்று வரவுக்கு மிஞ்சிய செலவு செய்து ஆரவாரச் சேற்றில் சிக்குண்டு தவிப்பவர் நம்மவரேயாவர். திருமணம் முதலிய விழாக்களில் இவர்கள் செய்யும் செலவு கணக்கிலடங்காது. 'குலம் பேசிக்குணம் பேசி முடிப்பதை விடுத்து 'பொன்பேசிப் பொருள்பேசித் திருமணத்தைப் பெருவாணிகமாக்கி, இன்ப இல்வாழ்க்கையைத் துன்பத்திற்கு இடமாக்கி விடுகிறோம். பெற்றெடுத்த தாயே தன் மகனை விலைபேசிப் பொருள் பெறுகிறாள். இது பெண் குலத்துக்கே இழுக்கு என்பதை இவர்கள் உணர்கின்றார்கள் இல்லை.

– ஆலை அரசர் கருமுத்து தியாகராசச்செட்டியார்.

5. காடு வெட்டிப் போட்டு, கடிய நிலந்திருத்தி,
வீடு கட்டிக் கொண்டிருக்கும் வேள் வணிகர் வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா இலக்குமி நீ
என்றைக்கும் நீங்காதிரு.

– பாடுவார் முத்தப்ப செட்டியார்

www.npnagarathar.com

SRI VIGNESH MEDICAL AGENCIES

PHARMACEUTICAL DISTRIBUTORS



C. RAMESH

9, Power House Road, Erode-1.
email: svmaerd@gmail.com
Ph: 0424-2255159, 4272777, Mobile: 99945 54555, 99949 54555

www.npnagarathar.com

6. கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் – நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொருத்தருள்வாய் – கச்சி ஏகம்பனே.
பொல்லாதவன் நெறிநில்லாதவன் ஐம்புலன்கள்தமை
வெல்லாதவன் கல்வி கல்லாதவன் மெய்யடியார்பால்
செல்லாதவன் உண்மை சொல்லாதவன் நின்திருவடிக்கன்பு
இல்லாதவன் மண்ணில் ஏன் பிறந்தேன் – கச்சி ஏகம்பனே.

– பட்டினத்தார்

7. இடரினும் தளரினும் கடவுட் கொள்கைக்கு மாறுபடப் பேசாமையும்,
நடுநிலை பிறழ்ந்து நவிலாமையும், பயனிலாதன பகராமையும்,
பிறர்க்கு இன்னல் விளைவிக்கும் பொய்மொழி புகலாமையும்,
கொடுக்கிலாதானைப்பாரியே என்று கூறாமையும்,
ஆகிய இது போன்ற செயல்களே தமிழ்ச்சுவை உணர்ந்த நாவிற்கு
உரியனவாம் என்பதை உணர்ந்து கடைப்பிடித்தல் வேண்டும்.

– பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார்.

8. பழைய காலத்தில் இருந்தது ஆசிரியர்களால் வழி நடத்தப்பட்ட சமூகம். ஆனால் இன்றைக்கு ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட்டவர்களாக, வெறும் சம்பளம் வாங்குகிறவர்களாக, இந்த சமூகத்தைச் சீரமைப்பதில் அவர்களுக்கு உரிய பங்கு தரப்படாதவர்களாக இருக்கிறார்கள்.
ஒரு சமூகத்தின் முன்னேற்றம் என்பது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு போதிக்கிற கல்வியினைப் பொருத்தது.
ஆசிரியர்களின் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப அவர்களுக்கு உரிய அங்கீகாரம் தரப்படவேண்டும். அவர்களை ஓதுக்கி விடாமல், அவர்களுடைய திறமைகளை சமூகத்தில் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.
ஓருகாலத்தில் குரு என்ற சொல்லுக்கு இருந்த மரியாதை திரும்பவும் ஆசிரியர் சமூகத்திற்குத் தவறாமல் கிடைத்திடல் வேண்டும். அதே சமயம் வளர்ந்து வரும் தலைமுறையினர்க்கு விஞ்ஞான முன்னேற்றம், பொருள் வளம், நமது வாழ்வியலுடன் இணைந்திருக்கும் ஆன்மிக சிந்தனைகள் போன்றவற்றைக் கற்பித்தாக வேண்டிய கடமை முன்பைவிடப் பலமடங்கு ஆசிரியர் பெருமக்களுக்கும் இருக்கிறது.

– வள்ளல் அழகப்ப செட்டியார்

www.npnagarathar.com

With Best Wishes From



V.Purushothaman
Mrs.P.Sarala
Hemanand
Monisha

Rajaji Nagar
Bangalore

மற்றவர்களுக்கு உதவியாய் இருப்பதுதான் வாழ்க்கை

கும.மா.ச.சுப்பிரமணியன்
நற்சாந்துபட்டி

இராமகிருட்டிண பரமஹம்சரிடம் ஒருமுறை அவரது சீடன் ஒருவன் வேக வேகமாக ஓடி வந்து சொல்கிறான் தான் சாதித்த ஒன்றைப் பற்றி.

'குருவே. பதினான்கு ஆண்டுகள் நான் எடுத்துக் கொண்ட பயிற்சியின் பலனாய் நீரில் நடக்கக்கூடிய வித்தையை நான் கற்றுக் கொண்டேன். இக்கரையில் இருந்து அக்கரைக்கு நீரில் நடந்தே என்னால் ஆற்றைக் கடக்க முடியும்' என்றான்.

நிகரில்லாச் சாதனையைச் சாதித்துவிட்டோம் என்பதைத் தன் குருவிடம் சொன்னவுடன் அவன் முகமெல்லாம் மகிழ்ச்சி வெள்ளம்.

ஆனால் தன் சீடன் செய்த சாதனையைப் பொறுமையுடன் கேட்ட இராமகிருட்டிணர் அவனை உடனே பாராட்டினாரில்லை. உன்னைப் போல திறமைசாலி உண்டா என வாழ்த்தினாருமில்லை.

மாறாக அன்புடன் தன் சீடனைப் பார்த்த அவர் அவனைப் பார்த்துச் சொன்னார்:"

நீ பதினான்கு ஆண்டுகள் காலவிரயம் செய்ததன் பலன், நீரிலே நடந்து ஆற்றினைக் கடக்கின்ற ஓர் அதிசயமான வித்தையைக் கற்றுக்கொண்டாய்.

அதனால் யாருக்கு என்ன பலன்? அதற்குப் பதிலாக ஆற்றிலே பரிசல் விடுகிற ஓடக்காரனிடம் ஒரு தம்பிடி பணம் கொடுத்திருந்தால் அவன் உன்னைப் பத்திரமாக அக்கறையோடு அக்கரையிலே கொண்டுபோய்ச் சேர்த்திருப்பானே.

இது தெரியாமல்,


பதினான்கு ஆண்டுகள் யாருக்கும் எந்த விதத்திலும் உதவாமல், பொன்னான உன் வாழ்வை வீணடித்துவிட்டாயே? இனி நீ நினைத்தாலும் நடந்து முடிந்த உன் வாழ்வின் கடந்த காலம் திரும்பி உன்னிடம் வரப்போகிறதா என்ன?

இனியாவது,

வாழ்வில் இருக்கிற மீதி காலத்திற்காவது மற்றவர்களுக்கு உதவியாய் வாழ முயற்சி செய்." என்று அந்தத் தன்னுடைய சீடனுக்கு அறிவுரை பகர்ந்தாராம் பகவான் இராம கிருட்டிணர்.

The Best Wishes From

SRI SASTHA REAL ESTATE.
SRI SASTHA FINANCE
SRI M.K. DISTRIBUTORS GARMENTS



#122, Green Villas layout, Hennanayakanahalli
Carmelaram post , Sarjapura Road, Bangalore-35
K. Muthuraman MUT.KRISHNA-96200 12122

நகரத்தார் போற்றும் தமிழ் இலக்கியம்

முனைவர் மா. மாதரி
நற்சாந்துபட்டி

"காக்கைக்காகா கூகை
கூகைக்காகா காக்கை
கோக்குக்கூ காக்கைக்குக்
கொக்கொக்க கைக்கைக்குக்
காக்கைக்குக் கைக்கைக்காகா"

காக்கைக்கு ஆகா கூகை – காக்கைக்குப் பகை ஆந்தை.
கூகைக்கு ஆகா காக்கை – ஆந்தைக்குப் பகை காக்கை.
கோக்கு – அரசன் தன்னுடைய
கூ – நாட்டை
காக்கைக்கு – காப்பாற்றுவதற்கு
கொக்கு ஓக்க – கொக்கைப்போல சமயம் பார்த்து காரியத்தை முடிக்க வேண்டும்.
கைக்கைக்கு – கால நேரம் சரிவரப் பார்க்காமல் அரசன் பகை எதிர்த்தால்
காக்கைக்கு – நாட்டைக் காப்பாற்றுதற்கு
கைக்கு ஐக்கு – அரசன் எத்தனைதான் சாமர்த்தியமாய் இருந்தாலும்
ஆகா – காப்பாற்ற முடியாது.

கூகை என்பது ஆந்தை. பகலில் காக்கையானது ஆந்தையை வெல்ல முடியும். அதே சமயம் ஆந்தை இரவிலே காக்கையை வென்று விடும். அது மாதிரி கோ என்னும் அரசன் நாட்டை அழிக்க நினைக்கிற பகைவரிடம் இருந்து தம் தாய் நாட்டை இரவில் ஆந்தையைப் போலவும் பகலில் காக்கையைப் போலவும் பாதுகாத்திடல் வேண்டும். கொக்கு காத்திருப்பதைப் போல சரியான நேரம் வரும்வரை காத்திருந்து எதிரியின் பலவீனம் அறிந்து தாக்குதல் வேண்டும். காலமறிந்து எந்தவொரு செயலையும் செய்தல் வேண்டும். தகுதியற்ற காலம் என்றால் அரசன் தகுதியானவனாக இருந்தாலும் கூட கையாலாகாத ஒரு நிலைமையைத் தோற்றுவித்து விடும். ஆகையால் எந்தச் செயலைச் செய்தாலும் இடனறிந்து சரியான காலமறிந்து செய்தால் வெற்றி நிச்சயம் என்பது கருத்து.

ககர வரிசை எழுத்துக்களை மட்டுமே வைத்துப் பாடப்பட்டதுதான் இப்பாடலின் தனிச் சிறப்பு.
காளமேகப் புலவரின் கைவண்ணத்திலே எழுந்ததுதான் இவ்விலக்கியப் பாடலின் பிறப்பு.

இந்தப் பாடலுக்கும் நகரத்தார் வாழ்வியலுக்கும் ஒரு தொடர்புண்டு. எந்த ஒரு பிரச்சினைக்கும் தமிழ் இலக்கியம் தந்துவிடும் தீர்வு என்பதை நம்புகிற இனம் நகரத்தார் இனம்.
எந்நாளும் தமிழை ஏற்றிப் போற்றுதல்தான் அவர்கள் குணம்.

எந்தவொரு செயலைத் தொடங்கும் முன்னர்
நல்ல நேரம் பார்ப்பதுதான் நகரத்தார் பழக்கம்.
கால நேரம் பார்த்திடாமல் எந்தவொரு செயலிலும்
காலெடுத்து வைப்பதில்லை என்பதுதான் நகரத்தார் வழக்கம்.
அதுதான் நகரத்தார் வெற்றிக்கான அடிப்படை முழக்கம்.
அன்று முதல் இன்றுவரை
என்றும் நின்று நிலைத்திருக்கும் நகரத்தார் பெருமைக்கும்
இதுதான் முழுமுதற் காரணம்.

சிகரத்தார் எனவிருந்த நகரத்தார் தம்பெருமை தக்கவைக்க
அகமனதில் அனைவருமே
கொள்கையென ஒன்றைமட்டும் தவறாமல் கொள்ளவேண்டும்.
அதுதான்,
காலமுடன் இடனறிந்து காரியங்கள் செய்திட்டால்
ஞாலம் கருதினும் கைகூடும் என்கின்ற தத்துவம்
இது வெறும் வறட்டுத் தத்துவம் மட்டும் இல்லை.
சத்தியமாய் நகரத்தார் வாழ்வியல் ஞானமே இதுதான்.

சிங்கப்பூரும் இந்துக் கோவில்களும்


சாய்நிவேதிதா,
சிங்கப்பூர்.
(Grand Daughter of திரு. SP. நடராஜன், நற்சாந்துபட்டி)

சிங்கப்பூர் ஒரு சிறிய அழகிய நாடு.
வழிபாட்டுத் தலங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட நாடு.
நமக்கு வெளிநாடென்றாலும் தாய்நாட்டில் இருக்கிற உணர்வைத் தரக்கூடிய நாடு.

எங்கு பார்த்தாலும் இந்துக் கோவில்கள் நிறைந்திருக்கும் நாடு.
ஐதீக முறைப்படி கோவில் விழாக்கள் நடத்தப்படுகின்ற நாடு.
தூய்மைக்கு இலக்கணமாய்த் திகழ்கின்ற நாடு...
எல்லாவற்றுக்கும் மேலாக அமைதிப் பூங்காவாய்த் திகழும் நாடு.
அதுதான் நாங்கள் வாழும் சிங்கப்பூர். சிங்கப்பூரில் நாங்கள் வாழும் பகுதிக்குப் பெயர் ஜுரோங்க்.

இங்கே முக்கியமாகச் சொல்ல வேண்டியது என்னவென்றால் இந்து வழிபாட்டுத் தலங்கள் வழிபடுதற்கு ஏதுவாய் அருகருகே அமைந்து இருக்கின்றன என்பதுதான். சிங்கப்பூரில் இருக்கிற கோவில்களைப் பற்றிய பட்டியல் பின்வருமாறு:

கோவிலில் குடிகொண்டிருக்கும் தெய்வம்	**இருக்குமிடம்**
1. ஸ்ரீ சிவதுர்கா கோவில்	பொதோங் பாசிர்
2. ஸ்ரீ மன்மத காருனீஸ்வரர் கோவில்	கல்லாங்
3. ஸ்ரீ சிவன் கோவில்	கேலாங்
4. ஸ்ரீ வைரவிமட காளியம்மன் கோவில்	தோப்பாயோ
5. ஸ்ரீ முனீஸ்வரர் கோவில்	காமன்வெல்த்
6. ஸ்ரீ ருத்ர காளியம்மன் கோவில்	புகிட் மேரா
7. ஸ்ரீ சிவகிருஷ்ணா கோவில்	மார்சீலிங்
8. ஸ்ரீ மகாமாரியம்மன் கோவில்	யூஷீன்



UMA TRADERS

RAMESH CHIDAMBARAM

MANAGING DIRECTOR

0421-4331220

0421-4326220

MOB: 9843178125

Email: umatraders.tpr@gmail.com

NO: 441 P.N. ROAD
TIRUPUR - 641602

www.npnagarathar.com

9. ஸ்ரீ புனிதமரம் பாலசுப்ரமண்யர் கோவில்	யூஷீன்
10. ஸ்ரீ தர்ம முனீஸ்வரன் கோவில்	சிராங்கூன்
11. ஸ்ரீ ராமர் கோவில்	சாங்கி
12. ஸ்ரீ செண்பகவிநாயகர் கோவில்	தஞ்சோங் காட்டோங்
13. ஸ்ரீ அரசகேசரி சிவன் கோவில்	சுங்கை கடட்அவென்யூ
14. ஸ்ரீ முருகன் திருக்குன்றம் கோவில்	புகிட் தீமா
15. ஸ்ரீ கிருஷ்ணர் கோவில்	வாட்டர்லூ சாலை
16. ஸ்ரீ ஞானமுனீஷ்வரர் கோவில்	செங்காங்
17. ஸ்ரீ முருகன் கோவில்	ஜுரோங்
18. ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோவில்	சிராங்கூன் சாலை
19. ஸ்ரீ பெருமாள் கோவில்	சிராங்கூன் சாலை
20. ஸ்ரீ வடபத்ரகாளியம்மன் கோவில்	சிராங்கூன் சாலை
21. ஸ்ரீ மாரியம்மன் கோவில்	சீனாடவுன்,சவுத்பிரிட்ஜ்
22. ஸ்ரீ தண்டாயுதபாணி முருகன் கோவில்	டாங்க் ரோடு

பெரும்பாலும் மேலே சொன்ன கோவில்களில் பல, மிகவும் புராதனமானவை. இதன் காரணமாக, எல்லாக் கோவில்களுக்கும் தவறாமல் சென்று வரும் பழக்கத்தை நாங்கள் கடைப்பிடித்து வருகிறோம். கோவில்களில் செய்கிற வழிபாடு எங்களுக்கு நேர்மறை சிந்தனைகளைக் கொடுப்பதுடன் அல்லாமல் தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒருவிதமான உணர்வையும் அள்ளித் தருகிறது. தாய்நாட்டை விட்டு வெகுதூரம் விலகி இருக்கிறோம் என்கின்ற எண்ணம் எங்களுக்கு ஏற்படுவதில்லை. வசிக்கின்ற வீடுகளுக்கு மிக அருகாமையிலேயே கோவில்கள் அமைந்திருக்கும் காரணத்தால் நினைத்த கோவில்களுக்கு நினைத்த மாத்திரத்தில் எங்களால் செல்ல முடியும் என்பது இறைவன் அளித்திட்ட பேறு.

www.npnagarathar.com



5, West Marret Street, Madurai - 1.
(Near Periyar Bus Stand)

0452 - 438 0000, 98421 23437

reservations@madurairesidency.com

MADURAIS PREMIUM HOTEL

The
Madurai Residency
Your Residence at Madurai...

நகரத்தார் லாக்கர் டிவிசன்

மு.ப.வள்ளியப்பன், தலைவர்,
நகரத்தார் லாக்கர் டிவிசன், நற்சாந்துபட்டி

நமது நகரில் நகரத்தார்களுக்காக உருவாக்கப்பட்ட சேவை அமைப்புகளில் மிகச் சிறப்பு வாய்ந்தது 'நகரத்தார் லாக்கர் டிவிசன்'. சமுதாயப் பார்வையை முன்னெடுத்து அன்றைய நம் மூத்தோர்களின் சிந்தனையில் உருவானதுதான் இந்தத் திட்டம். கடந்த நூற்றாண்டின் இறுதி வாக்கில், பெரும்பாலான நம் நகரத்தார் ஊர்களில் வீடுகள் உடைக்கப்பட்டுக் களவுகள் நடந்தன. நகரத்தார் குடும்பங்களின் வாழ்நாள் சேமிப்புகள் இப்படிப் பாதுகாப்பின்றிக் களவுபோக, அதற்கான வழிவகைகளைக் காணவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு நம்மவர்கள்ஆட்பட்டார்கள். அதன் தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்று தான் வெளியாட்களை வைத்து ஊரில் இரவு நேரக்காவலுக்கு ஏற்பாடு செய்ததும். அதனாலும் எதிர்பார்த்த எந்தப் பலனும் கிடைக்காத நிலையில், மாற்றுவழி என்ன என்று யோசிக்கத் தொடங்கியதன் விளைவுதான் இந்தப் பாதுகாப்புப் பெட்டக வசதியினை வங்கிகளுக்கு இணையாக ஊரில் நிறுவி நடத்துதல் என்கிற எண்ணத்தின் மெய்ப்பாடு. பாதுகாப்புப் பெட்டக வசதி சம்பந்தப்பட்ட வழிமுறைகள், விதிமுறைகள், கருத்துப் பரிமாற்றங்கள் போன்றவை கற்றறிந்தோர், வங்கியாளர்கள், ஒருமித்த ஊர்நலனில் அக்கறை உள்ள உணர்வாளர்கள் மத்தியில் மார்ச் 2002 ம் ஆண்டு வாக்கில் விவாதிக்கப்பட்டு பாதுகாப்புப் பெட்டக வசதியினை ஊர் நன்மைக்காக நிறுவுதல் அவசியம் என்ற கருத்து வலுப்பெற்றது. அன்றைய காலக்கட்டத்தில் இந்தப் பெருமுயற்சிக்கு உறுதுணையாயிருந்து வடிவமைத்திடக் காரணமாயிருந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திரு. பெரி. ராம. ராமனாதன் செட்டியார், சி. லெட்சுமணன் செட்டியார் மற்றும் அரு.மு. நாகராஜன் செட்டியார் போன்றவர்கள்.

தொடர்ச்சியாக, நமது நகரத்தார் சங்கத்தின் இசைவு பெற்றபின் நமது பாதுகாப்புப் பெட்டக வசதிக்கான முதல் கட்டிடம் வங்கிகளுக்கு இணையான முறையில் 3.98 லட்சம் முதலீட்டில் 2002ல் கட்டப்பட்டது. அதன் வாயிலாக, 416 பெட்டகங்கள் அமைக்கப் பட்டு நகரப் பெருமக்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும், சேவைகள் வழங்கப்பட்டன.

இதுவும் மாவட்டப் பதிவாளரின் 12.03.2002 ஆணை எண் 23/2002ன் படி முறையே தோற்றுவிக்கப்பட்டது.

பின்னர், முதல் தொகுதி கட்டிடத்தில் இருந்த பாதுகாப்புப் பெட்டகங்கள் போதுமானதாக இல்லாமையால், கட்டிடம் ஆகஸ்ட் மாதம் 2008ல்

8.26 லட்சம் செலவில் விரிவாக்கம் செய்யப்பட்டு 489 பாதுகாப்பு பெட்டகங்கள் அமைக்கப்பட்டன. தொடர்ந்து 2012ல் பாதுகாப்பு அம்சங்கள் சம்மந்தப்பட்ட 24 மணி நேரமும் இயங்கும் கண்காணிப்பு காமிராக்கள், எச்சரிக்கை மணிகள் போன்ற அனைத்தும் பொருத்தப்பட்டன. தேவைகள் மேலும் மேலும் அதிகரித்ததால் 10.01. 2018ல் மூன்றாவது கட்டிடம் 15.77 லட்சம் செலவில் கட்டப்பட்டு 272 பாதுகாப்புப் பெட்டகங்கள் அமைக்கப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டன. தீ விபத்துக்களை கண்டறிந்து ஒலி எழுப்பும் Fire alarm 2019ல் நிறுவப்பட்டது.

வங்கிகள் போலல்லாமல் ஆண்டுக்கு 6 நாட்கள் மட்டுமே விடுமுறைவிடப்பட்டு நமது லாக்கர்டிவிசன் இயங்கிவருதல் கூடுதல் சிறப்பு. வங்கிகள் போலவே படிவங்கள் மற்றும் நடைமுறைகள் கணிணிமயமாக்கப்பட்டு செயல்பாட்டில் இருப்பதால் தவறுகள் ஏற்படாவண்ணம், மக்களின் நம்பிக்கைக்கு உகந்த நிறுவனமாக நமது ஊர் லாக்கர்டிவிசன் இயங்கி வருதல் குறிப்பிடத்தக்கது.

இதைத் தொடர்ந்து நடத்திச் செல்ல ஏதுவாக, உறுப்பினர்களால் ஈராண்டுக்கு ஒருமுறை தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் ஐந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். இவர்களுடன், வருடாந்திரம் தேர்வு செய்யப்படும் நகரத்தார் சங்கத்தலைவர் மற்றும் பொருளாளரும் இணைந்து லாக்கர் நிர்வாகத்தை நடத்திச் செல்கின்றனர். ஓவ்வொரு காலாண்டும் செயற்குழு கூடிவிவாதித்து எடுக்கப்படுகிற முடிவுகள் பின்பு வருடம் ஒருமுறை நடக்கும் பொதுக்குழுவில் அங்கீகரிக்கப் படுகின்றன.

இதில் இன்னுமொரு சிறப்பு என்னவென்றால், பாதுகாப்பு பெட்டக சேவை வாடிக்கையாளர்களுக்கு வாடகை ஏதும் நிர்ணயம் செய்யப் படுவதில்லை.
கட்டிடப் பராமரிப்பு செலவுகள், பாதுகாப்புப் பெட்டகங்கள் மற்றும் தளவாடங்கள், பணியாளர் சம்பளம் மற்றும் இதர நிர்வாகச் செலவுகள் யாவுமே வாடிக்கையாளர்களின் முன்பணத்தை முதலீடு செய்ததன் மூலம் கிடைக்கிற வருமானத்தில் இருந்தே எதிர்கொள்ளப்படுகின்றன.

தற்போதைய நடப்பு நிர்வாகப் பொறுப்பில் (2018 – 2021) இருப்பவர்கள்:

தலைவர் : திரு. முப. வள்ளியப்பன் அவர்கள்
செயலாளர் : திரு. KL. பழனியப்பன் அவர்கள்
பொருளாளர் : திரு. LM. கோபால் அவர்கள்

நகரத்தார் பெருமக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்ட நமது ஊர் லாக்கர் டிவிசன் மக்கள் சேவையை முன்னிறுத்தி இனிவரும் காலங்களில் மேலும் மேலும் சிறப்புடன் செயல்பட்டு சாதனைகள் பல நிகழ்த்தும் என்பது கண் கூடு.

நடுவு நிலைமை

வீர. வினோத்குமார்
நற்சாந்துபட்டி

“அச்சமும் ஆர்வமும் அவலமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன்கோலன்ன செம்மைத்தாகிச்
சிறந்த கொள்கை அறங்கூறவையம்“

(மதுரைக் காஞ்சி)

நீதி சொல்லும் பொறுப்பிலே இருக்கிற நீதிபதிகள், எதற்காகவும் அச்சப்படாமல், ஓரேயடியான ஆர்வத்தையும் காட்டாமல், அவலம் இல்லாமல் இருத்தல் வேண்டும். ஆத்திரப்பட்டு முடிவெடுக்காமல், அளவுக்கதிகமாக உவகையும் காட்டாமல், சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் நடுவு நிலைமை தவறாமல் இருக்கிற அறம் போற்றும் நீதிமான்கள் தீர்ப்புச் சொல்கிற இடந்தான் தமிழ் இலக்கணம் காட்டும் அறங்கூறவையம்.

இச்சகத்திலோரெலாம் எதிர்த்து நின்ற போதிலும் அச்சம் சிறிதும் இல்லாமல் தீர்ப்புச் சொல்கிற தைரியசாலி, நேர்மையற்றவர்களுக்கு உற்ற துணையாய் இராமல் தீர்ப்புச் சொல்கிற நடுநிலையாளன், அருவருக்கத் தக்க விதமாய் தீர்ப்புக்களைத் தராத நேர்மையாளன், செற்றம் எனப்படும் கோபத்தைத் துணைக் கொண்டு தாறுமாறாய்த் தீர்ப்புக்களைச் சொல்லாத அமைதியாளன், அளவுக்கதிகமான உவகையால் உந்தப்பட்டு தீர்ப்புகளை மாற்றிச் சொல்லாத பண்பாளன்.


இப்படி அத்தனையும் ஒருங்கேபெற்று நடுவு நிலைமை தவறாத கொள்கையாளராய் இருக்கிறவர்தான் உண்மையான நீதிபதி. இதுதான் சங்கத் தமிழ் வரையறுத்த நீதிபதிகளுக்கான இலக்கணம்.

இதனை விளக்க ஒரு சிறு குட்டிகதை இங்கே:

இடைவிடாது அடைமழை கொட்டுகின்ற ஓர் அதிகாலை நேரம். குஞ்சுகளுடன் பத்திரமாய் இருக்கிறது குருவியொன்று தன் கூட்டோரம். குரங்கொன்று ஒதுங்க வழியின்றி நனைந்து தடுமாறியதும் அதேநேரம். முழுதும் நனைந்து விட்டதால் அதன் உடம்பெங்கும் சொட்டச் சொட்ட ஈரம்.

“நாங்கள் கட்டிய எங்கள் கூட்டிலே பாதுகாப்பாய் இருக்கிற மாதிரி,
தாங்களும் ஓரு சரியான இடம் தேடிக் கொண்டால் அங்குமிங்கும் மழையில் இப்படி நனைந்து அலைந்து திரிகின்ற நிலை வாராதல்லவா”

இதுதான் குரங்கின் நிலை பார்த்து வருத்தப்பட்ட




Corporate Office & Residence

Aanandhaam,
28, Thirunagar Colony.
4th Street, Near VOC Park,
Erode - 638003
Ph. No: 0424 2211454
Mobile : 92446 44122/98947 60099
Email : sivaanandham@gmail.com
sivasocku@gmail.com

Kalasa -577124
Chikmangalur District,
Karnataka

kalasaestate@gmail.com
kalasaacoffee@gmail.com



N.S.S.SIVASUBRAMANIAM
Managing Partner

President : Nattukottai Nagarathar Sangam, (from 2002) Erode-638001

President : Nagarathar Safe Vault, Kandavarayan Patti-630203 Sivagangai Dist.

Founder : Karpaga Vinayagar Erode Trust Erode-638001

குருவியின் ஆறுதலான வார்த்தை.
குரங்குக்குக் குருவி புத்தி சொன்னது சுத்தமாய்ப் பிடிக்கவில்லை.
“ஆணவம் பிடித்த அற்பக் குருவிக்கு புகட்டவேண்டும் சரியான புத்தி.
வானரம் நினைத்தால் என்னவெல்லாம் சேட்டை செய்யும் எனக் காட்டுதலிலே தான் அடங்கியிருக்கிறது நம் சக்தி.
பெரிய விலங்காகிய நமக்கு விளங்க வைக்க குருவிக்கென்ன தகுதி.
அது நமக்குப் புத்தி சொன்னது அதன் தகுதிக்கு மிகுதி”
இப்படி எண்ணிய குரங்கின் கோபம் தலைக்கேறிய காரணத்தினால், ஆத்திரத்தில் அறிவிழந்து போய்க் கிடந்த குரங்கினால் எதையும் யோசிக்க முடியவில்லை.
ஆக கோபத்தினால் மொத்தத்தில் குரங்கு இழந்தது நிதானம்.
குருவியின் கூட்டைக் கன்னாபின்னாவென்று பிய்த்தெறிந்து சின்னாபின்னமாக்கிய பின்னால்தான் ஒருவழியாய்க் குரங்கு தனக்குள் ஆயிற்று சமாதானம்.
அதே சமயம் நல்லது நினைத்த குருவிக்கோ நடந்தது தொல்லை.
குரங்கின் சேட்டையால் கூட்டை இழந்து அது அடைந்த துயருக்கோ எல்லையே இல்லை.
அடுத்த நாள்
கூட்டைப் பிய்த்தெறிந்த குரங்குக்கு எதிராய்,
சேட்டை செய்த குரங்கை எதிர்க்கும் விதமாய்
நீதிமானிடம் சென்று குருவி கொடுத்தது பிராது. தொடுத்தது வழக்கு.
நீதித்தலம் வரச் சொல்லி குரங்குக்குச் சென்றது நீதிமான் உத்தரவு.
வந்து சேர்ந்த குரங்கும் சும்மா வரவில்லை.
பலாப்பழம் ஒன்றைச் சுமந்தபடி வந்து அதை நீதிமான் அறியா வண்ணம் தெரியாமல் வைத்தது அவர்தம் முதுகின் பின்புறம்.
வைத்துவிட்டு முன்னால் வந்து கைகட்டி பவ்யமாய் நின்றது.
ஆரம்பமாயிற்று நீதிமான் விசாரணை
அதில் குருவிக்குக் கிடைக்குமா ஏதேனும் அனுசரணை?
குரங்கை நோக்கிய நீதிமான்,
“உனக்கெதற்கு அத்தனை சேட்டை.
எதற்காய்ப் பிய்த்தெறிந்தாய் குருவியின் கூட்டை?
குருவி உருவத்தில் மிகச் சிறிய பறவை.
ஆனால் உள்ளத்தின் உயர்வில் அது மிக மிகப் பெரிய பறவை.
அது உனக்குச் சொன்னது வழிகாட்டும் அறிவுரை.
அதற்கு நீ பதிலுக்குச் செய்ததோ இழிவூட்டும் பழிச்செயல்.
உன்னை என்ன செய்யலாம்? நீயே சொல்? என்றது
அதற்கு குரங்கு,
“ மகாராஜாவே,

www.npnagarathar.com

அடியேன் மீது தாங்கள் காட்டக்கூடாது வஞ்சம்.
குருவிக்கு மனதாரக் கெடுதல் நினைக்கவில்லை என் நெஞ்சம்.
முன்பின் பார்த்துப் பின்னால் தீர்ப்பைச் சொல்லுங்கள் கொஞ்சம்“
என்று பயபக்தியுடன் இயம்பியதும்,
பின்புறம் திரும்பிப் பார்த்த நீதிமான் கண்களில் தெரிந்தது
அது விரும்பி உண்ணும் பலாப்பழம்.
பார்த்ததும் நீதிமான் முகத்தில் பரவியது பரவசக் களை.
வேர்த்தது நீதிமானின் மூக்கு. அது பழத்தின் வாசனையால் வந்த நிலை.
ஈர்த்தது குரங்கின் அடக்க ஒடுக்கமான நடிப்பு விரித்த வலை.
உடனே குருவியை நோக்கிய நீதிமான்,
“ஏ குருவி, எவ்வளவு சிறிய அற்பப் பறவை நீ
அவ்வளவு பெரிய மிருகத்துக்கு அறிவுரை சொல்ல உனக்கென்ன தகுதி? எல்லாக் குற்றங்களுக்கும் உன் பேச்சுதான் மூல காரணம்.
நீ இத்தனை கர்வம் படைத்ததற்கும், குரங்கு உன் கூட்டைப் பிய்த்ததற்கும் சரிக்கு சரியாய்ப் போய்விட்டது.
உடனே இந்த இடத்தை விட்டு ஓடிப்போய் விட்டால் நல்லது உனக்கு
என்று குருவியை விரட்டி நீதிமான் முடித்தது தன் ஓரவஞ்சக் கணக்கு.
இங்கே நடந்தது என்ன?
இந்தக் குட்டிக் கதை சொல்ல வரும் நீதியென்ன?
இங்கே உண்மையான கோரிக்கை வன்மையாகக் கண்டிக்கப்பட்டது.
நியாயமான கோரிக்கை அநியாயத் தீர்ப்பால் அடக்கப்பட்டது.
ஏழை சொல் அம்பலம் ஏறிய பின்னாலும் ஓடுக்கப்பட்டது.
லஞ்சம் பெற்றவன் வஞ்சகம் செய்யலாம் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.
எளியாரை வலியார் எதுவும் செய்யலாம் என்பது தெரியப்படுத்தப்பட்டது.
இப்படி எளியாரை வலியார் மிதிக்கிற நிலை வந்தால் அது என்ன நாடா?
இல்லை கடும் புலிகள் வாழும் காடா?
எந்த நாட்டிலும் இருக்கக்கூடாதது இருக்கிறவன் இல்லாதவன் என்கிற பாகுபாடு.
இருதரப்புக்கும் இடையே சட்டத்தில் இல்லை வேறுபாடு.
ஏழைக்கொரு சட்டம் பணக்காரனுக்கு ஒரு சட்டம் என்று தனித்தனியே சட்டத்தில் இல்லை மாறுபாடு.
கோரிக்கைகளின் உண்மைத் தன்மையை நீதிமான் சரியாக அமல்படுத்தவில்லை என்பதுதான் இங்கே விவகாரம்.
காரணம் தவறாய்ப் பயன்படுத்தப்பட்ட நீதிமானின் அதிகாரம்.
நேர்மையற்ற தீர்ப்பால் இங்கே நீதி தடம் புரண்டது கண்டோம்.
நேர்மையாய்த் தீர்ப்புகள் எழுதப்பட்டால் அதுதான் பணநாயகத்துக்கு மாற்றான உண்மைச் சனநாயகம்.

இராமநாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளி

வள்ளல் குமரப்பர் வளாகம், நச்சாந்துபட்டி.

பள்ளி வரலாறு

"நெற்கதிர்கள் வயலில் ஒருபுறம் நிமிர்ந்து நிற்க
நற்கனி மரங்கள் ஒருபுறம் உயர்ந்து நிற்க
கிழக்கில் இடுக்கு மலை ஒரு புறம் வரவேற்க
உலகைக் காக்கும் சிதம்பரேஸ்வரர் ஒருபுறம் நின்று காக்க
அழகிய நல்லூராம் நற்சாந்துபட்டி"

தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும் குறள்

அரிதான பிறவி மனிதப்பிறவி. இப்பிறவியில் வாழ்வாங்கு வாழ்ந்து புகழ் பெற்றோர் பலராவர். அவ்வழியில் பெருமதிப்புடையவர் குமரப்பர். தான் பிறந்த ஊரினிலே தரமான கல்விக்கு வித்திட்டவர் திரு.கு.இராம.கும.குமரப்பச்செட்டியார் அவர்கள். தம் அருமைத் தந்தையார் திரு.இராமநாதன் செட்டியார் அவர்கள் நிலையான அறவினை ஒன்றைச் செய்ய வேண்டுமென்று நெடு நாட்களாக எண்ணி வந்ததைச் செயலாக்குவது குறித்து சிந்தித்த வண்ணம் இருந்தார்கள்.

பின்னர் திரு.குமரப்பச்செட்டியார்அவர்கள், நற்சாந்துபட்டியில் அப்பகுதியினர் பயன்பெறும் வகையில் பள்ளிக் கூடம் கட்டுவது தம் தந்தையின் கனவை நனவாக்குவதாக அமையும் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

முதன் முதலில் நிதி வைப்பீடாக ரூ.15,000/ தந்து கல்வித் துறையின் இசைவு ஆணையினைப் பெற்றார்கள். 11.06.1954 அன்று புதுக்கோட்டைத் துணை ஆட்சியாளர் திரு.எஸ்.பி.சீனிவாசன் எம்.ஏ. ஐ.ஏ.எஸ் அவர்கள் திறந்து வைக்க இராமநாதன் செட்டியார் நடுநிலைப்பள்ளியாக மலர்ந்தது. அப்போது பள்ளியில் 6 ஆசிரியர்களும் 119 மாணவர்களும் இருந்தனர். பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்த தாளாளர் திரு.கு.ராம.கும.குமரப்பச்செட்டியார் அவர்கள் எண்ணங் கொண்டு ரூ.40,000/ மதிப்புள்ள நிலத்தை அறக்கட்டளையாக வழங்கியும் ரூ.15,000/ நிதி வைப்பீடாக ஏற்படுத்தியும் 1956 ஆம் ஆண்டு 9ஆம் வகுப்பு தொடங்கப்பட்டது. தொடர்ந்து அடுத்தடுத்து உயர் வகுப்புகள் தொடங்கப் பெற்று 1958–59 ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளியாக உயர்ந்தது. அப்போது 21 ஆசிரியர்களையும், 460 மாணவர்களையும் கொண்டு உயர்நிலைப் பள்ளியாக மிளிர்ந்தது.
